

கல்கி
KALKI
23-5-1965
35 காசு


ESP
AFGHAN SNOW
AFGHAN
Cream Cake

கல்கி
பொருளடக்கம்

விசுவாவசு, வைகாசி 10 — மே 23




எதிர் காலத்தில் இப்படியும் நடக்கும்!
அந்நியக் கடன்கள்
தொழிலாளர்
ஏற்றுமதி உயர்வுக்காக
அடிமைத் தொழில்
"நான் கையாண்ட வழி"
PK



மலர் 24 ○ இதழ் 43

நன்றி மறப்பது நன்றன்று!

சர்வதேச அரசியலை அறிகிற திறமை சிலருக்குத்தான் இருக்கக்கூடும்; எனினும், நமக்கு உதவி புரிகிறவர்களிடம் நன்றியுடன் இருக்க வேண்டுமென்பது உலகிலுள்ள மக்களனைவரும் அறிந்த சாதாரண தருமம். இந்தத் தருமத்தைக் கூடச் சில காங்கிரஸ் தலைவர்கள் கைவிட்டிருப்பது துரதிர்ஷ்டம்.

'நடு நிலைமைக் கொள்கை', 'தடஸ்த திட்டம்' என்ற பெயர்களைச் சொல்லிக்கொண்டே நம் நாடு அமெரிக்காவுடன் சிறுகச் சிறுகப் பேதமுற்று, கம்யூனிஸ ருஷியாவைச் சார்ந்திருப்பதற்குச் சில காங்கிரஸ் தலைவர்கள் வழி செய்து வருகிறார்கள். இது தேசத்துக்குப் பேராபத்தாக முடியும் என்று எடுத்துக் காட்டுபவர்களைச் 'சுயநலக் கும்பல்' என்றும், 'முதலாளித்துவ தாஸர்கள்' என்றும் வர்ணிக்கிறார்கள். இவர்கள் தற்போது அமெரிக்காவைக் கண்டிப்பதற்கு முக்கியமான காரணம் கட்ச் பகுதியில் பாகிஸ்தான் செய்துள்ள ஊடுருவலைப் பகிரங்கமான ஆக்கிரமிப்பு என்று அமெரிக்கா கூறாததுதான். இச்சமயத்தில்,

> **தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்**
> **என்குற்றம் ஆகும் இறைக்கு ?**

என்ற பொய்யா மொழியை நினைவூட்ட விரும்புகிறோம். இந்திய சர்க்கார் அந்நியக் கொள்கையில் செய்துள்ள தவறுகளை எல்லாம் மறந்து, பிறர் செயலில்மட்டும் குற்றம் கண்டு பிடிப்பது அபத்தமாகும். நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து நடைபெற்ற உலக விவகாரங்களைக் கவனித்தால் இந்தியா எந்த நெருக்கடி நிலையிலும் மேல் நாட்டு வல்லரசுகளுக்கு ஆதரவாக இருந்ததில்லை என்பதைக் காண்கிறோம். அந்த வல்லரசுகள் தவறு புரிந்ததாக இந்திய சர்க்கார் கருதினால் அட்சதை போட்டுக் கொண்டு அவற்றைக் கண்டித்திருப்பதையும் பார்க்கிறோம். ஆனால் ருஷியாவின் விஷயத்தில் இந்த 'தர்மஸம்ஸ்தாபன' நோக்கத்தை இந்தியா வெளிப்படுத்தியதில்லை. இதை ஃபிலிப் ஸ்ப்ராட் அவர்கள் சமீபத்து 'மைஇந்தியா' இதழொன்றில் தெளிவாக விளக்கியுள்ளார். வட வியட்நாமின் கம்யூனிஸ கொரில்லாக்கள் கடந்த எட்டாண்டுகளாகத் தென் வியட்நாமில் ஆக்கிரமிப்பு நிகழ்த்தி வரும் போதிலும் இந்தியா அதைக் காணாதது போலவே இருந்திருக்கிறது. ஆனால், ஜான்ஸன் அவர்கள் எதிர் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியவுடன் நம் பிரதமர் 'சாந்தி, சமாதானம்' என்றெல்லாம் உபதேசிக்கத் தொடங்கி யிருக்கிறார். கம்யூனிஸ கொரில்லாக்கள் சாமானிய மக்கள் போன்ற மாறு வேடத்தில் தென் வியட்நாமுக்குள் புகுந்து ஏதுமறியா மக்களைக் கொன்று குவித்ததைப் பற்றி மூச்சுக்கூட விடாத பாரத சர்க்கார், அமெரிக்கா கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்தவுடன், "ஐயோ, மானுட நாகரிகமே நாசமாய் விட்டது" என்று கூக்குரலிட்டது. இதே போல், மலேஷியாவின் மீது கம்யூனிஸச் சார்புடைய இந்தோனேஷியா துராக்கிரகம் செய்திருப்பதையும் ஒப்புக்கொள்ள இந்திய சர்க்காருக்கு மனமில்லை. நமது சர்க்கார் இவ்வாறு கம்யூனிஸ ஆக்கிரமிப்புகளைக் கண்டும் காணாதது போலிருக்கும் போது அமெரிக்கா மட்டும்

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி — பாப்பா
பாரதியார்

அதனுடன் திட்டமான ஒரு ராணுவக் கூட்டு பெற்றுள்ள பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பை வெளிப்படையாகவும் பலமாகவும் கண்டிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது பொருந்தாது.

'பாகிஸ்தான் உபயோகித்த போர்க் கருவிகளில் அமெரிக்கா அளித்த உபகரணங்களும் இருந்தன' என்பது உண்மை. அதைப் பெரிதுபடுத்துவதில் என்ன லாபம்? இது கோர்ட்டு வியாஜ்யமல்ல. பாதுகாப்பு விஷயத்தைக் கவனிக்கவேண்டுமே ஒழிய பாகிஸ்தான் தவறு செய்து விட்டது என்று தீர்ப்புப் பெறுவது மட்டும் போதாது.

அமெரிக்கா நமது பொருளாதார வளர்ச்சிக்காகச் செய்து வரும் உதவிகளை மறந்து அதனைக் கண்டிப்பது நன்றி மறந்த குற்றத்தையே சேரும். தினந்தோறும் கப்பல் கப்பலாக உணவு தானியம் அனுப்பி நம் மக்களின் பசி தீர்த்து வரும் நாடு அமெரிக்கா. இரண்டு ஆண்டுகளுக்கு முன் சீனாவின் கடும் ஆக்கிரமிப்பு நிகழ்ந்தபோது, உடுக்கையிழந்தவன் கைபோல் அமெரிக்கா நமது இடுக்கண் களைந்ததை ஸ்ரீமதி இந்திரா காந்தி அவர்கள் ஒப்புக்கொள்ள விரும்பாவிட்டாலும் நாடு இந்தப் பேருதவியை மறக்கவில்லை. அப்போது ருஷியா, 'இந்தியா நமது நண்பன்; ஆனால் சீனாவோ நமது சகோதரன்' என்று கூறியதையும் நாடு மறந்துவிட வில்லை.

அமெரிக்காவுடன் மேலும் நெருக்கமான இணைப்பு பெற வேண்டிய சந்தர்ப்பத்தில் அந்நாட்டைக் கண்டிக்க முற்படுவது மடமை. நம் உதவியில்லாவிடில் அமெரிக்காவால் கம்யூனிஸ எதிர்ப்புப் பணியைச் சிறப்பாக நடத்த முடியாது என்று கொக்கரிப்பது பேதைமை. 'தென்கிழக்கு ஆசியாவில் பரவி வரும் கம்யூனிஸத்தைத் தடுக்க முற்பட்டுள்ள அமெரிக்காவுக்கு இந்தியாவின் உதவி அத்தியாவசியம் என்பதை ஜனாதிபதி ஜான்ஸன் மறந்து விடக் கூடாது' என்று காங்கிரஸ் பத்திரிகைகள் எழுதுகின்றன. தென்கிழக்கு ஆசியாவில் ஏற்பட்டு வரும் கம்யூனிஸப் பரவலினால் அமெரிக்காவைவிட இந்தியாவுக்கே பெரிய ஆபத்து என்பதை மறந்து இப்படி எழுதி வருகிறார்கள். தெற்கு வியட்நாம், கம்யூனிஸ்ட்கள் முன் வீழ்ந்தால் லாவோஸ், கம்போடியா இவையும் தொடர்ந்து அடிபணியும். இந்து மகா சமுத்திரத்தில் சீனாவுக்கு விசேஷ ஆதிக்கம் கிட்டிவிடும். இந்தியாவுக்கு உதவியாக எந்தக் கப்பற்படையும் வருவதை இது தடை செய்துவிடும். இந்த ஆபத்துக்களை ஜெர்மானியப் பத்திரிகைகள் கூட உணர்ந்து நம்மை எச்சரிக்கின்றன. ஆனால் நம்மவரோ இது அமெரிக்காவின் பிரச்னை என எண்ணுகின்றனர். கம்யூனிஸப் பரவலினால் அமெரிக்காவின் அந்தஸ்துக்கு மட்டுமே ஹானி; ஆனால் கம்யூனிஸம் பரவுவதால் நம் நாட்டின் சுதந்திரமே சின்னாபின்னமாகிவிடும். மேலும், ஜான்ஸன் அவர்கள் யார் உதவி கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் முன் வைத்த காலைப் பின் வைக்கப் போவதில்லை என்று தீர்மானமாகக் கூறிவிட்டார். எனவே, நமது உதவி புரியும் சக்தியைக் காட்டி அமெரிக்காவை மிரட்டுவது சிறுபிள்ளைத்தனம்.

அமெரிக்க நட்பை நாடுபவர்களுக்குச் சுயநல நோக்கங்களைக் கற்பிப்பது மகா பாபமாகும். தாங்கள் சொல்வது மட்டுமே தேச நலனுக்கு உகந்தது என்றும், மற்றவர்களின் கருத்துக்கள் சுயநலத்தில் பிறந்தவை என்றும் காங்கிரஸ் தலைவர்கள் கூறுவது சிறிதும் பொறுப்பற்ற பேச்சாகும். அமெரிக்காவுடன் சுமார் நாற்பது நாடுகள் பற்பல ஒப்பந்தங்களின் கீழ் ராணுவக் கூட்டுச் சேர்ந்துள்ளன. அவற்றின் சுதந்திரத்துக்கு இது வரை அமெரிக்காவால் எந்தத் தீமையும் ஏற்படவில்லை. மாறாக கம்யூனிஸ வல்லரசுகள் ஒரு நாட்டுக்கு உதவி செய்வதாக முன்வந்து, பின்னர் அந்த நாட்டையே விழுங்குவதைப் பலமுறை கண்டிருக்கிறோம். இந்நிலையில் ருஷியாவின் ராணுவ உதவியுடன் சீனாவை வெல்ல எண்ணுவது வடிகட்டின முட்டாள்தனம். ருஷியாவின் உதவியுடன் கம்யூனிஸமும் பலமாக உட்புகும் என்பதை மறக்கலாகாது. ருஷியாவின் பூர்வ சரித்திரத்தை நன்கு அறிந்துள்ள அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளதுபோல், கம்யூனிஸ தளவாடங்களுடன் அவற்றை இயக்கவும் அந்நாட்டிலிருந்தே நிபுணர்களும் வீரர்களும் வருவார்கள்; தங்களுடைய ஆயுத சூட்சமங்களை அவர்கள் நம் ராணுவத்துக்கு ஒரு போதும் விளக்கமாட்டார்கள்; ஆபத்துக் காலத்தில் நாமாக அந்த ஆயுதங்களை இயக்க முடியாமல் ருஷியா விதிக்கக் கூடிய நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டாக வேண்டியிருக்கும். அறுபது ஆண்டுகளுக்கு முன் ருஷியாவுக்கும் ஜப்பானுக்கும் நடந்த பெரிய யுத்தத்தில் ருஷியாவுக்கு மற்ற மேல் நாடுகள் விற்றிருந்த ஆயுதங்கள் கொஞ்சமும் பயன்படாமல் போனதே ருஷியாவின் கடல் யுத்தத் தோல்விக்குக் காரணம் என்பது சரித்திரத்தில் பதியப்பட்டிருக்கிறது. அதுபோல் மீண்டும் நடக்கவிடலாமா?

இதை யெல்லாம் ஆட்சி பீடத்தில் உள்ளவர்கள் உணர்ந்து அறிவு பெற வேண்டும். சுதந்திரக் கட்சியை எதிர்ப்பதாக நினைத்துக் கொண்டு, தேசத்தை நம்பிக்கைக்குரிய நண்பனிடமிருந்து விலக்கி அபாயகரமான கைகளில் சேர்த்து விடலாகாது.

இப்போது நமது பெரும் எதிரி சீனா. பாகிஸ்தானின் வாலாட்டத்துக்கும் சீனா தான் காரணம். இந்தோனேஷியாவைக் கையில் போட்டுக் கொண்டு ஆட்டுவது போல் பாகிஸ்தானையும் சீனாதான் ஆட்டுவிக்கிறது. 'மேற்கு வங்காளத்தில் சீன ஆதரவாளரான கம்யூனிஸ்டுகள் இருப்பதால் அப்பகுதியைத் தனது தளமாக்கிக் கொள்ள முடியும் என்று சீனா நம்புகிறது. பாகிஸ்தானுடன் உறவு பூண்டு அதன் ராணுவத்தின் கணிசமான பகுதியை மேற்குப் பாகிஸ்தானிலிருந்து வங்காளத்தை யடுத்த கிழக்குப் பாகிஸ்தானுக்கு விமான மூலம் கொண்டு சேர்க்கச் சீனா எண்ணுகிறது. இந்தியா இதில் கவனம் செலுத்தாதிருக்க வேண்டுமென்பதற்காகவே கட்சில் பாகிஸ்தானை ஏவிவிட்டுப் பாரத சர்க்காரின் கவனத்தைத் திருப்பி விட்டிருக்கிறது' என்று ராஜாஜி

எச்சரித்துள்ளார். சீனவிடமிருந்து நம்மைப் பாதுகாக்கக் கூடிய ஒரே சக்தி அமெரிக்கா தான். நன்றியையும், ராஜநீதியையும் மறந்து அமெரிக்காவை நாம் பழிப்பதும், ருஷியாவின் புறம் சாய்வதும் விபரீதத்தில்தான் முடியும்.

விசேஷமான அரசியலறிவு பெறாத சில தலைவர்கள் தவறான கொள்கைகளைக் கடைப் பிடிப்பதால் ஏற்பட்டுள்ள விளைவை இப் போது நன்கு அனுபவிக்கிறோம். உலக விவ காரங்களைக் குறித்துக் கொள்கை வகுப் பதற்குத் தேவைப்படும் நுட்பமான அரசியல் ஞானமில்லாத தலைவர்கள் முக்கியமான பிரச்னைகளைக் குழப்பும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸ் தலைவர்களைச் சூழ்ந்துள்ள அமெரிக்கத் துவேஷ மூடுபனி விலக ஆண்டவன் அருள்வானாக!

மோசப் பிரசாரம்

அரசாங்க ஊழியர்கள் சர்க்காரின் கொள்கைகளை அமுல் செய்வதற்கு மேல் எதுவும் செய்யமுடியாது. அப்படி ஏதாவது செய்கிறார்களெனில் ஆள்கிற கட்சிக்குப் பயந்து அதன் தலைவர்களுடைய இஷ்டப்படி சிலருக்குச் சலுகைகள் தருவதும், ஆள்கிற கட்சிக்காகப் பிரசாரம் செய்வதும்தான் சர்க்கார் ஊழியர்களால் முடியும். ஆனால் திரு காமராஜ் காங்கிரஸின் கொள்கைக்கு மாறாக அரசாங்க அதிகாரிகள் பணக்காரர்களுக்குப் பரிந்து ஏழைகளுக்குப் பாரபட்சம் செய்வதாகப் பேசியிருக்கிறார். இதில் உண்மை அணுவளவும் இல்லை. ஊழல்களை உத்தியோகஸ்தர்கள் மேல் தள்ளித் தாம் தப்பித்துக் கொள்வதற்காகச் செய்யும் பொய்ப் பிரசாரமே இது. சமூகத்தைப் பல கூறுகளாகச் சிதைத்து பரஸ்பர துவேஷத்தை உண்டாக்கிப் 'பிரித்தாளும்' கொள்கையை காங்கிரஸ் வெகு கலபமாகச் செய்து வருகிறது. நிலச் சொந்தக்காரர் — பயிரிடும் விவசாயி, தொழிலதிபர் — தொழிலாளர், ஹிந்தியர் — ஹிந்தி பேசாதவர் என்றெல்லாம் பேதப்படுத்தியது போதாதென்று இப்போது சர்க்கார் சிப்பந்திகள் — கட்சி மந்திரிகள் என்று ஒரு பேதத்தையும் உண்டாக்கத் திரு காமராஜ் முயல்கிறார். ஏற்கெனவே காங்கிரஸ் போக்கில் ஆடிவரும் அரசாங்கச் சிப்பந்திகள் திரு காமராஜின் சீற்றத்தைக் கண்டு இன்னும் என்னவெல்லாம் செய்யப் போகிறார்களோ? நிர்வாகத்தின் சேவை நெறியைக் குலைக்கும் திருப்பணியைத் திரு காமராஜ் செய்கிறார்.

அன்னைத் தெய்வத்துக்கு அற்புத ஆராதனை



புதுக்கோட்டையில் ஸ்ரீமத் சாந்தானந்த ஸ்வாமிகளின் நன்முயற்சியால் பொலிந்து வரும் புவனேசுவரி ஆலயத்தைப் பற்றியும், அங்கு பற்பல வேள்விகள் நடைபெற்றிருப்பதையும் நேயர்கள் அறிந்திருப்பார்கள். அவற்றுக்கெல்லாம் சிகரமாக வருகிற ஜூன் 5ந் தேதியிலிருந்து 8ந் தேதி வரை புதுக்கோட்டையில் ஸ்ரீ புவனேசுவரி மகாமந்திர கோடி யக்ஞம் நடைபெறவிருக்கிறது. நானூற்று நாற்பது வேதவித்துக்கள் ஒரே சமயத்தில் தேவி மந்திரம் கூறி அற்புத ஹோமம் செய்யப் போகிறார்கள்.

அந்நியர் ஆக்கிரமிப்பு, உணவுப் பஞ்சம் முதலியவற்றால் அவதிப்படும் தேசத்துக்கு, இம்மாதக் கடைசியில் நேரவிருக்கும் அஷ்ட கிரகச் சேர்க்கையால் மேலும் கெடுதல்கள் ஏற்படலாம் என்று கருதப்படுகிறது. இந்த ஆபத்துக்கள் நீங்கவும், நாட்டில் மட்டுமின்றி ஒவ்வொரு வீட்டிலும் சுபிட்சம் கூடவும் கோடி யக்ஞம் உதவி புரியும். அன்பர்கள் யாவரும் தங்களால் இயன்ற எல்லா உதவிகளையும் அளித்து, அன்னையின் அருளையும் ஸ்ரீமத் சாந்தானந்த ஸ்வாமிகளின் ஆசியையும் பெற்றுத் தங்களுக்கும், தாய்த்திரு நாட்டுக்கும் நன்மைகளைத் தேடிக்கொள்ள வேண்டும். யக்ஞத்தின் நிதி உதவிக்காகச் சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் இம்மாதம் 21ந் தேதியிலிருந்து ஜூன் 2ந் தேதி வரை ஆள்வார்பேட்டை வீனஸ் காலனியில் தேவி பாகவதப் பிரவசனம் நிகழ்த்துகிறார்கள். ஆஸ்திகர்கள் யாவரும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் செய்து கொண்டு தேவியின் திருப்பணியில் ஈடுபட வேணும். கோடி யக்ஞத்துக்குப் பொருள் அனுப்ப வேண்டிய விலாசம்: **ஸ்ரீ எஸ். வைத்தியநாதசாஸ்திரி, அட்வகேட், சதாசிவ பிரம்மேந்திர அதிஷ்டானக் காரியதரிசி, கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை-1**

என்ன சேதி?

புத்துயிர் பெறும் கட்சி

வன்னிய குலத்தவர் மீண்டும் தங்கள் சாதியின் பெயரால் கட்சியைத் தொடங்கியிருப்பதை மந்திரி பக்தவத்ஸலம் அவர்கள் கண்டித்திருக்கிறார். இன்றைய காங்கிரஸ்காரர்கள் சாதி பேத உணர்ச்சியற்ற சர்வ சமய சமத்துவ சன்மார்க்க சீலர்களென்று யாரும் நினைத்துவிட மாட்டார்கள். 1952க்கு முன்பிருந்த காங்கிரஸின் திறமையற்ற ஊழல் மயமான ஆட்சியின் காரணமாகவே அன்று வன்னியர்கள் தங்கள் சாதி மக்களின் நலன்களைப் பாதுகாக்க உழைப்பாளிக் கட்சியைத் திரு எஸ். எஸ். ராமசாமிப் படையாட்சியின் தலைமையில் தொடங்கினார்கள். பின்னர் ராஜாஜியின் தலைமை தமிழகத்துக்குக் கிடைத்தபோது அவரது பாரபட்சமற்ற சமத்துவக் கொள்கையில் நம்பிக்கை கொண்டு சாதி அடிப்படையில் உருவாக்கிய கட்சியைக் கலைத்தார்கள். ஆனால் ராஜாஜி மந்திரி சபையினின்று விலகிய பிறகு காங்கிரஸ்காரர்கள் ''மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது!'' என்ற கதையாக நடக்கத் தொடங்கினார்கள். காங்கிரஸ் ஆட்சியில் வன்னிய குல மக்கள் பாரபட்சங்களையும் ஏற்றத் தாழ்வுகளையும் அனுபவித்தார்கள். அதை வாய்விட்டுச் சொல்லி ஜனநாயக முறையில் போராட வேண்டும் என்று சுதந்திரக் கட்சியில் சேர்ந்து சென்ற தேர்தலில் போட்டியிட்டார்கள். அந்நிலையில் காங்கிரஸ், கொள்கையின் அடிப்படையில் போராடுவதற்குப் பதில் காங்கிரஸ் அபேட்சகரையும் வன்னிய குலத்தவராக நிறுத்திப் போட்டியிட்டது. மற்ற இடங்களிலும் சுதந்திரக் கட்சி, தி. மு. க. அபேட்சகர்களின், சாதியைப் பார்த்து அதற்கு ஈடு கொடுக்குமாறு தனது அபேட்சகரைத் தேர்வு செய்து எதிர்க்கட்சிகளின் வோட்டைப் பிரிக்கவும், பலத்தைக் குறைக்கவும் கீழ்த்தரமாக முயன்றது. காந்தியின் பெயரையும் சோஷலிஸத்தின் பெயரையும் சொல்லிக் கொண்டே காங்கிரஸ் சாதித் துவேஷத்தை வளர்த்துத் தன்னை ஆட்சியில் ஸ்திரப்படுத்திக் கொள்ளப் பார்க்கிறது. இப்படி மறைமுகமாக காங்கிரஸ் செய்வதைத் தைரியமாக வெளிப்படையாகச் செய்யலாம் என்று வன்னியகுல க்ஷத்திரியர்கள் நினைத்ததில் வியப்பு என்ன?

தமிழ் நாட்டுத் திருக்கோயில்கள்

தஞ்சை பெரிய கோவில் திருப்பணித் தொடக்கவிழாவில் பங்கெடுத்துக் கொண்ட முதன் மந்திரி பக்தவத்சலம் அவர்கள் சில உண்மைகளை எடுத்துக் கூறியிருக்கிறார். அவற்றைத் தமிழர்களாகிய நாம் அனைவரும் உய்த்துணர வேண்டும்:

''வேற்று நாடுகளிலும் செல்வச் சிறப்புள்ள கோயில்கள் இருக்கின்றன. கெய்ரோவில் நவரத்தினங்கள் இழைத்த தங்க மயமான இஸ்லாமியக் கோயிலைப் பார்த்தேன். ரோமாபுரியில் கோமகவரர்களால் கட்டப்பட்ட சிறப்பு வாய்ந்த கிறிஸ்தவக் கோயிலைக் கண்டேன். ஜெர்மனியில் கலோன் நகரில் யுத்த காலத்திலும் அழியாத ஆலயத்தை இன்னும் நன்கு பரிபாலித்து வருகிறார்கள். நம் தமிழ் நாட்டில் முன்னோர் இத்தகைய பல பெருங் கோயில்களை நிர்மாணித்தனர். ஆனால் அவற்றில் எவ்வளவு கோயில்களுக்குத் தற்போது திருப்பணி தேவையாயிருக்கிறது என்று பார்த்தால் நம் அசிரத்தை தெரிய வரும். தயவு செய்து கோபிக்காதீர்கள். மேல்நாட்டவர்களுக்கு நம்மைவிட பக்தி அதிகம். வடவருக்கும் நம்மைவிட பக்தி உண்டு. வடவர் இராமேசுவரம் செல்லும் அளவு நாம் காசிக்குச் செல்வதில்லை'' என்று முதன் மந்திரி கூறினார்.

அட்டைப்பட விளக்கம்

கோடையில் குதூகலம்

கோடை நாட்கள் வந்தால் முன்பெல்லாம் பத்திரிகைகள், எவ்வளவு டிகிரி உஷ்ணம் காய்ந்தது என்பதை மட்டும்தான் போடுவார்கள். இப்பொழுது, ''108 டிகிரிக்கு இன்று வெப்பம் உயர்ந்து விட்டது.. ஐஸ் க்ரீம் விற்பவர்களின் வியாபாரம் மிக மிக மும்முரமாக நடைபெற்றது!'' என்று போடுகிறார்கள்.

''பால் ஐஸ்க்ரீம்!'' என்ற குரல் கேட்டவுடன் குழந்தைகளுக்குத்தான் எவ்வளவு குஷி. எங்கிருந்தோ ''திபுதிபு'' வென்று ஓடி ஐஸ் க்ரீம் வியாபாரியைச் சூழ்ந்து கொண்டு விடுவார்கள். வீட்டில் உள்ள பெரியவர்கள், ''வெய்யில்டா! வெளியில் போகாதேடா!'' என்று இரைவார்கள். சிறுவர்களுக்கோ, ''வெய்யிலா? இல்லையே! நிலவல்லவோ காய்கிறது!'' என்றுதோன்றும். கோடை விடுமுறை வந்தால் பையன்கள் அவரவர்கள் மாமா, சித்தப்பா, தாத்தா ஊர்களுக்குப் போகிறார்கள். குளிர்ந்த ஊரிலிருக்கும் பையன் லீவ் விட்டால் போதும், அக்னி குண்டமாகத் தகிக்கும் ராமகூடத்தில் வசிக்கும் மாமா ஊருக்குப் போயே தீர வேண்டும் என்பான். ஆம், அவனுக்குத் தெரியும், அப்பா வாங்கித் தராத ஐஸ்க்ரீம், ப்ரூட் சாலட்டெல்லாம் மாமா மகிழ்ச்சியோடு வாங்கித் தருவார் என்பது. வண்ணப் பழங்கள் போட்ட சில்லென்ற ஐஸ் க்ரீம் சாப்பிடுவதில் ஏற்படும் குஷியில் வெய்யில் உடம்பிலே உறைக்காதே! 112 டிகிரிதான் காயட்டுமே! அதைப் பற்றி அவனுக்கு அக்கறையில்லை.

ராஜாஜியின் கருத்துக்கள்



ஒரு பிரஜையின் மீது நியதிக்குட்படாத நடவடிக்கை எடுப்பது சர்க்காருக்குச் சுலபமாகி விட்டது. ஆனாலும் அந்தத் தனி மனிதர் அந்த நடவடிக்கையால் பெறும் இன்னலைவிட, அதன் மூலம் சட்டத்தின் ஆட்சியிலேயே ஏற்படும் முறிவு காரணமாக நாட்டுக்கு அதிகத் தீங்கு விளைகிறது. ஓரிடத்தில் வீசும் அணுகுண்டு உலக வெளி முழுவதிலும் தீய கதிரியக்கத்தை உண்டு பண்ணுவது போல் ஒரு பிரஜை மீது எடுக்கும் நடவடிக்கை தேச முழுவதிலும் தீயவிளைவை ஏற்படுத்துகிறது. இதனால் சர்க்காரும், பொதுஜன அபிப்பிராயமும் தவறான வழியில் நிரந்தரமாகச் செலுத்தப்படுகின்றன.

இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஷேக் அப்துல்லாவைக் கைது செய்து 'சிறை' வைத்திருப்பதை நம் நாட்டின் முக்கியமான எல்லாப் பத்திரிகைகளுமே ஆதரித்து எழுதியுள்ளன. மூன்று அல்லது நான்கு தனி நபர்களே தருமத்தின் சார்பிலும், சட்டத்தின் சார்பிலும் நின்று சர்க்காரின் நடவடிக்கையை எதிர்த்திருக்கிறார்கள். மற்றபடி தேசம் முழுவதும் இவ்வாறு ஏகோபித்த கருத்து தெரிவித்திருப்பது ஒரு விரும்பத் தகாத அறிகுறியாகும். தேசப்பற்று என எண்ணிக் காச்மீர விஷயத்தில் விடாப்பிடியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் கொள்கை பொது மக்களின் சிந்தனைப் போக்கை எப்படி வசியமாக்கி விட்டது என்பதற்கு இது சான்று. ஸ்ரீ வினோபா பாவே அவர்களுடைய கருத்து முதலில் தவறாகப் பிரசுரிக்கப்பட்ட தெனினும், பிற்பாடு சரியாக வெளியாகியிருப்பதைக் காண ஆறுதலாயிருக்கிறது. நம் சர்க்காரின் கொள்கைகளை ஆட்சேபிப்பதில் தைரியம் காட்டுவது அவ்வளவாகக் கடினமல்ல. ஆனால் உடன் வாழும் மக்கள் யாவரும் தேசாபிமானம் என்று நினைத்து வெளியிடும் ஒரு கொள்கைக்கு மாறாக மனச்சாட்சியின்படி நடந்து, தேசத்தில் தனித்து நிற்பதற்கு அதிகத் தைரியம் வேண்டும். எனவே, ஸ்ரீ. ராமச்சந்திரன் அவர்களையும், ஸ்ரீ ஜயப்பிரகாசரையும் மனமார வாழ்த்துகிறேன்.

ஷேக் அப்துல்லாவின் மீது எடுத்துள்ள நடவடிக்கை தரும ரீதியிலும் சரியல்ல; ராஜதந்திரப்படியும் சரியல்ல. ஒருவர் தமது கருத்தை நேர்முகமாக விளக்க உரிமை தராமல், பிறருடைய வியாக்கியானங்களின் மீது அவரை அவரது இல்லத்திலிருந்து ஆயிரம் மைலுக்கப்பால் 'சிறை' வைப்பது அதருமம். இப்பொழுதேனும் அவருக்குத் தமது கருத்தை எடுத்துக் கூற வாய்ப்புக் கிடைக்குமென்று நம்புகிறேன்.

❀❀❀

ஆங்கிலத்தையே இந்தியாவின் ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டுமென்றும், ஹிந்தித் திணிப்பை எதிர்த்த கிளர்ச்சியில் உயிர் துறந்தோருக்கு மரியாதை தெரிவித்தும் சென்னை நகரசபை மூன்று மாதங்களுக்கு முன் தீர்மானம் நிறைவேற்றியது. தமிழ்நாட்டு சர்க்கார் இந்தத் தீர்மானத்தை ஏன் ரத்து செய்யக் கூடாது என்பதற்கு நகரசபையைக் காரணம் காட்டுமாறு கேட்டிருக்கிறது.

தீர்மானத்தை ரத்து செய்து விட்டாலும் சென்னை நகரசபையின் அபிப்பிராயத்தை அதனால் மாற்றி விட்டதாக அர்த்தமில்லை என்பது வெளிப்படை. ஒரு கருத்தை வெளியிட்டவர்கள் தாங்களே அதனை மாற்றிக் கொள்ளும் போதுதான் அக்கருத்து ரத்தாகுமேயன்றி, கருத்தை வெளியிடும் தீர்மானத்தைச் சர்க்கார் ரத்து செய்வதால் உண்மை மாறி விடாது. யாரேனும் **நடவடிக்கை** எடுக்க உத்தேசித்திருந்தால், நியாயமாகவோ அநியாயமாகவோ தடுத்து நிறுத்த அரசாங்கத்தால் முடியும். ஆனால் கருத்துலகில் சர்க்காரின் அதிகாரத்துக்குச் சக்தியில்லை. **கருத்தைச்** சர்க்கார் உத்தரவின் மூலம் தடுத்துப் போரிட நினைப்பதற்குப் பொருளில்லை. எனவே, சர்க்காரின் கருத்து பழையபடியே இருக்கும்; நகரசபையின் கருத்தும், தீர்மானத்தைச் சர்க்கார் ரத்து செய்த பின்னும் பழையபடியே இருக்கும்.

❀❀❀

சுதேச உணர்ச்சியும், தேசாபிமான கோஷங்களும் நல்லவைதான். ஆயினும் நம் நாட்டைச் சூழ்ந்துள்ள ஆபத்தைச் சமாளிக்க இவை மட்டும் போதா. புத்திசாலித்தனமான ராணுவ உடன்படிக்கைகள்தான் எதிர்ப்பைச் சமாளிக்கும் வழி. பொதுமக்களின் தேசாபிமான வேகத்தைமட்டும் தூண்டி விடுவதால் இந்தப் பலனைப் பெற முடியாது. மாறாக மக்களின் பரபரப்பைக் கண்ட எதிரி, நாம் அஞ்சி நடுங்குகிறோம் என்றே எண்ணி மேலும் ஊக்கம் பெறுவான்.

ராணுவ உடன்படிக்கை செய்து கொள்வதால் நமக்குத் தன்னம்பிக்கை இல்லை என்று பொருளாகாது; அதில் அவமானம் ஏதுமில்லை. ராணுவ ஒப்பந்தம் செய்து கொள்வதால் நாம் போர் வெறி பிடித்து அலைவதாகவும் ஏற்படாது. உலக சமாதானத்தை நாம் விரும்புகிறோம் என்ற காரணத்துக்காக, அபாயம் சூழ்ந்துள்ளபோது ராணுவக் கூட்டு பெற மறுக்கலாகாது. அஹிம்சைக் கொள்கையைப் பற்றிப் பேசினாலும் இந்திய சர்க்கார் இப்போது சீனாவின் முன் சத்தியாக்கிரகம் செய்யவில்லை; நம் படைகளைப் பெருக்கித்தான் வருகிறது. எனவே, இன்றைய சூழ்நிலைக்கு இம்மியும் பொருந்தாத நடுநிலைமைக் கொள்கையைக் கைவிட்டு அமெரிக்காவுடன் ராணுவ ஒப்பந்தம் பெறுவதற்குத் தயங்கவேண்டிய அவசியமே இல்லை. ருஷியா ஒருநாளும் நமக்காகச் சீனாவை விட்டுக் கொடுத்து எதிர்க்காது.


ஜூலை 21உ முதல்
சென்னை
பாரகன்
நடராஜ்
நூர்ஜஹான்
பிராட்டன்
மற்றும்
தென்னகமெங்கும்
சரவணா பிக்சர்ஸ்
பஞ்சவர்ணக் கிளி
கதை. வசனம் · வலம்புரி சோமநாதன்
பாடல்கள் · பாரதிதாசன் · வாலி
கேமரா · தம்பு · கலை · பாலு · ஸ்டில்ஸ் · சாரதி
இசை
விஸ்வநாதன்
ராமமூர்த்தி
டைரக்ஷன்
K. சங்கர்
ஸ்டுடியோ

வட்ட மேஜை

❊ அரசியல் சட்டத்தைத் திருத்துக !
❊❊ வள்ளலார் நூற்றாண்டு விழா !

ஆங்கில மொழியும், மத்திய ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வரும்— இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை — என்று நேரு அவர்கள் கூறிய வாக்குறுதிக்குச் சட்டபூர்வமான அங்கீகாரம் அளிப்பதாக அரசினர் உறுதி தந்துள்ளார்கள். அதற்கு எம்முறையில் சட்ட வடிவம் கொடுக்கலாம் என்பதை முடிவு செய்ய யூனியன் அமைச்சர் நுவர் கொண்ட குழு ஒன்று அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளது. ஆட்சி மொழிச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம், இதைச் சாதிக்கலாம் என்று அவர்கள் கருதுவதாகத் தெரிகிறது.

இது சாத்தியமில்லை என்பது என் கருத்து. அரசியல் சாஸனச் சட்டத்தைத் திருத்தினாலொழிய, இது ஒரு நாளும் முடியாது. மொழி சம்பந்தமாகப் பார்லிமெண்டுக்கு 343(3) பிரிவின்படி ஒரே ஒரு அதிகாரம்தான் உண்டு: அதாவது 1965 ஜனவரி 26க்குப் பின், வியக்தமாகக் குறிப்பிடப்படும் சில காரியங்களுக்கு மட்டும் ஆங்கிலத்தை உபயோகித்துக் கொள்ளலாம் என்பதே (for such purposes as may be specified) அதுவாகும். ஆனால் இப்பொழுதுள்ள ஆட்சி மொழிச் சட்டத்தில் **எல்லாக்** காரியங்களுக்கும் என்று பொதுப்படச் சொல்லப்பட்டிருக்கிறது. இது பார்லிமெண்டு அதிகாரத்துக்கு அதிகப்படியாகக் கருதப்படும்: இனி, இந்த ஓர் அதிகாரத்தைத் தவிர, பார்லிமெண்டுக்கு மொழி சம்பந்தமாக எந்தவிதச் சட்டமும் செய்ய அதிகாரம் கிடையாது. அரசியல் சட்டம் 344 பிரிவின்படி, ஜனாதிபதி ஒரு கமிஷன் நியமித்து, அந்தக் கமிஷன் அறிக்கையை 30 பார்லிமெண்டு உறுப்பினர்கள் கொண்ட ஒரு கமிட்டி பரிசீலித்து, ஜனாதிபதி அவர்களுக்கு அதைச் சமர்ப்பித்து, அந்த அறிக்கைப்படி ஜனாதிபதி கட்டளைகள் பிறப்பிக்கலாம். எனவே, 343(3) பிரிவின்படி மட்டுமின்றி, பார்லிமெண்டு மொழி சம்பந்தமாக எந்தவிதச் சட்டமும் இயற்ற முடியாது. அது ஜனாதிபதி அவர்களின் அதிகாரத்துக்கு உட்பட்டது.

எனவேதான், நேரு அவர்கள் வாக்குறுதியை நிறைவேற்றி வைக்க, அரசியல் சட்டத்தைத் திருத்துங்கள் என்று பன்னிப் பன்னிப் பகர்கிறேன். வேறு வழி கிடையாது.

நேரு அவர்களின் வாக்குறுதியில் இரண்டு பகுதிகள் உள்ளன:

1. ஆங்கிலம் யூனியன் அரசின் கூட்டு இணை மொழியாகத் தொடர்ந்து இருந்து வரும்.
2. அப்படி எவ்வளவு காலம் இருந்துவரும் என்பதை இந்தி பேசாத மக்களே தீர்மானித்துக் கொள்வார்கள்.

இந்த இரண்டாவது பகுதியும் முக்கியம். இந்தப் பகுதியும் சட்டபூர்வமான அங்கீகாரம் பெற வேண்டும்.

சென்னை-10
17-4-65

எல். கிருஷ்ணசாமி பாரதி

திருவருட் பிரகாச வள்ளலாரெனும் அருட்திரு இராமலிங்க அடிகளார் அண்டவரையடைய அருளாட்சியைக் கொலை, புலை மலிந்த இந்த அவனியில் நிறுவ அரும்பாடு பட்டவர். சாதி சமய சழக்குகளை அறவே நீக்கிச் சமரச சன்மார்க்கத்தை நிலைநாட்டியவர். ஜீவகாருண்யத்தையும், சன்மார்க்கத்தையும் இரு பெருங் கொள்கைகளாகக் கொண்டு சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் என்ற ஒரு சிறந்த அமைப்பை 1865ம் ஆண்டில் நிறுவி, உலக மக்களுக்குத் தாம் சொல்ல வந்த நல்ல செய்திகளை அருட்பாக்களாகத் திருவாய் மலர்ந்தருளியிருப்பதை அனைவரும் அறிவர். பஞ்சம், பட்டினி, பதுக்கல், கள்ளச் சந்தை, கொள்ளை லாபம், லஞ்ச வாணிபம், ஊழல் முதலிய கொடுமைகள் மலிந்துள்ள இச் சமயத்தில் வள்ளல் பெருமானின் அருட் கொள்கைகள் பரவுவது எவ்வளவு அவசியமானது என்று சொல்ல வேண்டியதில்லை. அதற்கு ஒரு நல்ல வாய்ப்பு நமக்கு இப்போது கிடைத்திருக்கிறது.

இராமலிங்க வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தைத் தொடங்கி இந்த ஆண்டுடன் நூறாண்டு நிறைவு பெறுகிறது. இந்நூற்றாண்டு விழாவை நல்ல பல திட்டங்களுடன் சிறப்பாகக் கொண்டாட வேண்டியது நாட்டு நலம், மக்கள் நலம் நாடும் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.


வருகிற ஜூன் மாதம் 11, 12, 13 ஆகிய நாட்களில் சென்னை மாநகரில் மிகப் பெரிய அளவில் விழா கொண்டாடப்படும். இவ் விழாவில் நம் தமிழகப் பேரறிஞர்களேயன்றி, இந்தியாவின் பிற பகுதிகளிலுமுள்ள பேரறிஞர்களும் வெளிநாட்டுப் பேரறிஞர்களும் கலந்து கொண்டு வள்ளலாரின் அருட் கொள்கைகளைப் பற்றிச் சொற்பொழிவாற்றுவார்கள். விழாச் சிறப்பு மலர் ஒன்று ஐந்நூறு பக்க அளவில் வெளியிடப்படும். ஏழை மக்களுக்கு உணவு வழங்கப்படும். வள்ளலார் அருட்பா சம்பந்தமாகக் கண்காட்சி ஒன்றும் அமைக்கப்படும்.

எனவே, அன்பர்கள் இந்நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெறுவதற்குத் தங்கள் தங்களால் இயன்ற எல்லா உதவிகளையும் புரிந்து ஆலோசனைகளை வழங்கி, உடனிருந்து இந்த நன்முயற்சிக்கு ஆதரவு காட்ட வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

இது சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள விரும்புகிறவர்கள், பொதுச் செயலாளர், சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க நூற்றாண்டு விழாக் குழு, 6, நரசிங்கபுரம் தெரு, சென்னை-2 என்ற முகவரிக்கு எழுதுக அல்லது வருக.

சென்னை,
25-4-65

நாரண துரைக்கண்ணன்
நூற்றாண்டு விழாக்குழுத் தலைவர்



காலச்சக்கரம்

கி. ராஜேந்திரன்

அத்தியாயம் 3

ஆபத்துக்குத் தோஷமில்லை!

தங்கப்பனின் கூச்சலைக் கேட்டதும் அந்தப் பெண் திடுக்கிட்டவளாய்த் திரும்பி அண்ணாந்து நோக்கினாள். விநாடி நேரத்துக்கு அவனுடைய பரபரப்பைச் சட்டென்று புரிந்து கொள்ள முடியாதவளாய் முகம் சுளித்தாள். எனினும் ஏதோ ஆபத்து என்ப

தால் தனக்கு எச்சரிக்கை செய்கிறான்; அவனுடைய முக பாவனையும் அவன் ஜாடை காட்டுவதும் அதைத் தான் புலப்படுத்துகின்றன என்பதை அடுத்த கணமே உணர்ந்தாள். 'ஜாக்கிரதை!' என்று அவன் கத்தியது அவளை உடனே இயங்க வைத்தது. சட்டென்று தான் ஓட்டி வந்த குதிரையின் லகானை இறுகப் பிடித்து 'விசுக்'கென்று இழுத்தாள். முரட்டுத்தனமான இந்தச் செய்கையால் வேகமாக வந்து கொண்டிருந்த குதிரை வேதனை தாங்காமல் முன்னங்கால்களை மடக்கி மேலே தூக்கிய வாறே பலமாகச் சிலிர்த்துக்கொண்டு கனைத்தது.

அதே சமயத்தில் காரும் விரைவாக மூலை திரும்பியது. நடுத் தெருவில் குதிரையைக் கண்டதும் 'பிரேக்'கை அழுத்தினார் வண்டியோட்டியவர். பிரேக் நன்றாகப் பிடித்த போதிலும், 'கிறீச்'சிடும் ஓசை எழுப்பியபடி சாலையில் சக்கரத்தின் ரப்பர் டயர் அழுந்திக் கால் அங்குலத்துக்குத் தேய்ந்த போதிலும் வண்டி சட்டென்று நிற்கவில்லை. இறக்கமானபடியால் வந்த வேகத்திலேயே சற்றுத் தூரம் முன்னேறியது. குதிரையைமிகவும் சமீபித்துவிட்டது.

காரைக் கண்டதும் ஏற்பட்ட திகைப்பில் அந்தப் பெண் கலவரமடைந்து சீராகச் சிந்தித்துப் பாராமல் தன் பிடியைத் தளர்த்தியிருக்க வேண்டும். குதிரை பயத்துடன் எம்பி உடல் பதறியபோது அவள் பின்னுக்குச் சரிந்து விழுந்துவிட்டாள்.

குதிரை மிரண்டதைக் கண்டதுமே அவளுக்கு உதவப் போக வேண்டியது தான் என்று தீர்மானித்துவிட்டான் தங்கப்பன். 'ஆனால் பாதையோடு சுற்றி ஓடினால்கூட ஐந்து நிமிஷ நேரமாவது குறைந்தபட்சம் ஆகும். அப்படியே இங்கிருந்துகுதித்து விட்டால் என்ன?' அவனுக்கு நேர் கீழே சுமார் இருபதடி ஆழத்தில் சாலை அமைந்திருந்தது. 'அவளுக்கு உதவக் கீழே குதிக்கப் போய் நாமும் கையைக் காலை ஒடித்துக் கொள்வதா?'

தங்கப்பனுக்கு யோசித்துக் கொண்டிருக்க நேரமில்லை. மதிலின் மேல் புறத்தையும் பின்னர் மலைச்சரிவில் அடர்ந்து வளர்ந்திருந்த ஒரு புதரையும் மாற்றி மாற்றி இடது கரத்தாலும் வலது கரத்தாலும் பற்றியபடி தாவிக் குதித்தான். பூமியில் கால் பாவியதுமே மீண்டும் பந்து போல் ஒருமுறை துள்ளித் தன்னை ஒரு நிலைப் படுத்திக் கொண்டான்.

எல்லாம் நிமிஷ நேரத்துக்குள் நடந்து விட்டது. ஆனால் குதிரையிலிருந்து பின்னுக்குச் சரிந்து விழுந்த பெண் அதற்கு முன்னதாகவே இறக்கமான அந்தப் பாதையில் உருண்டு சென்றாள். அப்படி உருளும் வேகத்தை அவளாலேயே கட்டுப் படுத்த முடியவில்லை. இன்னதுதான் நடக்கிறது என்று அவள் உணருமுன்னரே அவள் தேகம் ஒரு மதகடிக்குப் பக்கத்தில் சாலை ஓரப் புல் மேட்டில் முட்டி மோதி நின்றது. மயக்கமுற்றவள் போல் அசையாது கிடந்த அவளை நாலே எட்டில் சென்றடைந்தான் தங்கப்பன்.

அவள் கண்கள் மூடியிருந்த போதிலும் துரிதமான பெருமூச்சுக்கள் அவள் நெஞ்சை நிறைத்துப் புதுச் சக்தியை அளித்துக் கொண்டிருந்தன. 'அவளைத் தொட்டுக் கண் விழிக்கச் செய்வதா? உலுக்கி எழுப்புவதா? அல்லது பிடித்துத் தூக்கி நிறுத்துவதா?' எதையுமே செய்யத் தயக்கமாகத்தான் இருந்தது அவனுக்கு. எனினும் ஆபத்துக்குக் குற்றமில்லை என்ற முடிவுக்கு வந்தான்.

மல்லாந்து விழுந்து கிடந்த அவளது தோளுக்குக் கீழே முதுகுப் பக்கமாகக் கரங்களைக் கொடுத்துத் தூக்கினான். அதுவரையில் நினைவிழந்தவள் போல் தோன்றியவள் இப்போது திடுக்கிட்டவளாக நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"தொடாதே! என்னைத் தொடாதே" என்று அடித்தொண்டையினால் அவள் பேசியபோது விம்மல் ஒலிகளும் கூடவே எழுந்தன; மேனி நடுங்கியது. உடலிலிருந்த புழுதியை அவள் தட்டிக் கொள்ளவில்லை. மாறாகத் தோள்களில் அவன் கரம் பதிந்த இடங்களைத் துப்புரவு செய்தாள். தங்கப்பனின் உள்ளம் கொதித்தது. 'அத்தனை அருவருப்பு ஏற்படக் கூடிய உருவத் தோற்றமா கொண்டிருக்கிறேன் நான்? ஒரு வேளை லுங்கியும் கட் பனியனும் அணிந்து வெளிப் பார்வைக்கு முரட்டுத்தனமாக விளங்குவதால் அவள் மிரண்டு போனாளோ?' அடி உதட்டின் ஒரு பக்கத்தை உள்ளுக்கிழுத்து அழுத்திக் கடித்துக் கொண்டான் தங்கப்பன். கோபத்தில் அவன் நெற்றியும் புருவங்களும் சுருங்கின. எனினும் பெண்ணிடம் பொறுமை காட்டிப் பண்புடன் நடந்து கொள்ள வேண்டும்

என்ற நோக்கத்தில் ''பயப்படாதே!'' என்றான் ஆறுதலாக. ''மலையத்தனை ஆபத்தாகத்தான் வந்தது; ஆனால் கடுகத்தனை தீங்குகூட உனக்கு நேரவில்லை!...''

இதற்குப் பதில் கூறுவதேபோல் சாலை ஓரத்திலிருந்த மண்ணில் ஒரு பிடி அள்ளி அவன் முகத்தில் வீசினாள் அவள். தங்கப்பன் சட்டை அணிந்திருந்தால் அதில் ஒரு கைக்குட்டையாவது இருந்திருக்கும். முகத்திலிருந்த புழுதியை வழித்துப் போட்டான் அவன். ஒரு பக்கமாகக் காறி உமிழ்ந்தான். ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது அவனுக்கு. ''உனக்குப் பூசை கேட்கிறது'' என்று இரைந்து கொண்டு அவளை நெருங்கப் போனான்.

மண்டியிட்டபடியே பின்னுக்கித் தவழ்ந்து சென்றாள் அவள், சற்றுத் தூரம். அவனை உற்று நோக்கிய அவள் கண்கள் அகல விரிந்து ஏதோ ஒருவித பீதி குடிகொண்டிருப்பதைப் புலப்படுத்தின.

தக்க சமயத்தில் தன் கோபத்துக்கு அணை போடுகிற மாதிரியாக அந்தக் காரில் வந்தவர்களில் ஒருவர் அருகில் வந்து சேர்ந்ததற்காக மனத்துக்குள் அவரை வாழ்த்தினான் தங்கப்பன். இல்லாவிடில் அடுத்த விநாடி அங்கு என்ன நேர்ந்திருக்குமோ?

விபத்துக்குள்ளாக விருந்த அந்தக் காரில் வந்தவர்கள் ஒரு பஞ்சாபி குடும்பத்தினர். விடுமுறையைக் கழிக்க உதகைக்கு வந்த பிறகும் நாளைக்கு ஒரு மைல் தூரம்கூட நடந்து பயிலாமல் காரிலேயே அங்கும் இங்கும் விரையும் துரதிருஷ்டசாலிகளான பலருள் அடங்கிய சிலர். பெண் பிள்ளைகளைக் காரிலேயே உட்கார வைத்துவிட்டுக் காரோட்டி வந்தவர் மட்டும் அவர்களை அணுகி நின்றார் இப்போது. ''கேன் ஐ ஹெல்ப் யூ?'' என்று அவர் கேட்டதற்குப் பதிலாக 'அவள் முழுமையாகத்தான் இருக்கிறாள்; அடியொன்றும் படவில்லை' என்று ஆங்கிலத்திலேயே மறுமொழி சொன்னான் தங்கப்பன். இதற்குள் அந்தப் பெண்ணும் எழுந்து நிற்கவே, அந்தப் பஞ்சாபி சமாதானமடைந்தவராக நெடுமூச்செறிந்தவாறு தலையைத் தொங்கப் போட்டுப் பலமாக அசைத்தார். ''உன் குதிரை உயர்த்திய முன்னங் கால்களைத் தாழ்த்தியபோது கார் பம்பரில் அந்தக் கால்கள் சிக்கிக்கொண்டன. காரிலிருந்து குதிரையை விடுவிப்பதற்குள்... மை காட்! டெரிபிள்! அதற்குள் நல்லவேளையாக இவர் பாய்ந்து வந்து உனக்கு உதவுவதைப் பார்த்தேன்'' என்று தாம் தாமதித்து வந்ததற்குக் காரணம் கூறுவதுபோல் பேசினார்.

''நான் சரியாகத்தான் இருக்கிறேன். நீங்களெல்லோருமே போகலாம்'' என்றாள் அவள்.


பஞ்சாபி திரும்பிப் போய்க் காரிலேறி அதைக் கிளப்பினார். அவர்களைத் தாண்டிச் செல்கையில் காரிலிருந்த அனைவருமே, விபத்து நிகழவிருந்ததால் விரோத பாவம் வளரவில்லை என்பதைக் காட்டும் விதத்திலும் நல்லெண்ணத்தை உறுதிப்படுத்த விரும்பும் முறையிலும் கையசைத்து ''டாட்டா'' சொல்லி விட்டுப் போனார்கள்.

> ''நீ... நீ, தீனதயாளனின் மகள்தானே?''
>
> ''நான் யாரா இருந்தால் உனக்கென்ன?''
>
> ''இல்லை — உன்னைப் பார்த்த நினைவிருக்கிறது. அதனால் கேட்கிறேன்.''
>
> ''உன்னைப் பார்த்த நினைவு எனக்கில்லை. அதனால் சொல்கிறேன்!''

''நீயும் கிளம்பலாம்'' என்று கூறினாள் அவள்.

''போவதற்கு வழி எனக்குத் தெரியும். உன்னைக் கேட்டுக் கொண்டுதான் புறப்பட வேண்டுமென்பதில்லை. சாலை எல்லோருக்கும் பொதுவான ஒன்றுதான். அதிலும் நான் நடு ரோட்டில் கண்மூடித்தனமாகக் குதிரையை ஓட்டி வரவில்லை. ஓரமாகத்தான் நிற்கிறேன்!'' தங்கப்பன் சூடாகப் பேசியபோதிலும் அதனால் அவள் லவலேசமும் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

பதிலளிக்காமல் குதிரை எங்கே என்று பார்க்கச் சுற்றுமுற்றும் கண்ணோட்டம் செலுத்தினாள் அவள். அது



வசந்தத்தின்
புதுமலர்ச்சி
மென்வாடையின்
குளிர்ச்சி...

லக்மே டால்க் பூசிக்கொள்வதால் நாள் பூராவும் புது மலர்ச்சி கிட்டுகிறது. அதன் நறுமணம் நீடித்துக் கமழட்டும். மிருதுவான அதன் அரவணைப்பின்மூலம் நீங்கள் பெறும் குளுமையும், புத்துணர்ச்சியும் நீங்கள் அனுபவித்தறியாப் புதுமை. லேவண்டர், நீர்வாண். ஸாண்டல்வுட், அப்ஸரா, வெட்டிவர் என்று பல வாசனைகள் உள்ளன — நீங்கள் தேர்ந்தெடுத்துக்கொள்ள.

லக்மே
டால்க்



இருந்த திசையில் அடியெடுத்து வைத்தாள். கால் ஒடிந்து துவண்டது. வேதனையுடன் மதகடிச் சுவரைப் பிடித்துக் கொண்டாள்.

தங்கப்பன் இதை எதிர்பார்த்துத் தான் அவள் போகச் சொன்ன பிறகும் அசையாமல் நின்றிருந்தான். ஊமைக் காயம் பட்டிருப்பதை ஒப்புக்கொள்ளாது ஒளிக்கத்தான் தன்னை அனுப்பிவிட அவள் முயன்றாள் என்று அவன் ஊகித்தது உண்மையாயிற்று. கோபத்தை மறந்து கருணை கொண்டு அவளைத் தாங்கிக்கொள்ள முற்படுபவனாக ஓரடி எடுத்து வைத்தான் தங்கப்பன்.

''கிட்டத்தில் நெருங்கினால் இதோ இப்படியே குதித்து விடுவேன்!'' என்று பயமுறுத்தினாள் அவள். மதகுச் சுவரின் மறு பக்கத்தில் மலைச் சாரலின் அதள பாதாளம் வாயைப் பிளந்து கொண்டு நின்றது!

அத்தியாயம் 4

இவள் அவள்தானா?

தங்கப்பன் திகைத்தான். ஏறக் குறைய இதே போன்ற வார்த்தைகளைக் கிட்டத்தட்ட இதே போன்ற ஒரு சூழ் நிலையில் முன்பு எப்போதோ கேட்ட ஞாபகம் அவன் நெஞ்சில் பளிச்சிட்டது. அது எப்போது?

பள்ளிக்கூடத்தின் சுற்றுச் சுவர்மேல் ஏறி அமர்ந்து, ''இங்கே இருந்து அப்படியே இந்தப் பக்கம் குதிச்சுடட்டா?'' என்று கேட்டுப் பயமுறுத்தியவள் சிறுமி உஷா. அன்று சிங்காரச் சிறுமியாக இருந்தவள் மதில் மேலிருந்து குதிப்பேனென்றால், வளர்ந்து எழில் நங்கையாக விளங்கும் இவளோ பள்ளத்தாக்கிலேயே விழுவேன் என்று அச்சுறுத்துகிறாள். ஆம். இவள் அவளாகத்தான் இருக்க வேண்டும்!

''நீ.... நீ தீனதயாளுவின் மகள் தானே?''

''நான் யாராக இருந்தால் உனக்கென்ன? நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ!'' என்று எரிந்து விழுந்தாள் அவள்.

''இல்லை... உன்னைப் பார்த்த நினைவிருக்கிறது. அதனால் கேட்கிறேன்.''

''உன்னைப் பார்த்த நினைவு எனக்கில்லை; அதனால் சொல்கிறேன்.''

''உஷா! சின்ன வயதிலேயே உன்னிடம் குடிகொண்டு விட்ட அதிகார தோரணை இன்னமும் மாறவில்லை என்பது தெரிகிறது. ஆனால் நான் மாறி விட்டேன் வெகுவாக. முன்னைப்போல் யாராவது, ஏதாவது பழித்துச் சொன்னாலோ, இளக்காரமாகப் பேசினாலோ, மரியாதைக் குறைவாக நடந்து கொண்டாலோ கேட்டுத் தலைவிதியே என்று அனுபவித்துக் கொண்டு போகிற பையனில்லை நான். பதில் பேசவும் மரியாதையைக் கற்றுக் கொடுக்கவும் தெரிந்தவன் இப்போது!''

அவள் அவனை உற்றுப் பார்த்தாள். தன்னை அவள் அடையாளம் புரிந்து கொள்ளவில்லை என்பதைத் தங்கப்பன் நம்ப மறுத்தான். எனினும் அவனை இன்னாரென்று புரிந்து கொண்டதாக அவளும் காட்டிக் கொள்ளவேயில்லை! ''இதென்ன பெரிய தொல்லையாகப் போச்சு? என்னைச் சும்மா விடமாட்டாயா நீ?''

''சும்மா விடுவதாக இல்லை உஷா. இதோ இந்த மதகுச் சுவர் மீது உட்கார்ந்து சற்று இளைப்பாறு. அப்பா எங்கே இருக்கிறார் சொல். டெலிபோன் செய்து அவரை வரவழைக்கிறேன். காரில் வந்து உன்னை இட்டுச் செல்வார். அவர் வரும்வரை நான் தங்கியிருக்கும் ஹோட்டலுக்கு வந்து நீ காத்திருக்கலாம். என் அத்தையையும் அவள் மகள் செல்லத்தையும் கூப்பிடுகிறேன். கைத்தாங்கலாக அவர்கள் உன்னைப் பிடித்து அழைத்துப்போவார்கள், அதோ மேலே தெரிகிறதே அந்த ஹோட்டலுக்கு.''

உதவிக்கு ஆளின்றி அவளால் நடக்க முடியாது என்று அவன் சொல்லாமல் சொன்னதை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு அவன் கருத்தைத் தகர்த்தெறியத் தீர்மானித்தவள் போல் ''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்'' என்று கூறியபடியே நடந்தாள் அவள். வலியை மறைத்துக் கொள்ளவும், பொறுத்துக் கொள்ளவும் முயன்று வெற்றி கண்டாள். சற்றுத் தொலைவில் புல் மேய்ந்து கொண்டிருந்த குதிரையை அணுகி, அங்கபடியில் இடது காலைப் பதித்துத் தாவி லாகவமாக அதன் மீது ஆரோகணித்தாள்.

பின்னோடு சென்ற தங்கப்பன் அவள் ஏறும்போது குதிரை அசைந்து கொடுக்காமல் நிலையாக நிற்க உதவுகிறவன் போலக் கடிவாளத்தைப் பற்றிக்



"என்னடி பேப்பர்லே விசேஷம்?"

"தினம் தவறாது வரும் கூட்டுறவுச் சங்க மோசடி, கையாடல் செய்திகள் இன்றைக்கு மாத்திரம் பேப்பரில் காணோம்!"

கொண்டான். ஆனால் அவன் லகானைச் சொடுக்கிப் புறப்படத் தயாரான பின்பும் பிடியைத் தளர்த்தவில்லை அவன். மேலும் அழுத்தமாகப் பற்றிக் குதிரையை நகரவிடாமல் அடித்தான்.

"உண்மையான அக்கறையோடு உதவியவர்களை அவர்களுக்கு நன்றி கூறுமளவுக்கு மதிக்கப் பழகாவிட்டாலும் அவர்கள் முகத்தில் மண்ணை வீசி அவமதிக்காமலாவது இருக்கலாம்" என்றான் தங்கப்பன்.

"மிஸ்டர்! நீங்கள் நெருப்புடன் விளையாடுகிறீர்கள்! எடுங்கள் கையை!" என்று சீறினாள் உஷா.

"நெருப்பைக் கண்டு சுள்ளியும், சருகும் பயப்படலாம்; தண்ணீர் கூடவா அஞ்சும்?" என்று கேட்டான் தங்கப்பன். "பெண்களிடம் ரொம்பவும் கண்ணியமாக உறவாட வேண்டும் என்பதை அறிந்து வைத்திருப்பவன் நான். அதனால்தான் உன்னிடம் பெண்மையைக் காண முடியாது போனாலும் உன் பெண் உருவத்துக்கு மதிப்புத் தந்து பொறுமையைக் கடைப்பிடிக்கிறேன். 'நன்றி' என்று ஒரு வார்த்தை சொன்னால் என்ன? நாக்கா வெந்து விடும்?"

"தாங்க் யூ! போதுமா?" என்று எரிந்து விழுந்தாள் உஷா.

"தாங்க் யூ என்ற பதத்துக்கு என்ன அர்த்தம்? நன்றி என்ற சொல்லிலேயே பவ்யமும், பண்பும், அன்பும், கனிவும் உள்ளடங்கி இருக்கிறது. ஆனால் நீ சொல்கிற 'தாங்க்யூ'விலோ அதட்டலும் உருட்டலும்தான் தொனிக்கிறது!"

தங்கப்பன் கடிவாளத்திலிருந்து கரத்தை எடுத்தான், அதிகமாக அவளிடம் தெருவில் நின்று வாதாடிக் கொண்டிருக்க விரும்பாமல். குதிரையின் பின்புறம் முதுகில் ஒரு தட்டுத் தட்டினான். 'சிட்டாகப் பறந்தது' அது! வந்த வழியாகத் திரும்பாமல் இரண்டே நிமிஷங்களில் அது வேறு ஒரு திசையில் மலைச்சாரலில் இறங்கி வெகு தூரம் சென்று சிறு புள்ளியாக மாறி விட்டது. கண்ணுக்கு மறையும்வரை அதைப் பார்த்துக் கொண்டு நிற்கவும் அவளைப் பற்றிய யோசனையில் ஆழ்ந்து போகவும் தவறவில்லை தங்கப்பன்.

நிஜமாகவே விசித்திரமான பிறவிதான் அவள். அதிகாரத் தோரணையும் ஆணவப் போக்கும், உயர் குடும்பத்தில் பிறந்து செல்லமாக வளர்க்கப்பட்டதால் வரலாம். ஆனால் வேறு சில விஷயங்களும் அவன் சிந்தனையைக் கவர்ந்து மனத்தைக் குழப்பின. ஒருவித பீதி குடிகொண்ட கண்களால் இமைகளை அகல விரித்துத் திறந்தபடியே அவள் தன்னை நோக்கியதும் அதே சமயத்தில் கால்களாலும், கரங்களாலும் தவழ்ந்தவாறே அவசரம் அவசரமாகப் பின்வாங்கியதும், 'தொடாதே! என்னைத் தொடாதே!' என்று அச்சத்துடன் அவள் மொழிந்ததும், இவற்றைக் காட்டிலும் அதிகமாக அவன் விரல்கள் பதிந்த இடத்தை அவள் 'தூசு தட்டி'யதும் எல்லாம் பொருள் விளங்காத சம்பவங்களாக அவனைத் திணறச் செய்தன. ஆண் வாடை நெருங்கினாலோ, ஓர் ஆண் மகனின் ஸ்பரிசம் பட்டாலோ கூடத் தங்கள் கற்புக்கு இழுக்கு நேர்ந்து விட்டதாகவோ மாசு படிந்து விட்டதாகவோ தமிழகத்தில் பெண்கள் எண்ணுவது சகஜம்தான். எனினும் களங்கமற்ற மனத்துடன் ஆபத்தில் அவளுக்கு உதவத்தானே அவன் முற்பட்டான்? அதுகூடவா அவளுக்குப் புரியவில்லை? சாமான்யமான ஒரு பெண்கூட சர்வ சாதாரணமாக அதை உணர்ந்து நல்லபடியாகத்தானே எடுத்துக் கொள்வாள்? இவளோ படித்தவள்; அதிலும் கான்வெண்டிலே வேறு படிக்கிறவள்; நவீன நாகரிகத்திலெல்லாம் ஊறித் திளைக்கிறவள். அவள் அப்படி நடந்து கொள்வதென்றால்.... வியப்பாகத்தான் இருந்தது தங்கப்பனுக்கு.

இந்தச் சமயத்தில் அங்கே இரைக்க இரைக்க ஓடிவந்தான் ஒருவன். முழங்காலுக்குச் சற்றுக் கீழே அறுந்து





KISSAN

தொங்கிய பாண்டும் தேய்ந்து தேய்ந்து ஓட்டைகள் விழுந்த கம்பளிக் கோட்டும், அழுக்கேறிச் சிக்குப் பிடித்துக் கிடந்த பரட்டைத் தலையுமாகக் காட்சி அளித்த அவன் குதிரைகளை வாடகைக்கு விடுகிற ஒருவன்தான் என்பதை முதல் பார்வையிலேயே அறிந்து கொண்டு விட்டான் தங்கப்பன்.

அதற்கு ஏற்றாற்போல் அவனும் ''ஏனய்யா? இந்தப் பக்கமா ஒரு பொண்ணு குதிரை ஒட்டிக்கிட்டு வந்துச்சா?'' என்று விசாரித்தான்.

''ஆண்பிள்ளை மாதிரி பாண்டு, சட்டை போட்டுக்கிட்டிருந்தாளே அவளைக் கேட்கிறியா?''

''ஆமாங்க. ஆமாங்க அதுதானுங்க!''

''இதோ, இப்படித்தான் ரேஸ் கோர்ஸ் ரோட்டைச் சுற்றிக்கிட்டு அப்பாலே மார்க்கெட்டைத் தாண்டி 'பொடானிகல் கார்டன்ஸ்' பக்கமா போனாள்'' என்றான் தங்கப்பன்.

இடி விழுந்தாற்போல் தலையில் கையை வைத்துக் கொண்டு சாலை ஓரமாகக் குந்தி உட்கார்ந்து விட்டான் அந்தக் குதிரைக்காரன்.

''ஏனப்பா, என்ன ஆச்சு?''

''அதையேன் கேட்கறீங்க? பெரிய 'பேஜார்' புடிச்ச வேலையாகிப்போச்சு!'' என்று ஒரு சுருட்டை எடுத்துப் பற்ற வைத்தான் குதிரைக்காரன். ''மந்திரி ஊட்டுப் பொண்ணு அது! இங்கே 'ஸ்டேட் கெஸ்ட் ஹவுஸிலே' தான் தங்கி இருக்காங்க. தினத்துக்கும் காலமே அதன் அப்பாரு என்கிட்டே 'பத்திரமா குளந்தையைக் கூட்டிக்கிட்டுப் போய்ச் சீக்கிரமா திரும்பி வரணும்' பாரு. இதுவும் ரொம்பச் சமர்த்துப் புள்ளையாட்டமா குதிரை மேலே ஏறி உட்கார்ந்துக்கிடும். கொஞ்ச தூரம் வந்ததும் நான் ஏமாந்த நேரம் பார்த்துப் பிய்ச்சுக்கிணு கிளம்பிடும். 'லொங்கு லொங்கு'ன்னு அதைத் தேடிக்கிட்டு நான் ஓடியாரணும். சொன்னாலும் கேட்கிறதில்லே. எதனாச்சும் ஆயிட்டா அதன் அப்பாருக்கு நான் என்ன பதில் சொல்றது...?''

இத்தனை நேரமாக ஏனோ தானோ என்று தூறிக் கொண்டிருந்த வானம் இப்பொழுது சடசட வென்று மழை பொழிய ஆரம்பித்தது.

தங்கப்பன் மழைக்கு ஒதுங்கத்தான் நினைத்தான். ஆனால் அதை விட அந்த குதிரைக்காரன் வாயைக் கிளற வேண்டும் என்ற ஆர்வம்தான் முன் நின்றது.

''என் மந்திரி கிட்டே, 'இந்த ஜோலி நமக்கு வேணும் சாமி, வேறே ஆளைப் பாருங்க'ன்னு சொல்லிடறது தானே?'' என்றான் தங்கப்பன்.

''ஏஞ்சாமி? ஒரு 'டிரிப்'புக்கு அவர் ரெண்டு ரூபாய் கொடுத்தால் இந்தப் புள்ளை அவருக்குத் தெரியாமல் அஞ்சு ரூபாய் கொடுக்குமே. அப்புறம் 'அப்பா கிட்டே வேகமா குதிரைச் சவாரி செய்தேன்னு சொல்லாதே'ன்னு கேட்டுக்குமே!''

''நீயும் பணத்தை வாங்கிக்கிட்டு 'கம்'முன்னு இருந்திடுவியாக்கும். பேஷ்! மந்திரி மகளே லஞ்சம் கொடுக்க ஆரம்பித்தால் உருப்பட்டாற்போலத் தான், போ!''

''போறேன் சாமி! மழை உடட்டும்'' என்று மரத்தடியில் ஒண்டிக் கொண்டான் குதிரைக்காரன்.

தங்கப்பன் தனக்குள் நகைத்துக் கொண்டான். முன்னைக் காட்டிலும் அதிகமாக, புரியாத ஒரு புதிராக அவனுக்குத் தென்பட்டாள் உஷா இப்போது.

''என்ன தம்பி! அங்கேயே மலைச்சுப்போய் நின்னுட்டே, மழை பெய்யறது கூடத் தெரியாமே! ஊருக்குத் திரும்பறதா உத்தேசம் இல்லையா?'' என்ற குரல் கேட்டு அண்ணாந்து நோக்கினான் தங்கப்பன்.

அங்கே ஹோட்டல் தோட்டத்தில் வெளிப்புற மதிலருகே, செல்லமும் அவள் பெற்றோரும் சிறு கூட்டமாக நின்றனர். 'அவர்கள் எப்போதிலிருந்து அங்கே நிற்கிறார்கள்? இங்கே நடந்தனவற்றில் என்னவெல்லாம் பார்த்தார்கள்? அவர்களில் யார் யார், என்ன முடிவுக்கு வந்தார்கள்? அலசிப் பார்த்தால் சுவாரசியமாக இருக்கும்' என்றெண்ணினான் தங்கப்பன். அதற்கு மேலாக மற்றொரு நினைப்பு. பலத்த மழையினையும் லட்சியம் செய்யாமல் வெகு வேகமாகக் குதிரை யோட்டிச் செல்லும் உஷாவைப் பற்றிய எண்ணம் தான் அது! அவன் சாதாரணமாகச் சந்தித்துள்ள மற்றப் பெண்களைப் போலல்லாது அவள் குண இயல்புகளில் ஒரு தனித்தன்மை பெற்று விளங்குவதாலேயே, ஒரு விநோதப் பிறவி என்கிற முறையில் அவளைக் குறித்து நினைக்கத் தோன்றுகிறதா? அல்லது அவன் வெறுத்து ஒதுக்கக் கூடிய சுபாவங்களை அவள் கொண்டிருந்த போதிலும் அந்த வெறுப்பையும் மீறி அவளைப் பற்றிய சிந்தனை அவன் உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறதா? தங்கப்பனால் சீக்கிரத்தில் ஒரு தீர்மானத்துக்கு வரமுடியவில்லை.

(தொடரும்)



இன்றைய நாகரிகம்



பதினாறு காரட் சட்டம் வந்த பிறகு வெள்ளி நகைகளுக்கு 'மவுசு' அதிகரித்திருக்கிறது.

மல்லிகை இதழ்கள் அடுக்கடுக்காக விளங்கி அசைந்தாடுவது போன்ற ஜிமிக்கி கழுத்தின் மேல்புறம் வரை நீளமாகத் தொங்கினால்தான் அழகாக இருக்கும்.

அத்துடன் படத்தில் காணப்படும் நங்கை தன் நீண்ட கழுத்துக்கு எடுப்பான விதத்தில் ஓரங்களில் முத்து கட்டப்பெற்ற அகலமான நெக்லஸ் அணிந்திருக்கிறார். சங்கிலி கோத்தாற் போல் தோன்றும் இதற்குப் பொருத்தமான பாணியில், ஒத்துப் போகிற மாதிரியாகக் கரங்களிலும் வளையல்களுக்குப் பதிலாக 'பிரேஸ்லெட்' போட்டுக் கொண்டிருக்கிறார். இடையில், இரண்டு அடுக்கு மேகலையும், சாவிக் கொத்து செருகுவதற்கான முத்து வேலைப்பாடுகள் மிகுந்த பதக்கமும் மிளிர்கின்றன.

கொண்டை போட்டுக் கொள்கிறவர்கள் சிறுசிறு முத்துக்களுடன் கூடிய வெள்ளி மணிகளைக் கொண்டை ஊசியுடன் சேர்த்துச் செருகிக் கொள்ளலாம்.

மேனியின் வெவ்வேறு இடங்களை அலங்கரிக்கும் வெவ்வேறு நகைகள்தானென்றாலும் அவை அனைத்திலும் பொதுவானதாக, முத்துக்கள் அல்லது இதழ்கள் அசைந்தாடும் பாணி இழையோடுவது கவனிக்கத்தக்கது.

நகை உதவியவர்கள்: கானுஜிலால் பிரதர்ஸ் 14, சைனாபஜார் சென்னை-1 படம்: ஸ்டில்லேவிராப்








ஸ்ரீ மாதூர் பேசுகிறார்:

மாபெரும் தொழிலாளர் கூட்டத்தின் ஒரு பகுதிதான் இது.

திருவெறும்பூர் என்று ஒரு கிராமம். அதனையொட்டியுள்ள சிறு குன்றின்மீது அமைந்துள்ள கோயிலில் குடிகொண்டிருப்பவர் எறும்பேசுவரர். மூலஸ்தானத்தைச் சுற்றிலும் நிறைய எறும்புகள் வாசம் புரிகின்றனவென்றும் அதனாலேயே இறைவனுக்கு எறும்பேசுவரர் என்று பெயர் வந்தது என்றும் ஐதீகம்.

ஐதீகம் எப்படியானாலும் இம்மாதம் முதல்தேதி யன்று திருச்சிக்குப் பக்கத்திலிருக்கும் திருவெறும்பூருக்குச் சென்று திரும்பிய போதுதான் ஆண்டவன் எத்தனை முன் யோசனையோடு தமக்குப் பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார் என்பது புரிந்தது.

மின் நகரம்



திருவெறும்பூரைச் சுற்றிச் சுமார் ஐயாயிரம் தொழிலாளர்கள் சுறுசுறுப்புக்குப் பெயர்போன எறும்புகளை விடத் துரிதமாகச் செயலாற்றி ஒரு மாபெரும் மின் நகரத்தையே சிருஷ்டித்திருக்கிறார்கள். அதைக் கண்டபின் தீர்க்கதரிசனத்துடன் தமக்கு அருமையான பெயர் சூட்டிக் கொண்ட எறும்பேசுவரருக்கு அதற்காக ஒரு பாராட்டு விழாக்கூட நடத்தி விடலாமென்று தோன்றியது!


பாரத நாட்டில் செல்வம் கொழிக்க, வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்க, தொழில்வளம்—சிறு தொழில்களும், கனரகத் தொழில்களும் — ஏராளமாகப் பெருக வேண்டும். தொழில்வளம் சிறக்க அத்தியாவசியத் தேவை மின்சாரம்.

மின்சாரம் நமக்கு மூன்று விதங்களில் கிடைக்கக் கூடும். மேட்டூர், பைகாரா, பெரியாறு ஆகிய இடங்களில் உள்ளது போல் நீர் மின்சார நிலையங்கள் அமைக்கலாம். அணை எழுப்பி ஆற்றைத் தேக்கிப் பல நூறு அடிகள் உயரத்திலிருந்து நீரை வேகமாக விழச் செய்து அந்தச் சக்தியால் டர்பைன்களை இயக்கி மின்சாரம் உண்டாக்கலாம். அல்லது அனல் மின் நிலையத்தில் நிலக்கரியை எரித்து நீராவி உருவாக்கி அந்த நீராவி யின்சக்தியால் டர்பைன்களை இயக்கலாம். மூன்றாவதாக அணு சக்தியாலும் மின்சாரம் தயாரிக்கலாம். மாமல்லபுரத்துக்குப் பக்கத்தில் .ல்பாகம் என்னுமிடத்தில் இத்தகைய ஓர் அணு மின்நிலையம் ஏற்படுத்தத் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன.

அனல் மின் நிலையத்துக்கு நீராவி உற்பத்தி

அங்குரார்ப்பண வைபவத்தில் உப ஜனாதிபதி ஒரு விசையைத் திருக வண்ண விளக்குகள் ஜாஜ்வல்யமாகப் பிரகாசிக்கின்றன







மேடையில் தலைவர்கள்



ஸ்ரீ கிருஷ்ணன்

செய்யும் பாய்லர்கள் அவசியத் தேவை. பாய்லர் என்றும் நம் வீடுகளில் வாரத்தில் இரண்டு நாட்கள் எண்ணெய் தேய்த்துக் குளிக்க, ''சீக்கிரமா பாய்லரில் வெந்நீர் போடேண்டி!'' என்று மனைவியை அதிகாரம் பண்ணுகிறோமே அதுபோன்ற பாய்லர்கள் அல்ல!

அனல் மின் நிலையங்களுக்குத் தேவைப்படுகிற மாதிரியான பிரும்மாண்டமான பாய்லர்கள்; அகல உயரத்தில் மட்டுமின்றி உறுதியிலும் பெருமளவினதான பாய்லர்கள்; விசேஷமானதும் சிக்கலானதுமான அமைப்புக்கள் கொண்டவை. திருவெறும்பூர் மின் நகரத்தில் முக்கியமாக இந்தப் பாய்லர்களைத்தான் தயாரிக்கப் போகிறார்கள். இது எத்துணை பெரிய சிரமசாத்தியமான காரியம் என்பதைக் கீழே உள்ள புள்ளி விவரங்களைப் படித்து நீங்கள் தலை சுற்றி மயக்கம் போட்டு விழா திருந்தால் ஒருவாறு புரிந்துகொள்ளலாம்.


சென்னை ராஜ்ய சர்க்கார் கொடுத்து மராமத்து இலாகாவினால் இரண்டே மாதங்களில் மேடு பள்ளமின்றி சமன் செய்து தரப்பட்ட மொத்த நிலப்பரப்பு	99 ஹெக்டேர் அதாவது சுமார் 245 ஏக்கர்
இந்நிலப்பரப்பில் மேலே கூரை போடப்பட்ட தொழிற்சாலைகளின் பரப்பளவு மட்டும்	1,52,000 சதுர மீட்டர்
தொழிற்சாலைகள், தூண்களாகவும் மேல் கூரைக்கான விட்டங்கள், 'கர்டர்'களாகவும் விழுங்கிய இரும்பின் மொத்த எடை	14,500 டன்
கொட்டிய கான்கிரீட் கலவையின் கன பரிமாணம்	65,000 கன மீட்டர்
போடப்பட்ட சாலைகளின் நீளம்	8.5 கிலோமீட்டர்

போடப்பட்ட ரயில்தண்டவாளங்களின் நீளம்	7·5 கிலோ மீட்டர்
தினசரி தேவைப்படும் ரயில்வே வாகனங்கள்	43
சாக்கடைகளின் நீளம்	4,400 மீட்டர்
மழை நீர் வடிய வாய்க்கால்களின் நீளம்	14,000 மீட்டர்
மின்சாரம் சப்ளை செய்யும் கேபிள்களின் நீளம்	11,300 மீட்டர்
தொழிலாளர்களின் எண்ணிக்கை	4,700
இவர்களுக்கும் அதிகாரிகளுக்குமாக வசதியான வீடுகள்	3,000
இவ்வீடுகளுக்குத் தினசரித் தேவைப்படும் நீர்	4 மிலியன் காலன்
தொழிலாளர் நகரில் உள்ள சாலைகளின் நீளம்	22 கிலோமீட்டர்

இருபத்து மூன்று கோடி ரூபாய்க்கும் அதிகமாகச் செலவாகும் இத்தனையையும் திட்டமிட்டுச் செயலாற்றுவதென்றால் இலேசுப்பட்ட காரியமா?

திட்டங்களை வகுக்கும் பகுதி; பொறியியல், தொழில் நிபுணர்களைக் கலந்தாலோசிக்கும் பகுதி; தேவையான பொருள்களை, இயந்திரங்களை வாங்கித் தருவிக்கும் பகுதி; இயந்திரங்கள் பழுதுபடுவதனும் உற்பத்தியில் தாமதமோ, தடையோ ஏற்படாமல் கண்காணிக்கும் பகுதி; தொழிலாளர்களின் தேவைகளைக் கவனிப்பதுடன் அவர்களின் திறமையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முற்படும் பகுதி என்று பல பிரிவுகளாகச் செயல் திறன்

மின் நகரின் ஒரு தோற்றம்



மிக்கோர் தங்களைப் பாடுபாடு செய்து கொண்டு காரியத்தில் இறங்கினால்தான் வெற்றி காண முடியும்.

பெருமளவுக்கு வெற்றி கண்டுமிருக்கிறார்கள் என்று பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ் சேர்மன் ஸ்ரீ மாதூர் கூறியதிலிருந்து தெரிய வந்தது. இந்த மாபெரும் தொழிலகத்தின் நிர்மாண வேலைகள் திட்டமிட்ட காலத்துக்குப் பல மாதங்கள் முன்னதாகவே முடிந்துவிடும் என்றதுடன் இந்த நிறுவனத்துக்கான செலவும் திட்டமிடப்பட்டதைக் காட்டிலும் கணிசமாகக் குறையும் என்றும் தெரிவித்தார் அவர்.

இதைப் பற்றி நண்பரொருவரிடம் நான் பேசிக் கொண்டிருந்தபோது அவர், ''என் ஐயா! திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் சென்னையிலிருந்து கிளம்பித் திருவனந்தபுரத்தைச் சென்றடைய இருபது மணி நேரம் ஆகுமென்றால் ரயில்வே கால அட்டவணையில் என்ன போடுவான் தெரியுமா? இருபத்தி நாலு மணி நேரமாகும் என்று போட்டு வைப்பான். இங்கே கால் மணி அங்கே அரை மணி என்று ரயில் ஆங்காங்கே காலதாமதமாகக் கிளம்பினாலும் பிரயாணிக்குத் தெரியாது. 'ரயில் 'கரெக்ட் டயத்'துக்கு வந்து சேர்ந்துட்டுதே, சென்னைக்கு' என்று சந்தோஷப்படுவான்! புரிகிறதா ஓய்?'' என்றார்.

''நன்றாகப் புரிகிறது ஸ்வாமி! ஆனால் இருபத்தி நாலு மணி நேரம் என்று ரயில்வே கால அட்டவணையில் போட்ட பிறகும் ரயில் தன் பிரயாணத்தை முடிக்க இருபத்தெட்டு மணி நேரம் எடுத்துக்கொள்கிறதே, பெரும்பாலான தினங்களில்; அதற்கென்ன செய்ய?'' என்று நான் கேட்டதற்கு அவர் பதில் சொல்லவில்லை!

சர்க்கார் துறையைச் சேர்ந்த நிறுவனங்கள் பலவற்றிலும் திட்டமிடப்பட்டதைக் காட்டிலும் அதிகச் செலவும் காலதாமதமும் ஆகிக் கொண்டிருக்கும்போது திருச்சி பாய்லர் பிளாண்டில் இதற்கு நேர்மாறாக நடக்கிறதென்றால் தமிழ் நாட்டுத் தொழிலாளர் சமூகத்தின் உழைப்புத் திறனையும் பொறியியல் நிபுணர்களின் அறிவாற்றலையும் எண்ணிப் பெருமைப்படலாம்.

இவற்றுடன் செக்கோஸ்லாவாகிய பொறி இயல் நிபுணர்களின் ஒத்துழைப்பும் சேர்ந்திருக்கிறது. திருச்சி பாய்லர் தொழிற்சாலைக்கான பூர்வாங்கத் திட்டங்களைக் காகிதத்திலே எண்ணாலும் எழுத்தாலும் படங்களாலும் தயாரிக்க மட்டும் அறுபத்து மூன்று செக்கோஸ்லாவாகிய நிபுணர்கள் பத்து மாதங்கள் உழைத்தார்கள்! அந்த உழைப்பின் பலன் 76 கிலோகிராம் எடையுள்ள அறிக்கையாகப் பரிணமித்தது!

செக்கோஸ்லாவாகியாவுக்கும் இந்தியாவுக்குமிடையே, தொழில் நிறுவனங்கள் அமைப்பதற்கான ஒத்துழைப்பு ஏற்படுவது இன்று நேற்றல்ல. முதல் உலக யுத்தத்துக்குப் பின்னர் ஆரம்பமான இந்த பரஸ்பர உதவிகள் நல்ல பலனை அளித்து வந்தன. இரண்டாம் உலக யுத்தத்தின்போது தாற்காலிகமாக இந்த உறவு விட்டுப்போன போதிலும் செக்கோஸ்லாவாகிய இயந்திரங்களிடமும் பொறி இயல் நிபுணர்களிடமும் நமக்கேற்பட்ட நம்பிக்கையும் நல்லெண்ணமும் மாறவில்லை. யுத்தம் முடிந்த பிறகு சுதந்திர பாரதத்துக்குச் செக்கோஸ்லாவாகியா பலவிதங்களில் உதவி வருகிறது. விவசாய டிராக்டர்கள், மோட்டார் சைக்கிள்கள், சர்க்கரை ஆலைகளுக்கான இயந்திரங்கள், அலாரம் கடிகாரங்கள் போன்ற சிறிதும் பெரிதுமான பல ரகப் பொருள்களை உற்பத்தி செய்யப் பேருதவி புரிந்து வருகிறது அந்நாடு. திருச்சி பாய்லர் தொழிற்சாலை பலதரப்பட்ட இந்த ஒத்துழைப்பின் ஓர் அம்சமேயாகும்.

கனரக மின்பொருள்களின் உற்பத்திக்கென பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ் என்ற பெயருடன் ஒரு ஸ்தாபனத்தை உருவாக்கியிருக்கிறது மத்திய அரசாங்கம். இதுவே தான் திருவெறும்பூரிலும், ஹைதராபாத்திலும், ஹரித்வாரத்திலும், மூன்று நான்கு பகுதிகளாக இயங்குகிறது. ஹரித்வாரத்தில் ருஷ்ய — இந்தியக் கூட்டுறவிலும்; ஹைதராபாத்திலும் திருச்சியிலும் செக்கோஸ்லாவாகிய—இந்தியக் கூட்டுறவிலும் மாபெரும் தொழிலகங்கள் உருவாகி வருகின்றன.

இம்மாதம் முதல் தேதி திருவெறும்பூரில் அங்குரார்ப்பண வைபவத்தின்போது, முதல் முதல் இங்கு தயாரிக்கப்படும் பாய்லர்கள் சென்னை எண்ணூர் அனல் மின் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்று சொன்னார்கள். எல்லா பாய்லர்களையும் ஒரே மாதிரியாக உற்பத்தி செய்துவிடுவதற்கில்லை. அந்த அந்த அனல் மின் நிலையத்தில் உபயோகிக்கப்படும் நீரின் தன்மை, நிலக்கரியின் தன்மை போன்ற பல பிரச்னைகளைக் கணக்கெடுத்துக் கொண்டு அதற்கேற்பப் பாய்லர்களைத் தகுதியுடையதாக அமைக்க வேண்டும். எண்ணூரில் சிங்கரேணி நிலக்கரி பயன்படுத்தப்படுவதால் அந் நிலக்கரியை வண்டி வண்டியாக ரயில்வே வாகன்களில் பிலாய் இரும்பு உருக்குச் சாலைக்கு எடுத்துப்போய் அங்குள்ள பாய்லர்களில் பரீட்சித்துப் பார்த்து வருகிறார்களாம்! அதன் மூலம் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் இங்கு எண்ணூருக்கான பாய்லர்கள் உருவாகும் என்று அறிந்தபோது வியந்து போனேன். அதே போல் நெய்வேலி பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்துவதானால் அதற்கேற்பப் பாய்லர்கள் உருவாகுமாம்!

''முதல் பாய்லர்கள், 67ம் வருஷக் கடைசியில் தயாரித்து அளிக்கப்படலாம். ஆனால் இன்றே, நம்மை இங்கேயே பாய்லர்களில் போட்டுவிட்டார்கள்'' என்றார் நண்பர் ஒருவர். உச்சி வெய்யிலில் வெந்து உருகிக் கொண்டுதானிருந்தோம், அந்தப் பிரும்மாண்டமான கூடத்தில். குடும்பத்துக்குச் சராசரி நாலு பேர்கள் வீதம் நாலாயிரத்து எழுநூறு தொழிலாளரின் குடும்பங்கள் குழுமியிருந்த கூடத்தில் அங்குரார்ப்பண வைபவம் வழக்கமான சம்பிரதாயங்களுடன் சிறப்பாக நடந்தேறியது. உபஜனாதிபதி பேசினார். மத்திய தொழில் மந்திரி பேசினார். அப்புறம் சென்னை ராஜ்ய மந்திரிகள் ஒருவர்பின் ஒருவராகப் பேசினார்கள். இடையில் ஒருமுறை அந்தக்

கூட்டத்தில் பெருவாரியான கலகலப்பையும் சந்தோஷ ஆரவாரக் கைதட்டலையும் காண முடிந்தது. அது, பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ் சேர்மன் ஸ்ரீ மாதூர், திருவெறும்பூர் திட்டத்தின் நிர்வாகி ஸ்ரீ ஆர்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் பெயரைச் சொல்லி அவரது செயல் திறனைப் பற்றிக் குறிப்பிட்டபோதுதான்!

இப்படி அனைவரது பாராட்டுதலுக்கும் உள்ளான அந்தக் கிருஷ்ணன் யார் என்று வினவினேன். ''கிருஷ்ணனைத் தெரியாதா? அதோ வாயில் பைப்பை இடுக்கிக்கொண்டு காட்சி தருகிறாரே, அவர் தான்!'' என்றார்கள். பார்த்தால் மனுஷன் அடக்க ஒடுக்கமாக ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தார்! விழா முடிந்த பிறகு கொஞ்சம் பேசக் கொடுத்தும் பார்த்தேன். பெரிய அதிகாரிக்கு இருக்க வேண்டிய மிடுக்கு, முறுக்கு ஏதுமின்றி இணை பிரியாத 'பைப்'பைக் கையிலெடுத்துக் கொண்டு உரையாடினார். சதா புன்முறுவல் பூத்த முகத்துடனும் குறுகுறுப்பான பார்வையுடனும் விளங்கும் அவரது வசீகர சக்தியை அப்போது உணர முடிந்தது. இத்தகைய ஒருவருக்குத் தமக்குக் கீழ் பணியாற்றுவோரிடம் தட்டிக் கொடுத்து வேலை வாங்கிக் கொண்டு போவதில் சிரமமே இருக்க முடியாது என்று தோன்றியது. ஸ்ரீ கிருஷ்ணனுக்கு உறுதுணையாக ஆரம்ப கட்டத்திலிருந்து பணியாற்றி வந்திருக்கிறார் இத்திட்டத்தின் இன்ஜினீயர் ஸ்ரீ அச்சன் என்பதையும் ஸ்ரீ மாதூர் குறிப்பிட்டுப் பாராட்டினார்.

திருவெறும்பூர் தொழிற்சாலை, பாய்லர்களை மட்டுமின்றி, அதையொட்டிய வேறு சில உபகரணங்களையும் — வால்வுகள் போன்றவை — தயாரிக்கும். ஹைதராபாத்திலுள்ள நிறுவனங்கள் ஜெனரேட்டர்கள், ஸ்விட்ச் கியர்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும். இவற்றையெல்லாம் தயாரித்தளித்தால் மட்டும் போதுமா? அவை நன்கு செயல்படுகிற மாதிரி பழுதின்றி உருவாக்கப்பட்டுள்ளனவா என்று பரீட்சித்துப் பார்க்க வேண்டாமா? பாய்லரில் எங்கேனும் ஒரு சிறு வெடிப்புக்கான கீறல் விழுந்தால் கூடப் போதும்; பணம் நஷ்டமாவது மட்டுமல்ல; அது வெடிக்கும்போது உயிர்ச் சேதமுமல்லவா ஏற்பட்டுவிடும்? இங்கு தயாராகும் பொருள்களை நன்கு தரப் பரிசீலனை செய்யத் தேவையான எல்லா நவீன உபகரணங்களும் வைத்திருக்கிறார்கள். அதற்கென ஒரு தனி இலாகாவே இயங்குகிறது.

இத்தொழிற்சாலையை அமைக்கக் காவேரி ஸ்ட்ரக்சரல்ஸ், எவரெஸ்ட் இன்ஜினீயரிங் ஒர்க்ஸ் போன்ற தனிப்பட்ட தொழிலகங்கள் பலவும் ஒத்துழைத்துள்ளன. மணலைக் கயிராய்த் திரிப்பது என்பார்களே அப்படிக் காவேரி ஸ்ட்ரக்சரல்ஸில் இரும்பை வில்லாக வளைக்கிறார்கள், வெண்ணெயாக வெட்டித் தள்ளுகிறார்கள், தூணாக எழுப்புகிறார்கள், விட்டங்களாக மாற்றுகிறார்கள். இதற்கெல்லாம் வசதியாக, இரும்பை வெட்ட, வளைக்க, துளை போட, ஒட்ட; டன் கணக்கான எடையுள்ள இரும்புத் தூண்களைத் தூக்க, நகர்த்த, நிமிர்த்த, இறக்க எல்லாவற்றுக்கும் தேவையான நவீன உபகரணங்கள், இயந்திரங்கள் உள்ளன. அந்த



கணவர் : இரவில் எனக்குத் தூக்கம் வருவதில்லையே என்ன செய்யலாம்?


மனைவி : தூங்காமல் இருக்கலாம்!

இயந்திரங்கள் இரும்பைப் படுத்தும் பாட்டைப் பார்த்த பிறகு, ''இரும்பு மனிதன், இரும்பு இதயம்'' என்ற வர்ணனைகளுக்கெல்லாம் அர்த்தமே இல்லை என்று நினைக்கும்படியாகி விட்டது. ''இன்னும் சிறிது காலத்தில் காவேரி ஸ்ட்ரக்சரல்ஸில் டன்கணக்கான எடையுள்ள இரும்பைத் தூக்கும் சக்தி படைத்த கிரேன்களைத் தயாரிக்கவிருக்கிறோம்'' என்று பெருமிதத்துடன் கூறினார் அதிபர் ஸ்ரீ வி. டி. ஸ்வாமி.

திருவெறும்பூர் பாய்லர் தொழிற்சாலை அங்குரார்ப்பண வைபவத்தை முன்னிட்டுக் கோலாகலமாக விளங்கிய வரவேற்பு வளைவுகள், தோரணங்கள், குலை தள்ளிய வாழைகள் ஆகியவற்றையெல்லாம் மீண்டும் கடந்து சென்னைக்குச் செல்லும் சாலையில் திரும்பினோம். நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம், வாழை, கரும்பு, நெற் பயிர் என்று ஒரே பசுமை மயமாகத் 'தொழில் வளம் மட்டுமல்ல, நில வளத்திலும் இப்பகுதி சிறந்தோங்குகிறது' என்று சொல்லாமல் சொல்வது போல் காட்சியளித்தது திருவெறும்பூர். சற்றுத் தொலைவில் திருவெறும்பூர் குன்றும் கோவிலும் தென்பட்டன. கைலாச நாதர் எழுந்தருளியிருக்கும் அந்த ஸ்தலத்துக்குப் பொருத்தமாக முதல் நாளிரவு அங்கு அங்குரார்ப்பண வைபவத்தையொட்டிக் கலாக்ஷேத்திராவின் கண்ணப்பர் குறவஞ்சி நாட்டிய நாடகம் நடந்ததும், நாடகத்தின் இறுதியில் கண்ணப்பர் தமது காலைச் சிவலிங்கத்தின் மீது அடையாளமாக வைத்து இரண்டாவது கண்ணையும் பிடுங்கி அப்ப யத்தனித்தபோது நாடகம் பார்த்து வந்த கிராமவாசியொருவர் தம்மை மறந்து பரவச நிலையில் கன்னத்தில் 'பட்பட்'டென்று போட்டுக்கொண்டதும் நினைவு வந்தது.

நானும் இப்போது என்னையறியாமல் கன்னத்தில் போட்டுக் கொண்டேன்! தொழில் வளமும் நிலவளமும் இந்நாட்டில் போட்டி போட்டு வளர வேண்டுமானால் அவன் அருள் தானே தேவை?

— குட்டி கிருஷ்ணன்



கந்தன் கருணை

திருமுருக கிருபானந்தவாரியார்

29. வீரவாகு தேவர் தூது

கண்ணைவிட உடலுக்குச் சிறந்த உறுப்பு இல்லை. பெண்ணுக்குக் கணவனைவிடச் சிறந்த உறவு இல்லை. மக்களை விட மனிதனுக்குச் சிறந்த செல்வம் இல்லை. தாயை விடச் சிறந்த தெய்வம் உலகில் ஒருவருக்கு இல்லை. இது போல, தூதை விடச் சிறந்த உறுப்பு காப்பியத்துக்கு இல்லை. நமது காப்பியங்களி லெல்லாம் தூது முக்கியமான இடம் பெற்றுள்ளது. இராமாயணத்தில் அங்கதன் தூது, மகாபாரதத்தில் கிருஷ்ணன் தூது, நைடதத்தில் அன்னப் பட்சியின் தூது முதலியன முக்கியமான இடம் பெற்றுள்ளன. இதிஹாஸ புராணங்களின் இலட்சணத்துக்கு ஏற்பக் கந்த புராணத்தில் வீரவாகு தேவர் தூது சிறப்பாக அமைந்துள்ளது. தூது சென்றவர் வீரம் விழுமிய திருத்தோள் பெற்ற வீரவாகு தேவர்; தூது அனுப்பியவர் சாட்சாத் ஷண்முகநாதனே யாவர்.

திருச்செந்தூரில் தேவாதியரின் துயர்களைத் திருச்செவிமடுத்து இன்னல் தீர்ப்பதாக அபயம் அளித்த ஐயன் உடனே போருக்குப் புறப்பட்டு விடவில்லை. ஏனெனில், இறைவனின் சக்தி சாந்தியிலேயே நிலைபெற்றது. சாந்தமான முறையில் சூரனுடைய தவற்றைத் திருத்த வொண்ணுமற் போனாலே போர் புரிய

வேண்டுமென எண்ணினார் சுவாமி. சாம — தான — பேத — தண்டம் என்றவாறு படிப்படியாகவே போருக்குச் செல்ல வேண்டும் எனக் கருதினார். எதிராளியின் நல்லெண்ணத்துக்கு முழு இடமும் அளிக்கத் திருஉளம் கொண்டார். எனவேதான் சூரனிடம் முதலில் பேசிப் பார்ப்பது எனக் கருதினார்.

''தூதன் சொற்கேட்டுச் சூரன் தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்தால் அழியாமல் வாழ்வான். அவ்வாறு செய்ய மறுத்தால், நாமே சென்று அவனை அழிப்போம். இதுவே அறநெறி'' என்று கூறினார் ஷண்முகர். வானவரும் சுவாமியின் உத்தேசத்தை ஆமோதித்தனர்.

''நமது வீரர்களில் சூரபன்மனிடம் வீரமகேந்திரபுரிக்குத் தூது செல்லத் தக்கவர் யார்?'' என்று வேலவர் கேட்டார்.

''கந்தநாயக! தேவர்களின் நிலைமை தங்களுக்குத் தெரியாததல்ல. அடியேன் உட்பட வானவர்கள் அனைவரும் சூரனுக்குக் கைகட்டி ஏவல் செய்து வருகிறோம். ஆகவே, நம்மில் யாரும் சூரனிடம் தூது சென்று உயிருடன் மீள முடியாது. வீரவாகு தேவர் ஒருவர்தான் தூது சென்றால் காரியத்தைச் சிறப்புற நிறைவேற்றிவிட்டுச் சூரனிடமிருந்து வெற்றியுடன் திரும்பி வரமுடியும்'' என்று பிரம்மதேவர் கூறினார்.

ஐயனின் திருஉள்ளத்துக்கு உகந்த யோசனையாகவே அது அமைந்தது. தமது பேரன்புக்குரிய வீரவாகுவை அருள் கனிய நோக்கினார் ஆறுமுகன்.

''வீரவாகு! நீ வீர மகேந்திரபுரிக்கு விரைந்து சென்று சூரபன்மனை அணுகி, சயந்தனையும் தேவர்களையும் சிறையிலிருந்து விடுவித்து நல்வாழ்வு வாழுமாறு அவனுக்கு அறநெறியை எடுத்துக் கூறு. அவன் செவி சாய்க்காவிட்டால், அவனையும் அவனது சுற்றத்தையும் அழிக்க நாம் நாளையே படைகளுடன் வருவோம் என்று தெரிவித்து மீண்டு வருக'' என்று குமாரக் கடவுள் வீரவாகு தேவருக்குக் கட்டளையிட்டார்.

அப்பணியைத் தலை மேல் தாங்கி வீரவாகு தேவர் புறப்பட்டார்.

புத்திரவாத்ஸல்யம் மேலோங்கிய இந்திரன் வீரவாகுதேவரின் பின்சென்று, ''வீரரே! முதலில் வீர மகேந்திரத்தில் சிறைப்பட்டிருக்கும் என் குமாரன் சயந்தனையும் மற்ற தேவர்களையும் கண்டு ஆறுதல் கூற வேண்டும். பின்பு தூதுசெல்லும் வேலையை முடிப்பீராக!'' என்று பிரார்த்தித்துக் கொண்டான்.

தேவர்கோனின் துயரத்தை அநுதாபத்துடன் புரிந்து கொண்ட வீரவாகுதேவர் ''அவ்வாறே செய்வோம். கவலைப்பட வேண்டாம்'' என்று கூறிப் புறப்பட்டார்.

இலக்கத்தெட்டு வீரர்களும் அவரை வணங்கிப் பின்தொடரலாயினர்.

''நீங்கள் பூதப் படைத் தலைவர்களுடன் இங்கேயே இருங்கள்'' என்று அவர்களுக்கு உத்தரவிட்டுப் புறப்பட்ட வீரவாகுதேவர் கடற்கரையை அடைந்தார்.

வீரவாகுதேவர் தம் கால்களின் வீரகண்டை 'கலீர் கலீர்' என ஒலிக்கக் கந்தமாதன பர்வதத்தின் உச்சியில் ஏறி நின்றார். அவர் உற்சாகத்துடன் திமுதிமு என ஏறி நின்றதும் அந்தப் பாரம் தாங்காமல் மலை பிளந்து நிலத்தில் அழுந்தி விட்டது. போரில் தோற்று ஓடி வந்து அந்த மலைக் குகைகளில் ஒளிந்து கொண்டிருந்த தாரகனின் படை வீரர்கள் வெளிப்பட்டனர்; வீரவாகுதேவரைக் கண்டதுமே புலன்களெல்லாம் செயலிழக்க, உயிரை விட்டனர். மகேந்திரபுரிக்குச் செல்ல வேண்டும் என்று எண்ணிய வீரவாகுதேவர் 'கந்தநாயகா' என்று தியானித்தார். அகில புவனாண்டமாகவும் விளங்கும் ஐயனின் பெருமையை உள்ளத்தில் இருத்தி அதனுடன் வீரவாகுதேவர் லயம் அடைந்தபடியால் அவருமே விசுவரூபம் கொண்டார்.

உலகங்கள் எல்லாவற்றையும்ஒருங்கே பார்க்கத் தக்க அளவில் பெரிதாக விளங்கினார் வீரவாகுதேவர். அங்கு நின்றபடியே உலகில் உள்ள நகரங்களையெல்லாம் பார்த்தார். சூரபன்மனின் பெரிய நகரத்தையும் நோக்கினார். அந்த நகரத்தையே கையால் பிசைந்து பகைவர்களையெல்லாம் கொன்று



விடலாமா என்று ஓர் எண்ணம் தோன்றிற்று. சயந்தனும் மற்ற வானவரும் அங்குள்ள சிறையிலிருப்பதால் அந்நகர் முழுவதையும் நாசமாக்கலாகாது என்று தெளிந்து அந்த எண்ணத்தைக் கைவிட்டார். வீரவாகுதேவரின் பேருருவத்தைக் கண்ட அசுரர்கள், முன்பு அழிந்ததாகக் கூறப்பட்ட கிரௌஞ்ச மலைதான் இந்த மாயத்தைச் செய்கிறதோ என்று ஐயங்கொண்டனர். பிரம்மதேவர், இந்திரன், இலக்கத் தெட்டு வீரர்கள், மற்றும் பூதர்கள் ஆகியோர் வீரவாகு தேவரின் பேருருவத்தைக் கண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஆனால் வீரவாகுவோ தமது சக்தியில் பெருமிதமுறாமல், தமக்குச் சக்தி தந்த சக்தி குமாரனையே ஸ்மரித்திருந்தார்.

"ஆவதோர் காலை எந்தை
ஆறிரு தடந்தோள் வாழ்க!
மூவிரு வதனம் வாழ்க!
முழுதருள் விழிகள் வாழ்க!
தூவுடை நெடுவேல் வாழ்க!
தொல்படை பிறவும் வாழ்க!
தேவர்கள் தேவன் சேயோன்
திருவடி வாழ்க!" என்றான்.

இவ்வாறு ஆறுமுகக் கடவுளை வாழ்த்திய வண்ணம் வீரமகேந்திர புரத்தை அங்கிருந்தவாறே தமது விசுவரூபத்தால் நோக்கியவுடன் விசுவரூபத்தின் அவசியம் முடிந்ததென எண்ணினார் வீரவாகு தேவர். 'நான் இப்பேருருவத்துடன் சென்றால் உயிர்கள் அழியும்' என்று கருதி உருவத்தைக் குறுக்கிக் கொண்டார். பெரியோர்தான் பெருமையை எப்படிக் குறைத்துக் கொள்வது என்பதை அறிவர். அற்பர்களே தமக்குள்ள சக்தியை எப்போதும் பிரயோகம் செய்ய வேண்டும் என்று அலைவர். எளிமைக்கு உரிய பெருமையை உணர்ந்து சிறிய உருவம் எடுத்துக் கொண்ட வீரவாகுதேவர் கந்தமாதன மலையை முன் போலவே எழும்புமாறு அருள் செய்தார். அதன் பின் அம்மலையிலிருந்து வானமார்க்கமாகப் புறப்பட்டார் வீரவாகுதேவர். மீண்டும் எல்லையற்ற சக்தி அவரைத் தாமாகவே வந்தடைந்தது. அவர் புவியிலிருந்து வானத்துக்குக் கிளம்பிய வேகத்தில் பூமியிலுள்ள மலைகள் பல இழுக்கப்பட்டு அவருடன் செல்லத் தொடங்கின; அண்டங்கள் பின் தொடர்ந்தன; உயிர்கள் சுழன்றன. வீரவாகுதேவர் கடலில் பாய்ந்து சென்ற தோற்றம் சிவபெருமான் முப்புரத்தை நோக்கித் தமது இருவாய் எனும் வில்லில் பூட்டிய நெருப்புச் சிரிப்பு அம்பாகப் பாய்ந்ததை நினைவூட்டியது. 'கந்தவேள் சூரபன்மனை அழிக்க வேலாயுதத்தை விடுத்தாரோ?' என்று எண்ணும்படி வீரவாகுதேவர் கடற் பரப்பின் மீது வானவெளியில் தகதகவென்று ஒளிர்ந்தவாறு சென்றார்.

வீரமகேந்திர புரத்தின் வடபுறம் உள்ள இலங்கை என்னும் நகரத்துக்கு அருகில் போய்ச் சேர்ந்தார் வீரவாகுதேவர். யாளிமுகன் என்னும் அசுர வீரன் இலங்கையைக் காவல்புரியும் பொறுப்புப் பெற்றவன். வீரவாகு தேவர் அங்கே சென்ற போது, யாளிமுகன் சூரபன்ம மகாராஜனைத் தரிசிக்க வேண்டும் என்று சேனைகளுடன் வீரமகேந்திர புரிக்குச் சென்றிருந்தான். அவனது மகன் அதிவீரன் ஆயிரம் வெள்ளம் சேனைகளுடன் காவல் புரிந்து வந்தான். அவன் அந்தப்புரத்தில் இருக்கும்போது வடக்கு வாசலில் நின்ற படைத் தலைவனாகிய வீரசிங்கன், வீரவாகுதேவர் இலங்கையுள் நுழைந்து விரைந்து உட்சென்று கொண்டிருப்பதைக் கண்டான். ஐந்நூறு வெள்ளம் சேனைகளுடன் வீரவாகு தேவரை வழிமறித்தான்.

"உனக்கு உன் உயிர்மீது ஆசையில்லை போலிருக்கிறது. அதனால்தான் நீ தனியாக வந்திருக்கிறாய். நான் உன்னைக் கொல்வதற்கு முன், இங்கு வந்த காரணத்தைச் சொல்லிவிடு" என்று வீரவாகு தேவரிடம் ஆர்த்தான் வீரசிங்கன்.

"நான் வீரமகேந்திரபுரம் சென்று உயிருடனேயே திரும்பும் எண்ணத்துடன்தான் வந்திருக்கிறேன். உன்னால் என்ன முடியுமோ அதைச் செய்" என்று வீரவாகுதேவர் கூறினார்.

"இவனைக் கொல்லுங்கள்!" என்று சேனைகளுக்கு உத்தரவிட்டான் வீரசிங்கன். அவர்கள் வீரவாகுதேவரை வளைத்துக் கொண்டு ஆயுதங்களை ஏவிப் போர் புரிந்தார்கள். வீரவாகு தேவர் வாளாயுதத்தைச் சுழற்றிச் சுழற்றிச் சேனைகளை வெட்டிக் கொன்றார். அவுணர்கள் இறந்ததால் பெருகிய உதிரம் கடலில் போய்க் கலந்தது. வீரசிங்கனின் சேனைகள் எல்லாம் அழிந்தன. ஆத்திரங் கொண்டு எதிர்த்த வீரசிங்கனையும் எளிதில் சம்ஹாரம் செய்தார் வீரவாகு தேவர்.

வீரவாகு தேவர் இலங்கைக் கரையில் உள்ள மலையின் மூன்று சிகரங்களில் நடுச் சிகரத்தின் மீது பாய்ந்தார். அதனைக் காவல் புரிந்து வந்த அதிவீரனும்


கேஸல்ஸ்


மற்ற அவுணர்களும் நிலைகுலைந்து கலங்கினார்கள். கலக்கத்தைச் சமாளித்துக் கொண்டு எதிர்த்த அதிவீரனையும் அதிவிரைவில் அழித்தார் வீரவாகு தேவர்.

பின்னர் இலங்கையை விட்டு எழுந்தார். அவர் வந்திறங்கிய வேகத்தில் கடலில் அழுந்திய இலங்கை அவர் எழுந்து சென்றதும் மீண்டும் பழைய நிலைக்கு உயர்ந்தது.

வீரவாகுதேவர் வான வழியில் சென்று மகேந்திரபுரியின் பெரும் மதில்களையும் உயர்ந்த கோபுரங்களையும் கூர்ந்து நோக்கினார். மகேந்திரபுரியின் வடக்குவாசலில் கோரன், அதிகோரன் என்ற இரண்டு அசுர வீரர்கள் காவல் செய்து கொண்டிருந்தனர். ஏராளமான யானைகள், தேர்கள், குதிரைகள், காலாட்படைகள் ஆகியன அவர்களுக்கு இருந்தன. 'இந்தப் படைகளை வெல்ல வேண்டுமென்றால் பகல் முழுவதும் கழிந்து விடும். மற்றும் இந்த நகரில் உள்ள இதர சேனைகளையெல்லாம் அழிக்க எவ்வளவோ காலம் ஆகும். அப்படியே அழித்தாலும் சூரபன்மன் வந்து எதிர்ப்பான். கந்தவேளை யன்றி வேறு ஒருவராலும் அவனைக் கொல்ல முடியாது. மேலும் தூதாக வந்த நான் போர் செய்து பொழுதைப் போக்குவது முறையன்று. வந்த வேலையைக் கருதிச் சூரபன்மனிடம் செல்வதே முறை' என்று ஒப்பற்ற புத்தி நுட்பம் படைத்த வீரவாகு தேவர் முடிவு செய்தார். பலத்த காவலுள்ள வடக்கு வாயில் வழியாகச் சண்டையின்றிச் சீக்கிரத்தில் உள்ளே போவது அரிது என்று கருதிக் கீழ்த்திசை வாயிலையடைந்தார். அங்கு மகிஷாட்சன் (மேதிக் கண்ணன்), வீரபானு என்ற இரண்டு அசுரத் தலைவர்கள் வாளும் கையுமாகக் காவல் செய்து கொண்டிருந்தனர். நால்வகைச் சேனைகள் அவர்களுக்குத் துணையாக நின்று கொண்டிருந்தன. ''இந்த வாசலைக் கடந்து செல்வதும் அரிது'' என்று கருதிய வீரவாகு தேவர் தெற்கு வாயிலை நோக்கிச் சென்றார். கயமுகன் என்ற அசுரன் அந்த வாசலில் காவல் புரிந்து கொண்டிருந்தான். அவன் ஆயிரம் யானை முகங்களைக் கொண்டவன். தன்னுடன் போர்செய்வதற்குப் பகைவர்கள் இல்லையே என்று ஏங்குபவன். அவன் ஆகாயத்தில் செல்லும் வீரவாகு தேவரைக் கண்டு ''சீறுகின்ற சிங்கம் இருக்கும் குகையில் மான் வருவதுண்டோ? உன்னை அனுப்பியவர் யார்? நீ வந்த காரணம் என்ன?'' என்று கோபத்துடன் கூச்சலிட்டான்.

கயமுகன் கூறியதைக் கேட்ட வீரவாகு தேவர் சிரித்துக் கொண்டே ''அப்பனே, உயிரை விடுவதற்கு உனக்கு இத்தனை அவசரம் ஏன்? வலுவில் என்னை அழைக்கின்றாயே! வா வா'' என்றார். வீரவாகு தேவர் போரை விரும்பாவிடினும், யுத்தம் புரிய அழைப்பு வந்த பின் அதனை மறுப்பது வீரலட்சணமாகாது என்பதால் கயமுகனுடன் போர் தொடங்கினார். கயமுகன் பறித்தெறிந்த மலைகளையெல்லாம் மாலைபோல் மார்பில் ஏற்றுக் கொண்ட வீரவாகு தேவர் இறுதியில் கயமுகனுடைய மார்பில் ஒரு காலால் உதைத்ததுமே அவன் அலறி விழுந்து உயிர் இழந்தான்.

''கந்தவேளின் கட்டளையை விரைவில் நிறைவேற்ற முடியாமல் இப்படியே அசுரர்களுடன் போர் செய்து காலத்தைச் செலவிடும்படியாயிற்றே'' என்று வருந்திய வீரவாகு தேவர் சூரபன்மனின் நகரத்திற்குள் எளிதில்



செல்ல வழி என்னவெனச் சிந்திக்கலானார். இந்த வடிவத்துடன் அசுரக் காவல்காரர் கண்ணில் படாமல் செல்ல முடியாது என்று கருதிக் கந்தவேளைத் தியானித்து எவரும் காண்பதற்கு அரியதோர் அணுவுருவங் கொண்டு மகேந்திரபுரியின் கிழக்கு வாயிலில் உள்ள கோபுரத்தின் மேல் அமர்ந்தார். 'அணுவிலும் நுணுகியவன்; பெரிதினும் பெரியவன்' என்று வேதம் ஆண்டவனை வருணிக்கிறது. முன்பு பெரிதினும் பெரியவனான பெருமான் வீரவாகுவுக்கு விசுவரூபம் தந்தான். இப்போது அணுவிலும் நுணுகிய அவனே அவருக்குச் சின்னஞ்சிறு உருவு அளித்தான்.

கோபுரத்தின் மீது அணு உருவில் அமர்ந்திருந்த வீரவாகு தேவர் வீரமகேந்திரத்தின் சிறப்புக்களைக் கண்டார். அங்கு நின்ற அளவற்ற சேனைகளைக் கண்டதும், வியாழ பகவான் கூறியதைக் காட்டிலும் அதிகச் சிறப்புடையது வீரமகேந்திரபுரம் என்று எண்ணினார். ''இங்கே யானைகள் எத்தனை? தேர்கள் எத்தனை? குதிரைகள் எத்தனை? காலாட் படைகளோ கடற்கரை மணல்களைக் காட்டிலும் அதிகம்! சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் உள்ள வளங்களையும் வனப்புக்களையும் எப்படித்தான் இந்த ஒரே நகரத்தில் வைத்தானோ? பானுகோபன் சொர்க்கத்தை எரித்தான் என்பது பொய். சொர்க்கம் தன்னைக் காட்டிலும் எவ்வளவோ அழகான இந்த மகேந்திரபுரியைக் கண்டு நாணமும் வெட்கமும் சுடத் தானே எரிந்து அழிந்தது போலும்! இங்கே பௌதிகப் பெருமைகள் எல்லாவற்றையும் கண்டேன். ஆனால் இந்தப் பெருமை எவ்வளவு இருந்தும் என்ன? இங்கு அறம் இல்லை; வாய்மை இல்லை; இரக்கம் இல்லை'' என்று எண்ணினார்.

செந்தாமரை மலர்மீதமர்ந்து வண்டுகள் தேன் பருகுவது போல வீரமகேந்திரபுரியிலிருந்த பெண்கள் மாணிக்க மாளிகைகள் மீது அமர்ந்து கள்ளைப் பருகிக் கொண்டிருந்தனர். அந்த மாளிகைகளிலே வருணன் சிறந்த அரிசியைக் களைந்து கொடுக்க, அவற்றை அக்கினித் தேவன் தன்னைத் தானே தீமூட்டிக் கொண்டு ஊன்களோடு கலந்து பக்குவம் செய்து வைத்தான். அத்தகைய அற்புத உணவு வகைகளை அரக்கர் தம் மனைவியரோடு உண்டு மகிழ்ந்தனர்.


கொடுங்கோலாட்சியில், ஆளும் சக்தி படைத்தோருக்கு உற்றவர் யாவரும் அமித சுகபோகம் பெற்று வாழ்வது வழக்கம். அசுரர்கள் இருக்கும் இடத்தைத் தேடிச் சென்று காமதேனுவும் சிந்தாமணியும் வேண்டியவற்றைக் கொடுத்தன. வாயுதேவனே வீரமகேந்திரபுரியின் வீதிகளைப் பெருக்க, வருணன் பன்னீர் தெளிக்கின்றான்!

''வந்த காரியத்தை விட்டு இந்த நகரத்து வளங்களையே பார்த்துக் கொண்டு காலந் தாழ்த்துவது சரியல்ல'' என்று கருதிய வீரவாகு தேவர் சூரபன்மன் உறையுமிடத்தை அடையக் கருதி ஆகாய வழியாகத் தமது சூட்சும உருவுடன் சென்றார். 'சூரனைக் காணுமுன் என் பிள்ளையைக் கண்டு ஆறுதல் கூறுக' என்று அமரர்கோன் கேட்டுக் கொண்ட நினைவு அவருக்கு வந்தது. உள்ளத்தில் அன்பும், துயரமும், பரிவும் பெருக, தேவரும் சயந்தனும் இந்தக் கேளிக்கை நகரில் எங்கு சிறைப்பட்டு அவலமாக அவதியுறுகின்றனரோ என்று தேடலானார். அசுரரின் தலைமை அமைச்சனாகிய தருமகோபனின் மாளிகைச் சிகரத்தில் தங்கி நகரைத் தம் பார்வையால் துழாவும்போது சயந்தனும் தேவர்களும் சிறையிருந்த இடத்தைக்கண்டுபிடித்தார். **(தொடரும்)**

காஷ்மீர் போக்கே டால்க் உபயோகித்து மணிக்கணக்காக சுகந்தத்துடனும், புதுமையுடனும் இருங்கள்



அன்றலர்ந்த மலர்களின் புதுமையுடனும், சுகந்தத்துடனும்கூடிய காஷ்மீர் போக்கே டால்க் உங்களைச் சூழ்ந்து பரவி இருக்கட்டும்... உங்களைச் சுற்றி அதன் குளுமையான, பூவிதழ்போன்ற மென்மையான ஸ்பரிசத்தையும், வசீகரிக்கும் நறுமணத்தையும் உணர்ந்து அனுபவியுங்கள். பலமணிகளுக்குப் பிறகும், காஷ்மீர் போக்கே டால்க்கின் குன்றாத நறுமணமும், புதுமையும், மலர்க்கொத்துகள் போன்று உங்களைச் சூழ்ந்து நிற்பதை உணர்வீர்கள்.



காஷ்மீர் போக்கே ஒரு உன்னதமான அழகுசாதன டால்க் மட்டுமல்ல, குழந்தைக்கும் ஏற்ற அற்புத டால்க். அது இருவருமே உபயோகிக்கக்கூடிய சௌகரியமான ஒரு பவுடர்!





காஷ்மீர் போக்கே

ஆடவர் விரும்பும் சுகந்தமுள்ள டால்கம் பவுடர்

கால்கேட்டின் தரமான தயாரிப்பு


குமாரின் அறை போலீசாரின் சோதனைக்குள்ளாகிறது.
சார், இந்தச் சாவி அவருடைய மேஜை டிராயரில் இருந்தது.
குமார், இது மாலதியின் அறைச் சாவி தானே?
அவள் எங்கே?
கதை கௌசிகன்
சித்திரம் ரமணி..
7
ஆமாம்...
இது உங்களிடம் இருக்கக் காரணம்?
நான் அவளைத் தேடிச் செல்லும் போது அவள் இல்லாது போனாலும் நான் உள்ளே சென்று அவள் வருகைக்காகக் காத்திருக்க வேண்டும் என்பதற்காகத் தன் அறைச் சாவிகளில் ஒன்றை என்னிடம் கொடுத்திருந்தாள் மாலதி.
மிஸ்டர் குமார், மாலதியின் அறைக்குக் கடைசியாகச் சென்றது நீங்கள் தான். ஆகவே...
அதனாலோ அவள் அறையின் சாவி என்னிடம் இருப்பதனாலோ அவளை நான் தான் கொன்றேன் என்ற முடிவுக்கு நீங்கள் வர முடியாது.
நான் வரவில்லை. சந்தர்ப்பமும் சாட்சியங்களும் அந்த முடிவை நோக்கி எங்களை இழுத்துச் செல்கின்றன. மாலதியின் கொலைக்காகச் சந்தேகத்தின் பேரில் உங்களைக் கைது செய்கிறேன்.
இன்ஸ்பெக்டர், நான் நிரபராதி! மாலதியை நான் கொலை செய்யவில்லை. என்னைக் கைது செய்யும் தவறுக்காகத் தாங்கள் பின்னால் வருந்த வேண்டியிருக்கும்.
சட்டத்தின் கட்டளையை நிறைவேற்றும் ஊழியர்கள் நாங்கள். உங்கள் வாதங்களைப் பரிசீலித்து முடிவு கூற வேண்டியது நீதி மன்றம்.


குமார் கைதியான பிறகு போலீசின் நடவடிக்கைகள் முறைப்படி நடக்கின்றன.
அம்மா, அந்த உடலை உங்களால் அடையாளங் கண்டு கொள்ள முடிந்ததா?
முடிந்தது இன்ஸ்பெக்டர். அது... ஐயோ! எப்படிச் சொல்லுவேன்? என் தங்கை மாலதிக்கு இந்தக் கதியா நேர வேண்டும்..?
உங்களுக்கு யார் மீதாவது சந்தேகம் உண்டா?
மாலதி தனித்து வாழ்ந்து வந்தாள். அவள் வாழ்ந்த சூழ் நிலையைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஆகவே இந்த விபரீதத்துக்கு நான் யாரைக் காரணமாக்க முடியும்?
குமார் என்ற ஒரு கல்லூரி மாணவனின் கை ரேகை அடையாளங்கள் மாலதியின் அறையிலுள்ள பொருள்களில் உள்ளன. அவனைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?
நீங்கள் குறிப்பிடும் அந்த வாலிபனை, தான் காதலிப்பதாக மாலதி கூறியுள்ளாள். அப்படியானால், அந்த வாலிபன் தான்...? ஐயோ!
இப்போது எங்களால் எதுவும் சொல்ல முடியாதம்மா... ஹலோ... டாக்டர்! உங்கள் பிரேத பரிசோதனை முடிந்து விட்டதா?
ஆயிற்று. இதோ எனது ரிப்போர்ட்... உங்களுக்கு வியப்பைத் தரும் விஷயம் இதில் உள்ளது.
இ... சரி! அப்படியா? ம். மிஸ் ரேணுகா, அந்த உடல் மாலதியினுடையது என்பதில் தங்களுக்குத் துளியும் சந்தேகமில்லையே?
இல்லவே இல்லை டாக்டர். ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?
ஒன்றுமில்லை. உறுதிப்படுத்திக் கொள்ளத்தான்... நீங்கள் போகலாம்.
நானும் இப்படித்தான் சந்தேகப் பட்டேன் டாக்டர். ஆனால்...? இப்போது முடிச்சு இறுகி விட்டது. இருக்கட்டும். மி.. டாக்டர் இதைப் பற்றி நீங்கள் யாரிடமும் எதுவும் பிரஸ்தாபிக்க வேண்டாம்.
என் ரிப்போர்ட்டை ரகசியமாக வைத்திருந்து செயல் புரிவது உங்கள் பொறுப்பு. நான் வருகிறேன்.

தொடரும்..

உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டமில்லாததுதான்.



இளமையில் வழுக்கை

இந்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-2, சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022, பம்பாய்-1



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் அசுத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.



Silvikrin


சில்விக்ரீன்—கேச ஆரோக்கியத்துக்கான வழி

SP/1/P/7/65


காணமற் போன நாய்

சாமா


பாப்பா மலர்




'அதோ குண்டு நாய் ஒன்று ஓடி வருகிறது. அதைப் பிடித்து அதோடு 'நாம் விளையாடலாம்' என்றாள் எலிப் பெண். அது காணமற் போன நாய். அதைப் பிடித்துக் கொடுப்பவருக்குப் பெரிய இனாம் கிடைக்கும் என்பது பற்றி



அவர்களுக்குத் தெரியாது. நாய் நின்றது. எலிக் குஞ்சுகளுடன் அது விளையாடியது. எலிப் பெண் அதன் மேல் ஏறிச் சவாரி செய்தாள்....!




திடீரென்று குண்டு நாய்க்கு ஒரு யோசனை தோன்றியது. அந்தப் பரிசைத் தனக்குப் பிடித்த இந்த எலிக் குஞ்சுகளே அடையட்டும் என்ற எண்ணத்துடன் ஓடத் தொடங்கியது.



குளத்திலேயும் குட்டையிலேயும் பாய்ந்து ஓடத் தொடங்கியது. எலிக்குஞ்சுகளும் அதை விடவில்லை. கடைசியில் குண்டு நாய் தன் எஜமானன் வீட்டை அடைந்தது. தன் நாயைக் கண்டவுடன் சிறுத்தையாருக்குப் பேரானந்தம் ஏற்பட்டது.



சிறுத்தையார் தன் நாயைப் பிடித்து வந்த எலிக் குஞ்சுகளுக்கு இரண்டு மசால்வடை பரிசாகக் கொடுத்தது. நாய்க்கு ரொம்பக் கோபம் வந்தது.



போயும் போயும் மசால் வடைதானா பரிசு என்று நாய் மறுபடியும் காணமல் போயிற்று. மசால்வடையும் கிடைக்காது எலிகள் மிகவும் ஏமாற்றமடைந்தன.

அத்தியாயம் இருபத்தொன்று

விவாத வினை

முரட்டு மனிதனான தம்பையா அந்தப் பெண் வேதாவிடம் அத்தனை மென்மையான குரலில் வாஞ்சையோடு பேசியதையும், அவனிடத்தே அவளும் ஒருவித பவ்யக் குழைவோடு உரையாடி விட்டுச் சென்றதையும் ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்த சபேசனுக்கு விந்தை கலந்த வியப்பாகவே யிருந்தது.

''இந்தப் பொண்ணை உனக்குத் தெரியுமா, தம்பி? நச்சியோட தங்கச்சி இவள்!'' என்று சொன்ன தம்பையா, எதையோ நினைத்துத் தனக்குள் நகைத்துக் கொண்டான்.

வேதா, சபேசனைத் தனக்குத் தெரிந்தவனாகக் காட்டிக் கொள்ளாத பொண்ணு என்னை, 'நைனா, நைனா'ன்னு சொன்னதே அதைக் கவனிச்சயா, தம்பி? சின்னப் பிள்ளையி லிருந்தே அப்படித்தான் கூப்பிடும். நல்ல வேளை, அது மூனு மாசத்துக் குழந்தையாகக் கன்னியம்மாவின் கைக்கு வந்தப்ப நான் வெளியிலே இல்லை; ஆறு மாசம் 'உள்ளே' போயிருந்தேன். இல்லேன்னா அந்தப் பொண்ணுக்கு நான்தான் அப்பன்னு இந்த ஊரு பட்டம் கட்டி வைச்சுட்டிருக்கும்!.... என்னடா இது இவன், தலைகால் இல்லாமல் என்னென்னமோ பேசறானேன்னு நினைக்கிறயா?.... ம்... அது ஒரு தனிக் கதை!'' என்றுசொல்லி



ஜெகசிற்பியன்

தால் அவனும் அவளைத் தெரியாத மாதிரி, ''அப்படியா?'' என்று மெல்லத் தலையசைத்தான்.

''ஆமாம், தொரை! ஆனால் அவள் நச்சியோட சொந்தத் தங்கச்சியில்லை! ம்.... அது ஒரு பெரிய கதை !'' என்று கரகரத்த குரலில் முனகிய தம்பையா தெருப் பக்கமாகத் திரும்பி உட்கார்ந்து கொண்டு எங்கோ வெறித் துப் பார்க்கலானான்.

'அந்தக் கதையில் ஒரு பகுதி எனக்கும் தெரியும்' என்று உள்ளூற நினைத் துக் கொண்டான் சபேசன்.

தம்பையா திடீரெனத் தனக்குத் தானே சிரித்துக் கொண்டு, ''அந்தப் மீண்டும் சிரித்த அவன், ''அதெல் லாம் உனக்குத் தெரிய வேண்டாம்; ஆனல் ஒண்ணு மட்டும் தெரிஞ்சுக்க! உன்னோட தோஸ்து நச்சிக்குப் பேர் வைச்சாப்பலே இந்தப் பொண்ணுக் கும் நான்தான் 'வேதம்மா'ன்னு பேர் வைச்சேன்; அது என் அம்மா வோட பேரு!'' என்றான் பக்தி கலந்த பெருமைக் குரலில்.

இந்தச் சமயம் கட்டைக் குட்டை யாகத் தோற்றமளித்த ஓர் இளைஞன் கையில் எதையோ மறைத்து எடுத்துக் கொண்டு வீட்டினுள் விரைந்து சென்ற தைக் கண்ட தம்பையா, ''யாரு, கரி வட்டைக் குப்பனு? ஏண்டா, இவ்

வளவு வேட்டு?'' என்று கேட்டுக் கொண்டே ஆவலுடன் அவனைப் பின் தொடர்ந்தான்.

திண்ணைத் தூணைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்த சபேசன் அன்று காலை தாழ்வாரத்தில் செருகி வைத்து விட்டுப் போன தலையணை இருக்



கிறதா என்று அண்ணாந்து பார்த்தான். அங்கே அது இல்லை. தம்பையா உள்ளே கொண்டு போய் வைத்திருக்கலாம். ஆனால், மும்முரமாகப் பயிற்சி நடந்து கொண்டிருக்கும் இந்த வேளையில், அதைத் தேடிப் பார்த்து எடுத்து வர வீட்டினுள் சென்றால் நேற்றுப் போலவே சீடப் பிள்ளைகள் தன்னிடம் தங்கள் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்து விடுவார்களோ என்று பயந்து பேசாமல் இருந்து விட்டான்.

இன்னும் மணி எட்டுகூட ஆகவில்லை. இதற்குள் எப்படிப் படுத்துத் தூங்குவது? அந்தப் பொதுக் கூட்டம் நடக்கும் இடத்துக்குப் போய்க் கொஞ்ச நேரத்தைக் கழித்துவிட்டு வரலாமே என்று எண்ணி அங்கிருந்து கிளம்பினான் சபேசன்.

நச்சியின் வீட்டைக் கடந்தபோது அவன் கால்கள் தாமாகவே தயங்கி நின்றன. உள்ளார்ந்த அச்சத்துடன் அவ்வீட்டைத் திரும்பிப் பார்த்தான். அங்கே வாசல் நிலை மீது வேதா சாய்ந்து கொண்டு நிற்பது தெரிந்தது. ஆனால் அவளுக்கு இவன் தெருவிலே நின்று கொண்டிருப்பதைப் பார்க்க முடியும் என்று தோன்றவில்லை.

'அந்தப் பெண்ணிடம் போய் ஏதாவது இரண்டு வார்த்தைகள் பேசி

விட்டு வரலாமா?' என்ற ஆவல் அவன் மனத்திலே கிளர்ந்தது. உடனே, 'அவனிடம் என்ன பேசுவது? அப்படிப் பேச வேண்டிய அவசியம்தான் என்ன?' என்ற கேள்விகளுடன், 'கல்வியம்மாள் விட்டிலிருந்து தன்னைப் பார்க்க நேர்ந்தால்?' என்ற பயமும் எழவே, 'நமக்கு ஏன் இந்த வீண் பொல்லாப்பு?' என்று எண்ணியவனாய் மேலே நடக்க ஆரம்பித்தான்.

பொதுக்கூட்டம் நடந்து கொண்டிருந்த இடத்தை நெருங்கின போதே அங்கு மருதமுத்துதான் இவ்வளவுநேரம் வீராவேசமாகப் பேசிக் கொண்டிருக்கிறார் என்பது அவனுக்குத் தெரிந்து விட்டது. அவரைப் பார்த்ததுமே அன்றொரு நாள் கடற்கரையில் நடந்த சம்பவம் அவனது நினைவுத் திரையில் முன்னெனத் தைத்துத்தலை தூக்கியது. 'அன்று போல் இன்றும் ஏதாவது கலாட்டா நடந்து, விதி தன்னை அதிலே சிக்க வைத்து விட்டால் என்ன செய்வது?' என்ற பீதியுடன் தொலைவிலேயே நின்று கொண்டான்.

அப்படி அங்கு தனியாக நிற்பதும் சரியல்ல என்று அவனுக்குப் பட்டது. தம்பையாவின் வீட்டுக்கே போய்விடுவோம் என்ற முடிவுடன் திரும்பிய அவன் பார்வையில், அந்தத் தெருவின் வலது பக்கம் ஒரு கீற்றுக் கொட்டகை வாசலுக்கு மேல் யாரோ நியாகி ஒருவரின் பெயரோடு 'படிப்பகம்' என்ற போர்டு ஒன்று தொங்கிக்கொண்டிருப்பது தெரிந்தது.

படிப்பகம் என்றால் வாசகசாலை என்றுதானே அர்த்தம்? அங்கு போய் ஏதாவது புத்தகமோ, பத்திரிகையோ படித்துக் கொஞ்சம் நேரத்தைப் போக்கலாம் என்ற நினைப்புடன் அந்தக் கொட்டகையை நோக்கி நடந்த சபேசன் வெளியிலேயே தயங்கி நின்று உள்ளே எட்டிப் பார்த்தான். அவன் நினைத்தது போல் அங்கு புத்தகங்களோ, பத்திரிகைகளோ இருப்பதாகத் தெரியவில்லை. ஏழெட்டு வாலிபர்கள் கும்பலாக உட்கார்ந்து பீடி, சிகரெட் குடித்துக் கொண்டும், துர்ப் பாஷையில் பேசிக் கொண்டும் சீட்டு ஆடுவதில் மும்முரமாக ஈடுபட்டிருப்பது மட்டுமே தெரிந்தது.

வியப்பும் திகைப்புமாகப் பின்னால் நகர்ந்த சபேசன், "இன்னா நைனா, அங்கே பார்க்கிறே?" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான். அன்றொரு நாள் இந்தப் பேட்டையில் கட்சிக் கொடிகள் பறக்க விடுவதன் காரணங்களை விளக்கிச் சொன்ன கொலுத்து மேஸ்திரிதான் அங்கு சிரித்த படியே நின்றுகொண்டிருந்தான்.


"ஒன்றுமில்லே, ஐயா! வாசகசாலையில் ஏதாவது புத்தகம் படிக்கலாம் என்று வந்தேன்....."

"இன்னா சொன்னே? வாசகசாலையா? அது எங்கே இருக்குது?"

"இதோ, போர்டு தொங்குகிறதே, பெரியவரே!"

"ஓ,... படிப்பகம்னா, நூஸ் பேப்பர்—பொஸ்தகம் படிக்கிற இடமாக்கும்னு நினைச்சுக்கிட்டியா? நல்ல ஆளுதான் போ! நீ இந்தப் பேட்டைக்குப் புதுச்சா நைனா?" என்று கேலியாகக் கேட்டுச் சிரித்த மேஸ்திரி, "நூஸ் பேப்பராவது, பொஸ்தகமாவது! அதெல்லாம் இங்கே இருக்காது. வேணுமின்னா சீட்டுக்கட்டு இருக்கும். பின்னே இன்னாத்துக்கு இந்தப் போர்டுன்னு கேட்கிறயா? அது ஒரு சுமாலுக்காகப் போட்டு வச்சிருக்குது; சொல்றேன் கேளு!" என்றவாறு தொண்டையைக் கனைத்து விட்டுக் கொண்டு தொடர்ந்து சொன்னான்:

"மூணு வருஷங்களுக்கு ஒரு தபா, அஞ்சு வருஷங்களுக்கு ஒரு தபா எதெதுக்கோ தேர்தல் நடக்குது இல்லையா? அந்தத் தேர்தல்லே நிக்கிற வேட்பாளருங்க — அது இன்னா வேட்பாளர்னு கேட்கிறயா? என்னமோ புதுச்சா சொன்னாங்க; புடிச்சுக்கிட்டேன். வேட்டை ஆடறவங்கன்னு இதுக்கு நான் அருத்தமும் பண்ணிக்கிட்டேன். வேறே இன்னவா இருக்கும்? சரி, அதை உடு!—வோட்டு கேட்கிறதுக்கு வீடு வீடா ஏறி இறங்கணும். அதோடு கூட எதனாச்சும் 'அது' கொடுக்கிறதுன்னு ஒவ்வோர் ஆண் பொண்ணையும் பார்த்துக் கொடுக்கணும். அப்படிக் கொடுக்கிறதையும் ரொம்ப சாக்கிரதையாக் கொடுக்கணும். இந்தப் பேஜாரெல்லாம் அவங்களுக்கு இன்னாத்துக்குன்னு இங்கே இருக்கிற ஆளுகள் ஏழெட்டுப் பேராக ஒண்ணு சேர்ந்து இது மாதிரி ஒரு சங்கம், ஒரு மன்றம், ஒரு படிப்பகம்னு போர்டு தொங்கப் போட்டுப் பிட்டு, அதுகளுக்குத் தலைவர், செயலாளர்னு சொல்லிக்கிட்டுக் கையிலே கம்மணுங்காட்டியும் ஒரு பையையும் வைச்சுக்கிட்டு, நேரே பலான ஆசாமிகளைப் போய்ப் பாப்பாங்க. 'இந்தத் தெருவுலே இத்தனை வோட்டு இருக்குது; இவ்வளவு பணம் கொடுத்தால் அது முச்சூடையும் உங்க பொட்டியிலே கொண்டாந்து சாய்ச்சுப்பிடறோம்' அப்படீன்னு பேரம் பேசுவாங்க. இல்லே, தேர்தலில் நிற்கிறவரே இந்த



''நான் காப்பி கூடச் சாப்பிட்டாகி விட்டது. இப்போது, பூரி கிழங்கு சாப்பிடச் சொல்கிறீர்களே, ஏன்?''

''அது நன்றாக இருக்கிறது என்று நீங்கள் சொன்னால், எனக்காக ஆர்டர் பண்ணலாமென்றுதான்!''

ஆட்களைக் கூப்பிட்டு, இம்மாதிரி பேரம் பேசறதும் உண்டு. பேசி முடிச்சதும் வோட்டுக்கு ரெண்டு மூணுன்னு கணக்குப் பண்ணி மொத்தமாப் பணம் கொடுத்து விடுவார். கொடுக்கும்போது சும்மா கொடுக்க மாட்டார். முருகன் படத்து மேலேயோ, வெங்கடாசலபதி படத்து மேலேயோ சத்தியப் பெரமாணம் அடிக்கச் சொல்லி அப்புறம்தான் கொடுப்பார். அவ்வளவுதான். சாமி, சத்தியமெல்லாம் அடுத்தநிமிசமே காத்தில் பறந்துவிடும். அந்த ஏமெட்டுப் பேரும் பணத்தைப் பங்கு போட்டு எடுத்துக்குவாங்க. சனங்கள் கைக்குப் போகாது. ஆனால் அவங்களை நயங் காட்டியோ, பயங் காட்டியோ வோட்டுச் சாவடிக்குத் தள்ளிக்கிட்டுப் போயிடுவாங்க. ஒரே பேட்டையில் இருக்கிறவங்க பேச்சைத் தட்டி நடக்க முடியுமா? மேலும், அவங்க எல்லாத்துக்கும் துணிஞ்சவங்களாச்சே! யாராவது ரொம்ப மக்கார் பண்ணினால் அவங்களுக்கு மாத்திரம் ஒண்ணோ ரெண்டோ கிடைக்கும். இதிலே இன்னொரு வேடிக்கை இன்னான்னா, அந்த அபேட்சகருக்குத் தெரியாமல் இந்த அபேட்சகர் கிட்டேயும், இவருக்குத் தெரியாமல் அவரு கிட்டேயும் பேரம் பண்ணிப் பணத்தை வாங்கிக்கிட்டு, ரெண்டு பேரையும் அம்போன்னு 'டீல்' மேலே விட்டு விடறதும் உண்டு.''

இந்த விவரங்களைக் கேட்டு வெலவெலத்துப் போன சபேசன், ''அது சரி, ஐயா! மூன்று வருஷங்களுக்கு ஒரு முறையோ, ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறையோ வருகிற தேர்தலின் போது, யாரோ ஒருவரிடம் பணம் பறிப்பதற்காகவா இப்படி வருஷம் முழுவதும் போர்டு போட்டுக்கொண்டிருப்பார்கள்?...'' என்று தணிந்த குரலில் வினவினான்.


''இருக்கட்டுமே நைனா! அதனாலே யாருக்கு இன்னா நஸ்டம்? அந்தச் சமயம் போக மத்த நாட்களிலே 'மங்காத்தா' சீட்டு ஆடவோ, படுத்துத் தூங்கவோ உதவும் இல்லையா?'' என்று சிரித்த மேஸ்திரி, ரகசியக் குரலில் மேலும் சொன்னான்: ''அந்தப் பலான காரியத்துக்காக மட்டும் இந்தச் சங்கங்கள், மன்றங்கள், படிப்பகங்கள் இருக்குதுன்னு நினைக்காதே! இம்மாதிரியான போர்டுகளைக் கழட்டிப் போட்டுவிடாமல் கட்சித் தலைவர்களே காபந்தும் ஊக்கமும் கொடுக்கிறாங்க. ஏன்னு, இதுகளை அவுங்க இன்னும் வேறே எதெதுக்கோ உபயோகிக்கிறாங்க!.... இன்னா நைனா, உலகம் புரியாமல் கேழ்வி மேலே கேழ்வி கேட்கிறே?''

சபேசனின் மனம் வேதனையால் எரிந்தது. தன்னை மீறிய ஆத்திரத்துடன் அந்த மேஸ்திரியைப் பார்த்து, ''ஏன், கொத்தனாரே! நம்முடைய தேவைகளையும் உரிமைகளையும் குறைகளையும் மத்திய, மாநில அரசாங்கங்களுக்கோ, நகர பரிபாலனங்களுக்கோ எடுத்துச் சொல்லி, நமக்கு நன்மை செய்வதற்காக நாமே ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கிற நமது சொந்த விஷயத்தில், இப்படி வியாபார ரீதியிலே நடந்து கொள்ளலாமா? பால் ஊட்ட வருகிற தாயிடம் பால் குடிக்கப் போகிற குழந்தை அதற்காகக் கூலி கேட்கிற மாதிரி இல்லையா இது?'' என்றான்.

இதைக் கேட்டு அலட்சியமாக நகைத்த மேஸ்திரி கேலிக் குரலில் சொன்னான்: ''அதாவது, வோட்டுக்காகச் சில சனங்கள் பணம் வாங்கிக்கிறது தப்புன்னு சொல்றியா, தம்பி? தப்புத்தான்; இல்லேங்கலே! ஆனால், தேர்தல்லே நிக்கிறவங்க, என்னமோ லட்சம் லட்சமா லாபம் வரக்கூடிய ஒரு பெரிய வியாபாரத்தை ஆரம்பிக்கப் போகிற மாதிரி ஆயிரம் ஆயிரமாப் பணத்தை வாரிவிட்டு, படாடோபமா விளம்பரம் பண்றாங்களே, அதைப் பார்க்கிற சனங்கள் இன்னா நினைக்கும்? 'ஓகோ, இவங்க நமக்காகத் தேர்தல்லே நிக்கல்லே; தங்களுக்குப் பசையான ஏதோ நல்ல பொழைப்பு தேடிக்கிறதுக்காகவே—இந்தச் சூதாட்

பிரபல பல்வைத்திய நிபுணர்கள் நிரூபித்துள்ளனர்

கால்கேட் குளோரோபில் ஈறுகளைப் பலப்படுத்துகிறது என்று



நலமாக உங்கள் ஈறுகளைத் தேய்த்துக்கொள்ளுங்கள் என்று பல் வைத்தியர்கள் உபதேசிக்கின்றனர். இதனால் விசேஷ குளோரோபில் லின் முழுப்பலனையும் கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டில் பெற்று ஈறுகளை உறுதியாகவும், ஆரோக்கியமாகவும் ஆக்குவதுடன் பயோரியா வராமலும் தடுக்க முடியும். இந்த மேன்மையான குளோரோபில் டூத்பேஸ்ட், உலகத்தில் பெரிய பல் தேய்க்க உதவும் சாதனங்களைத் தயாரிப்பவர்களின் தயாரிப்பே ஆகும்.

வாயிலிருந்து சொத்தையாக்கும் கிருமிகளை நீக்கிவிடுகிறது. கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட்டுடன் ஒழுங்காகவும், முக்கியமாக சாப்பிட்டவுடனேயும் பல்துலக்கி, ஈறுகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் உணவுத் துணுக்குகளையும் கிருமிகளையும் நீக்கி, பற்கள் சொத்தை யாகாமல் தடுங்கள்.

வாயின் துர்நாற்றத்தை அதிதீவிரமாக நீக்குகிறது. வாய் துர்நாற்றத்தை அளக்கும் "ஆஸ்மோஸ்கோப்" சோதனை மூலம் பரிசோதித்ததில், கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட், வேறு எந்த சாதாரண டூத் பேஸ்ட்டையும் விட மிகவும் தீவிரமாக வாயின் துர்நாற்றத்தை நீக்கி, [illegible] புதுப்பித்து சுத்தமாக்குகிறது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

வேறு எந்த டூத் பேஸ்ட்டிலும் இதை விட அந்த வீரிய குளோரோபில் இல்லை. குழந்தைகள் அதன் இனிய பெப்பர்மிண்ட் வாசனையை விரும்புகின்றனர்.



பணத்தை மிச்சப்படுத்துங்கள் பெரிய சைஸை வாங்குங்கள்!

CTPA. Q. 11 Tam

த்திலே குதிக்கிறாங்களாக்கும்னுதான் நினைப்பாங்க! இப்படி நினைச்சப்புறம் அவங்களோட வோட்டின் புனிதம் மறந்து போகுது; அதை ஒரு செங் கல்லாவோ, சிமின்ட் மூட்டை யாவோ நினைச்சுப் பேரம் பண்ண ஆரம்பிச்சுடறாங்க! இது அவங்க தப்பான்னு கேழ்க்கிறேன்?''

வாயடைத்துப் போன சபேசன், சில விநாடிகளுக்குப் பின் கசந்த குரலில் சொன்னான்: ''கொத்தனாரே! நீங்கள் சொல்கிற இந்த நியாயம் தேர்தல் நடக்கிறவரையில் சரியாக இருக்கலாம். பிறகு இதன் விளைவு எத்தனை பாதக மானது என்பதை யோசித்துப் பார்த் தீர்களா? உதாரணத்துக்கு ஒன்று சொல்கிறேன்: தேர்தலில் நிற்கும் ஓர் அபேட்சகரிடம் ஒரு ரூபாயோ இரண்டு ரூபாயோ வாங்கிக்கொண்டு ஒருவன் வோட்டுப் போடுகிறான் என்று வைத் துக்கொள்வோம். அந்த அபேட்சகர் அதிக வோட்டுகள் வாங்கி ஜயித்து விடுகிறார் என்றும் நினைத்துக் கொள் வோம். பணம் பெற்றுக்கொண்டு வோட்டுப் போட்டவனுக்கு ஒரு பிள்ளை இருக்கிறான்; அவனை உயர் கல்விக் காகப் பெரிய பள்ளியொன்றில் சேர்க்க வேண்டும். அல்லது அரசாங்க, நகர சபை அலுவலகங்களில் வேலை பண் ணித் தர வேண்டும். அல்லது அவனே ஒரு டீக்கடையோ, க்ஷவரக் கடையோ வைக்க லைசென்ஸ் பெற வேண்டும். இவற்றுக்காக அந்த ஜனப் பிரதி நிதியிடம் சிபாரிசுக் கடிதமோ, மனு வில் நற்சாட்சிக் கையெழுத்தோ வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட லாம். அவன் அவரிடம் போய்க் கேட்கிறான். அவனைப் பார்த்ததுமே அவருக்குப் பழைய ஞாபகம் வந்து விடுகிறது, 'இவன் நம்மிடம் பணம் வாங்கிக்கொண்டு வோட்டுப் போட்ட வனாயிற்றே' என்று. அதை மனத்தில் வைத்துக்கொண்டு அவனுக்கு ஒரு சிபாரிசுக் கடிதம் கொடுக்க, அல்லது ஒரு மனுவில் கையெழுத்துப் போட்டுத் தர, ஐந்தோ பத்தோ பணம் கேட் கிறார் என்று கற்பனையாக வைத்துக் கொள்வோம். இவன் என்ன செய் வான்? 'அட, பாவி! அதைச் செய் கிறேன், இதைச் செய்கிறேன் என் றெல்லாம் சொல்லி வோட்டு வாங்கிக் கொண்டு இப்போது எங்களிடமே லஞ் சம் கேட்கிறானே' என்று சொல்வானா? அப்படிச் சொல்லத்தான் அவனுக்கு வாய் வருமா? ஏனென்றால், அவர் கேட்பதிலும் ஓரளவு நியாயம் இருக் கிறதே! ஒன்றிரண்டு ரூபாய்க்காகத் தன் வோட்டை விற்ற குற்றத்துக்கு அவன் அவரிடம் ஐந்தோ பத்தோ 'அபராதம்' செலுத்தத்தான் வேண்டி யிருக்கும். மூன்று அல்லது ஐந்து வரு ஷங்களில் இந்த அபராதத்தோடு முடிந்து விடுமா? மேலும் பல காரிய சித்திக்காக இன்னும் எத்தனையோ 'அபராதங்களை' அவன் செலுத்த வேண்டி நேரிடலாம். இது அவனுக்கு, அவனுடைய குடும்பத்துக்கு, அவன் வசிக்கும் பேட்டைக்கு, அவன் வாழும் நாட்டுக்கு எவ்வளவு பெரிய தீங்காக, எத்தனை பெரிய நஷ்டமாக முடிந்து விடுகிறது!''

தன் ஆத்திர உணர்ச்சியைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாமல், மேலும் பொரிந்து தள்ளினான் சபே சன்: ''ஜனநாயக அரசியலை உயிர் மூச்சாகக் கொண்டிருக்கும் ஒரு நாட் டின் ஜனப் பிரதிநிதியிடம் இயற்கை யாகவே ஓர் ஆழ்ந்த ஜனாபிமானமும், நேர்மை உணர்ச்சியும், சத்தியத்தில் நம்பிக்கையும், தரும நெறிகளில் நாட்டமும் அமைந்திருக்க வேண்டியது அவசியமாகிறது. இத்தகைய உயர் பண்புகள் கொண்ட ஒருவரே ஜனங் களால் ஜனப் பிரதிநிதியெனத் தேர்ந் தெடுக்கத் தகுதியுடையவராவார். நிஜ மாகவே ஒருவர் தேர்தலுக்கு நிற்கு முன் இம்மாதிரியான பண்புகள் நிரம்பப் பெற்றிருந்தாலும் தேர்தல் சமயத்தில் ஜனங்கள் அவரிடம் நியாயமற்ற முறை யிலே நடந்து கொள்வதிலிருந்து அவை சிதறிப் போகலாம் அல்லவா? இதற்கு நம் கண் முன்னே இப்போது எத்தனை யெத்தனையோ உதாரண புருஷர்கள் இல்லையா? ஒரு நல்ல மனிதரை நாமே சேர்ந்து கெடுத்து விட்டுப் பிறகு அவரைப் பொல்லாதவர் எனத் தூற்று வதில் பொருள் இல்லையே! இந்த வகையில் ஒரு ஜனப் பிரதிநிதியை நாம் கெடுத்து விட்டோமானால் நமக்கு அவரால் நேரிடையாகவும் மறைமுக மாகவும் ஏற்படக் கூடிய தீமைகளை நினைத்துப் பார்க்க வேண்டாமா?... தீதான ஒரு சட்டத்தை அல்லது திட் டத்தை — அது தீதானது என்று தெரிந்தோ தெரியாமலோ — அரசாங்கம் அல்லது நகர சபை கொண்டு வரும்போது, அந்தச் சட்டத்தில் உள்ள— அல்லது திட்டத்தில் உள்ள — சாதக பாதகங்களை, மக்களிடத்தே பேரன்பும் பெருமதிப்பும் கொண்ட பிரதிநிதி களால்தான் அலசி ஆராய்ந்து வன்மை யாக எடுத்துச் சொல்ல முடியும். மக்களை மதிக்காதவர்கள், அவர்களைக் கூலிப் பட்டாளங்களாகவோ, ஆட்டு

மந்தைகளாகவோ நினைப்பவர்கள் அம் மாதிரியான காரியத்தைச் செய்வார்களா? அப்படிச் செய்ய வேண்டுமென்ற பொறுப்பு உணர்ச்சியோ, மனச்சாட்சியோ அவர்களிடம் இருக்குமா? தம்மிடம் பணம் வாங்கிக்கொண்டு வோட்டுப் போட்ட மக்களை எப்படியும் பழி வாங்க வேண்டும் என்ற வெறிப் போக்கே அவர்களிடம் மிகுந்திருக்கும். அதனால் அவர்கள் எதையும் சீர்தூக்கிப் பாராமல் எல்லாவற்றுக்கும் கை உயர்த்தி ஆமோதித்துவிடலாம் அல்லவா? இதையெல்லாம் கேவலம் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய்களுக்காகத் தமது உயிர்போன்ற வோட்டுக்களை விற்கத் துணியும் ஏழை மக்கள்எண்ணிப் பார்க்கவேண்டாமா?''

கொளுத்து மேஸ்திரி அவனைக் கூர்ந்து பார்த்தான். பிறகு ஏதோ சந்தேகம் கொண்டவன்போல் பின்னால் நகர்ந்து, ''அது சரி, நைனா! இந்தப் பேட்டையிலே நீ எந்த வீட்டுப் புள்ளாண்டான்?'' என்று கேட்டான்.

சபேசனுக்கு இப்போதுதான் தன் நினைவு வந்தது. உணர்ச்சி வேகத்தில் அவனிடம் ஏதேதோ பேசிவிட்டோமே என்ற திகிலுடன், ''என்னைப் பார்த்ததில்லையா? போன வாரம் கூட இங்கே பறக்கும் கொடிகள் சம்பந்தமாக நாம இரண்டு பேரும் பேசிக்கொண்டிருந்தோமே!'' என்று அசட்டுச் சிரிப்புடன் இழுத்தான்.

''ஆமாம்; அதுக்கு முன்னாடி உன்னை இங்கே பார்த்ததில்லையேன்னுதான் கேட்கிறேன். எந்தத் தெருவிலே குடியிருக்கிறே?''

சபேசன் தயங்கினான். கன்னியம்மாவின் வீட்டையோ தம்பையாவின் வீட்டையோ குறிப்பிட்டுச் சொல்ல அவனுக்கு விருப்பமில்லை. ''நான் இந்த இடத்துக்குப் புதிசு. சும்மா... இப்படி... பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்...'' என்றவாறு அங்கிருந்து நழுவிச் சென்றான்.


மேஸ்திரியின் சந்தேகம் வலுத்திருக்க வேண்டும். அவன் விரைந்து போய், படிப்பகத்தில் சீட்டாடிக்கொண்டிருந்த வாலிபர்களிடம் ஏதோ இரகசியமாகச் சொன்னான். உடனே அவர்கள் தெருவுக்கு வந்து எட்டிப் பார்த்தார்கள். சிலர் அங்கிருந்து நழுவி மறைந்தனர். ஒருவன் மட்டும் சபேசனைப் பின்தொடர்ந்தான்.

தம்பையாவின் வீட்டுக்கு வந்து சேர்ந்த சபேசன் திண்ணையோரம் தயங்கி நின்று மெல்ல உள்ளே எட்டிப் பார்த்தான்.

தலை தொங்கித் துவளக் கட்டிலில் உட்கார்ந்திருந்த தம்பையா யாரையோ வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டிக்கொண்டிருந்தான். சீடப் பிள்ளைகளில் சிலர் மட்டுமே பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். மற்றவர்கள் ஒரு மூலையில் உட்கார்ந்து எதையோ தின்று கொண்டும் பருகிக் கொண்டுமிருந்தனர். இன்று அவர்களும் தங்கள் குருவோடு சேர்ந்து 'ஜோதி'யில் கலந்து விட்டார்கள் போலும்!

சபேசனுக்குத் தூக்கம் கண்ணைச் சுற்றியது. திண்ணையில் படுத்துவிடலாமா என்று நினைத்தான். தலையணை ஞாபகம் வந்தது. நன்றாகத் தூங்க வேண்டும் என்ற ஆசை அதைத் தேடி எடுத்து வர உந்தியது. மெல்ல வீட்டினுள் சென்றான்.

அவனைப் பார்த்ததுமே சீடப்பிள்ளைகளுக்கு உற்சாகம் தலைக்கேறியது. நேற்றுப் போலவே ஒவ்வொருவனாக வந்து அவனைப் பரிசோதித்துத் தங்கள் திறமையை அவனிடம் காட்ட ஆரம்பித்தார்கள். நேற்றை விட இன்று அவர்களின் 'பரிசோதிப்பு' முறை தீவிர கதியை எட்டியது. (தொடரும்)



உலகெங்கும்
ஏற்கப்படுகின்றன!
ஓரியண்ட்
விசிறிகள்
ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிட்.
கல்கத்தா - 54



''டாக்டர் கண்ணப்பர் திகைத்துப் போய் நின்றார். தம்மைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரும்படி கூப்பிட்டதைக் கேட்டு அவர் பயந்துவிடவில்லை. அந்த மையிருளில் கறுப்பு உடை அணிந்திருந்த தம்மையும், கறுப்புப் புடவை உடுத்திக் கொண்டிருந்த தமது மனைவியையும் பற்றி அந்தக் குரல் வர்ணித்ததைக் கேட்டுத்தான்...'' என்று வசந்தன் தான் பாதியில் விட்ட கதையைத் தொடர்ந்து மாதங்கிக்குச் சொல்லிக் கொண்டு வந்தான்.

மாதங்கியும் அவனும் அன்று ஒருவர் பின் ஒருவராகப் பஸ் க்யூ வரிசையில் நின்று கொண்டிருந்தார்கள். மாதங்கிக்கு முன்னாலே மூன்று நான்கு சீக்கிய ஸ்திரீகள். அவர்களின் உடல்களின் பகுதிகள் க்யூ வரிசைக்கு வெளியே இரண்டு பக்கங்களிலும் படர்ந்திருந்தன. வசந்தனுக்குப் பின்னால் ஐந்து, ஆறு கூர்க்காக்கள். அவர்கள் வீரத் தமிழர்களின் வீடுகளைப் பாதுகாப்பதற்காக நேப்பாளத்திலிருந்து அன்றுதான் வந்திருந்தனர். வசந்தனும் மாதங்கியும் தங்கள் சொந்த விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொள்ளுகிறார்களாக்கும் என்று அவர்களுக்கு முன்னாலேயும் பின்னாலேயும் நின்றுகொண்டிருந்த தமிழ் தெரியாதவர்கள் நினைத்தார்கள். வசந்தன் சொன்னான்:

''கண்ணப்பர் ஆச்சரியத்திலாழ்ந்திருந்த போது, ''ஓஹோ! அந்தப் பெண் பிள்ளை

நாட்டிய பொக்கிஷம் எங்கே?

தமிலன்

யின் கையைப் பிடித்துக் கொண்டிருந்போல் இருக்கிறது. நழுவி விடலாமென்று? என்னிடமிருந்து தப்பிவிட முடியாது. மரியாதையாய் வந்துவிடுங்கள்'' என்று அந்தக் குரல் சொல்லிற்று. டாக்டர் இதைக் கேட்டு மேலும் திகைத்துப் போனார். தாம் செய்வதை எப்படிப் பார்த்திருக்க முடியும் என்று எண்ணி அவர் பிரமித்துவிட்டார். பிறகு சமாளித்துக் கொண்டு ''நான் வருகிறேன்'' என்று கூறித் தம்மிடமிருந்த ஒரு சிறிய 'டார்ச் லைட்' வெளிச்சத்தைப் போட்டார்.

அவரை நோக்கிப் பலசாலியான ஓர் ஆள் வந்து கொண்டிருந்தான். வரும்போதே அவன் ஒரு மூக்குக் கண்ணாடியை மாட்டிக் கொண்டே வந்தான். அவன் டாக்டர் நின்ற இடத்துக்குச் சற்றுத் தூரத்திலேயே நின்று கொண்டான். அவன் அவருடனிருந்த ஸ்திரீயைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. ''நான் ஒரு போலீஸ்காரன். என் அடையாளச் சீட்டு இதோ இருக்கிறது!'' என்று கூறித் தனது சட்டைப் பையிலிருந்து ஒரு வட்டமான வில்லையை எடுத்துக் காண்பித்தான். பிறகு, ''நீங்கள் உங்களைப் பற்றி என்ன சொல்லிக் கொண்டாலும் நான் நம்பப் போவதில்லை. நேற்று ராத்திரி ஒரு பெரிய மனுஷன் தாம் தம்முடைய மனைவியோடு வந்திருப்பதாகச் சொன்னார். ஆனால் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போனேன். அது யாரோ பெண் பிள்ளை. அதைப் பற்றிக் காலை தினவதந்திப் பத்திரிகையில் முதல் பக்கத்திலேயே போட்டிருந்தது. நீங்கள் தயவுசெய்து போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து எஸ் இன்ஸ்பெக்டரிடம் நிரூபித்துவிட்டுப் போகலாம். உங்கள் கறுப்புக்கார் அதோ இருக்கிறதே அதில் ஏறிக்கொண்டு மெதுவாக ஓட்டி வாருங்கள். நான் என் சைக்கிளில் பின்னோடு வருவேன்.



எம். பி. பி. எஸ். 9187 என்ற உங்கள் வண்டி நம்பரைக் குறித்து வைத்துக் கொண்டிருக்கிறேன். தாங்கள் வேகமாக ஓட்டிச் சென்றால் போலீஸ் விஸிலில் அடிப்பேன். வண்டியில் ஏறிக் கொள்ளுங்கள், பார்க்கலாம்!'' என்று அவன் மரியாதையாகவே சொன்னான்.

டாக்டர் கண்ணப்பர் அவன் கூறியதைச் செய்தார். அவர் தம் மனைவியுடன் போலீஸ் ஸ்டேஷனுக்குள் சென்று ஸப் — இன்ஸ்பெக்டர் இருந்த அறைக்குள் நுழைந்தார். தமது தலையில் கட்டியிருந்த மப்ளரை அவிழ்த்தார்.

''யாரு, டாக்டரா? எங்கே இந்த வேளையில் அம்மாவைக்கூட அழைத்துக் கொண்டு வந்திருக்கிறீர்களே!'' என்று சப்-இன்ஸ்பெக்டர் ஆச்சரியத்துடன் கேட்டார்.

''ஒன்றுமில்லை, நாங்கள் கல்யாணம் செய்துகொண்டது முதல் இருவரும் சேர்ந்து வெளியே போகவே சந்தர்ப்பம் ஏற்பட வேலை ஒழியவே இல்லை. இன்றுதான் கடற்கரைப் பக்கம் போனோம். இந்தப் போலீஸ்காரர் எங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக அழைத்துக் கொண்டு வந்தார்'' என்று சிரித்துக் கொண்டே வேடிக்கையாகக் கூறினார்.

''யாரு, இம்மையாவா? அளவுக்கு மீறிக் கடமையைச் செய்யும் பைத்தியம் அவனுக்கு உண்டு!'' என்றார் ஸப் - இன்ஸ்பெக்டர்.

தான் அணிந்திருந்த கறுப்பு மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கொண்டே டாக்டரைக் கவனித்து வந்த இம்மையா அவர் மப்ளரை அவிழ்த்ததும் பார்த்தபோது திகைத்துப் போனான்.

''டாக்டர் கண்ணப்பர் ஸாரா? தாங்கள் தலையில் துணி சுற்றியிருந்ததால் எனக்கு அடையாளம் தெரியவில்லை. என்னை மன்னிக்கணும்'' என்று கேட்டுக் கொண்டான். ''நீ உன் கடமையைச் செய்தாய். அதற்காக நான் கோபித்துக் கொள்வதற்குப் பதிலாக உன்னைப் பாராட்டுகிறேன் போ!'' என்று டாக்டர் கூறி அவனை உற்சாகப்படுத்தினார்.

''டாக்டர் ஸார்தான் என் கண்களுக்குச் சிகிச்சை செய்தார். அவர் கண் கொடுத்த தெய்வம்!'' என்று இம்மைய்யா தன் அதிகாரியிடம் அவரைப் புகழ்ந்து கூறினான்.

இந்தச் சம்பவங்கள் நடந்து நாலைந்து மாதங்கள் ஆகியிருக்கும். ஒரு நாள் போலீஸ்காரன் இம்மையா ஒரு பெரிய தட்டுடன் கண்ணப்பாவின் அறைக்குள் நுழைந்தான். தட்டு நிறைய வெற்றிலை பாக்கும், சாத்துக்குடி, ஆப்பிள், திராட்சைப் பழங்களும் பூவும் இருந்தன. தனக்குக் கல்யாணம் என்றும், அதற்கு வரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான். டாக்டர் அவசியம் வருவதாகக் கூறினார். பிறகு சிறிது நேரம் தம்மிடம் கண் சிகிச்சை செய்து கொண்டதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்து விட்டு அவனை அனுப்பினார்.

டாக்டரும், அவர் மனைவியும், இம்மையாவின் கல்யாணத்துக்குச் சென்று பரிசளித்துவிட்டு வந்தார்கள். கல்யாணமான தினத்துக்கு மறு நாள் காலை ஏழு மணி இருக்கும். இம்மையா டாக்டர் அறைக்குள் நுழைந்தான். அவன் முகம் வாட்டமுற்று, கவலை தோய்ந்திருந்தது. டாக்டர் என்ன விசேஷம் என்று விசாரித்தார். தன் மனைவி நாமகிரி இரவென்று ஒரே ஜுரமாகப் படுத்திருக்கிறாள் என்றும், உடனே வந்து பார்த்துவிட்டுப் போகும்படியும் கேட்டுக் கொண்டான். அவர் தாம் ஒரு கண் டாக்டரென்றும் சாதாரண வைத்தியம் தெரியாதென்று கூறியும் அவன் கேட்கவில்லை. கடைசியில் அவர் தமது நண்பரான வைத்தியர் வரதனையும் உடன் அழைத்துக் கொண்டு போனார். படுக்கையில் படுத்திருந்த நாமகிரியின் உடல் தூக்கித் தூக்கிப் போட்டுக்கொண்டிருந்தது. அவள் கண்கள் மூடியிருந்தன. வரதன் அவள் உடல் உஷ்ணத்தை அளந்து பார்த்தார். மிக நன்றாக இருந்தது. இரத்த அழுத்தத்தைப் பார்த்தார். அது அளவோடு இருந்தது.

''எல்லாம் சரியாக இருக்கிறது. இந்தக் கோளாறு ஏதோ மன அதிர்ச்சியின் காரணம்'' என்று வரதன் கண் டர்க்டர் கண்ணப்பாவிடம் இரகசியமாகக் கூறினார். பிறகு தூக்கம் வருவதற்கு மருந்து எழுதிக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

கண்ணப்பர், அந்தப் பெண்ணுக்கு இது போன்று ஏற்படுவதற்கு முன்னால் என்ன நடந்தது என்று விசாரித்தார். இம்மையா தெரிவித்தான். பிறகு டாக்டர் அந்தப் பெண்ணின் பக்கம் திரும்பி, ''நாமகிரி! நான்தான் டாக்டர். கல்யாணத்துக்குக் கூட வந்திருந்தேனே! பயப்படாதே. விழித்துக்கொள்'' என்று கூறினார். அந்தப் பெண்ணுக்கு உடல் தூக்கி வாரிப் போடுவது உடனே நின்றது. அவள் தன் கண்களைத் திறக்க முயன்றாள். கண்ணப்பர் இம்மையாவை வெளியில் போயிருந்து விட்டுத் தாம் கூப்பிட்ட பிறகு வரச் சொன்னார். அவன் வெளியே சென்றபோது நாமகிரி நன்றாகக் கண் விழித்திருந்தாள். அவளும் இரவு நடந்த விஷயங்களைத் தெரிவித்தாள். ''இதுதானா? பயப்படாதே! எல்லாம் சரியாகப் போய் விடும்!'' என்று அவர் அவளுக்குத் தைரியம் கூறினார். பிறகு இம்மையாவைத் தனியே அழைத்துக் கொண்டு சென்றார்.

''இம்மையா! நான் ஒன்று கேட்கப் போகிறேன். யோசனை பண்ணிப் பதில் சொல். உனக்கு மனைவி முக்கியமா? உத்தியோகம் முக்கியமா?'' என்று கேட்டார்.

''அதென்ன அப்படிக் கேட்கிறீர்கள்? நாமகிரிதான் எனக்கு உயிர்!''

''அவளுக்குப் பைத்தியம் பிடிக்காதிருக்க வேண்டுமானால், அவள் உன்னுடன் வசித்து வரவேண்டுமானால், நீ நான் சொன்னபடி கேட்டாக வேண்டும்!'' என்றார்.


''தயாராயிருக்கிறேன்!'' என்றான் இம்மையா.

மறுதினமே, டாக்டர் கண்ணப்பா அவனது கண்ணுக்கு ரண சிகிச்சை செய்தார். அவன் சில தினங்கள் அந்த நர்ஸிங் ஹோமில் இருந்து விட்டு வீடு திரும்பினான். பிறகு அவனும்

ASP/GM-23 TM



தொல்லை
பல் முளைக்கும்போதா?
காற்று பிரியும்போதா?
வயிற்றுவலியாலா?



மானேர்ஸ்
கிரைப் மிக்ஸ்சர்

கொடுத்து மீண்டும் புன்னகை தோன்றக் காணுங்கள்

இக்காலத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர் தருகின்றனர். அது இனிய சுவையுள்ளது; சுகாதார முறைப்படி 'பேக்' செய்யப்பட்டுள்ளது.

அதிர்ஷ்டக் குழந்தைகளுக்கு மானேர்ஸ் கிரைப மிக்ஸ்சர் கிடைக்கிறது



இப்பொழுது
அழகான, புதிய சிவப்பு நீல நிறங்களில் 'பேக்' செய்யப்பட்டு கிடைக்கிறது

நாமகிரியும் இன்பகரமாக இல்லறம் நடத்தி வந்தார்கள்'' என்று வசந்தன் முடித்தான்.


அவர்கள் கியூ வரிசையில் ஊர்ந்து போய்க் கொண்டே இருந்தபோது வசந்தன் கதையைச் சொல்லி வந்தான். அப்போது வந்து நின்ற ஒரு பஸ்ஸில் முன்னாலிருந்த சீக்கிய ஸ்திரீகள் ஏறிக்கொண்டதும் அது கிளம்பிப் போய்விட்டது.



''ஆமாம், நாமகிரிக்கு என்ன உடம்பு? இம்மையா என்ன சிகிச்சை செய்து கொண்டான்? அதைப் பற்றிச் சொல்லவேயில்லையே'' என்றாள் மாதங்கி.

''சொல்கிறேன். இன்னொரு பஸ் அதோ வந்து கொண்டிருக்கிறது. சுருக்கமாகச் சொல்கிறேன்'' என்று வசந்தன் கூறி விட்டுச் சொல்லலானான்:

''இம்மையா போலீஸ்காரனான பிறகு, ஒரு நாள் முரட்டுக் கைதியை நீதி ஸ்தலத்திலிருந்து சிறைச்சாலைக்கு அழைத்துப் போய்க்கொண்டிருந்தான். அப்போது அந்தக் கைதி திடீரென்று இம்மையாவின் முகத்தில் ஏதோ ஒரு திராவகத்தைக் கொட்டவே அது அவன் கண்ணில்பட்டது. அதனால் கண்கள் புண்ணாகிவிட்டன. அதற்காக அவனுக்குச் சிகிச்சை செய்த டாக்டர் கண்ணப்பர், ஒரு கண்ணை நன்றாகக் குணப்படுத்தி விட்டார். மற்றொரு கண்ணின் கண்மணி திராவகத்தால் பிளந்துபோய் விட்டதால் கண்ணப்பர் அதை எடுத்துவிட்டார். பதிலுக்கு ஏதோ ஒரு விழியை வைத்தார். இது நடந்து இரண்டு மூன்று வருடங்களிருக்கும். ஒருநாள் பகல் இம்மையா வெளிச்சத்தைப் பார்த்துக் கொண்டேயிருந்தபோது அவன் பொய்க் கண் கூசியது. அவனால் அதை நம்ப முடியவில்லை. அவன் ஒரு நல்ல கறுப்பு மூக்குக் கண்ணாடி வாங்கிப் போட்டுக் கொண்டான். அன்று இரவு அவன் ஒரு பார்க்கில் ரோந்து சென்று கொண்டிருந்தபோது இரண்டு பேர்கள் ஒரு பெஞ்சியில் உட்கார்ந்து, நகைகளையும், கரன்ஸி நோட்டுக்களையும் எண்ணிக் கொண்டிருப்பது தெரிந்தது. பொய்க் கண்ணுக்குத்தான் அப்படித் தெரிந்தது. ஆனால் அப்போது அதைப் பற்றி அதிகம் யோசனை செய்யவில்லை. அந்தத் திருடர்களைத் தூக்கிப் பிடித்துக் கைது செய்தான்.



கண்ணப்பர் வைத்த பொய்க் கண் விழி எப்படியோ சதையுடன் சேர்ந்து வளர்ந்திருக்கிறது என்று எண்ணினான். ஆனால் அதைப் பற்றி அவனுக்கு டாக்டரிடம் சொல்வதா வேண்டாமா என்றிருந்தது. இரவில் இருட்டில் கண் தெரிவதால் குற்றம் செய்பவர்களைக் கண்டுபிடித்து உத்தியோகத்தில் நல்ல புகழ் பெறலாமென்ற ஆசை. டாக்டர் கண்ணப்பரையும், அவர் மனைவியையும் கடற் கரையில் நூதனக் கண்ணின் உதவி கொண்டுதான் பார்த்தான். அவனது இந்தப் பார்வைச் சக்தியைப் பற்றி எண்ணிய டாக்டர் தமக்குள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு

ஒரு சிறிய சந்தேகம் ஏற்பட்டிருந்தது. திம்மையாவுக்குக் கல்யாணமான பிறகு முதலிரவு தினம் நேர்ந்த சம்பவம் அவரது சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்தது. அன்று இரவு நாமகிரி தனது மூக்குத்தியின் திருகைக் காணோமென்று கணவனிடம் சொன்னாள். உடனே திம்மையா எழுந்திருந்து போய்க் கீழே தரையைப் பார்த்து அதைப் பொறுக்கி எடுத்தான். அறையில் ஒரே இருட்டு. விளக்கு இல்லை. 'இதோ இருக்கிறதே' என்று சொல்லிக் கொண்டே அதை அவன் அவளிடம் கொடுக்க வந்த போது அவன் கண்களுள் ஒன்று வைரம் போல் பிரகாசிப்பதைக் கண்டாள். பூதமோ என்று சந்தேகப்பட்டாள். 'ஓ'வென்று அலறினாள். அப்போது ஏற்பட்ட மன அதிர்ச்சியினால்தான் அவள் உடல் தூக்கி வாரிப் போட்டது.

கண்ணப்பர், தமது சந்தேகத்தைப் பற்றிக் கூறி அவனை விசாரித்தபோது அவன் உண்மையை ஒப்புக் கொண்டான். பிறகுதான் அவர் அந்த நூதனக் கண்ணை எடுத்து விட்டு ஓர் ஆட்டுக் கண்ணை வைத்தார். அவன் நாமகிரிக்காக அந்த அருமையான கண்ணைத் தியாகம் செய்தான்'' என்றான் வசந்தன்.

ஃ ஃ ஃ

வண்டி வந்து விட்டது.

''அது என்ன நூதனக் கண்?'' என்று மாதங்கி விசாரித்தாள்.

''அதுவா? அது ஆந்தைக் கண் விழி. அது மனிதக் கண் இருந்த இடத்தில் சதையோடு சேர்ந்து வளர்ந்து விட்டது. அது எப்படி வளர முடியும் என்று கண்ணப்பருக்கே புரியவில்லை. அப்படி வளரத்தான் வளர்ந்ததே, ஆந்தையைப் போல இரவில் பார்க்கும் சக்தியையும் அது எப்படிப் பெற்றது? இதென்ன மாய ஜாலமா? — இப்படி ஒரு டாக்டர் நினைக்கலாமா? எனவே அவர் அதைப் பற்றி மேலும் ஆராய்ச்சி செய்வதில் ஈடுபட்டார்.

வசந்தன் கதையைப் பூர்த்தி செய்து விட்டுத் திரும்பிப் பார்த்தபோது அவன் ஏறவேண்டிய பஸ் சற்று தூரத்துக்கப்பாலே நின்றுவிட்டுக் கிளம்பிப் போய்விட்டது.

''இன்றைக்கு என்ன பஸ் நம்மை இப்படி ஏமாற்றுகிறது?'' என்று மாதங்கி சொன்னாள்.

''நாம்தான் அதில் ஏறிக்கொள்ளாமல் அதை ஏமாற்றிவிட்டோம்!'' என்று வசந்தன் புன்னகை புரிந்து கொண்டே கூறினான்.

''ஆமாம்! ஆனால் இன்னும் சில நிமிஷங்கள் பேசாமல் நின்று கொண்டிருக்க என்னால் முடியாதே, என்ன பண்ணுகிறது?'' என்று வசந்தனை வேடிக்கையாகக் கேட்டாள் மாதங்கி.

''கதை சொல்லாமலிருக்க முடியாதே என்கிறீர்களா? சொல்லுங்கள்!'' என்றான் வசந்தன்.

''ஒரே ஒரு ஊரிலே...'' என்று அவன் வாய் மூடு முன்னாலேயே ஆரம்பித்துவிட்டாள் மாதங்கி.

''நாட்டிய கலா பொக்கிஷம் நாதமுனி என்று ஒருவர் இருந்தார். அவரது முன்னோர் ஒருவரது கனவில் பரத மாமுனி தோன்றிப் பரத நாட்டியக் கலையைப் போதித்தார் என்று சொல்வதுண்டு. பரத நாட்டியம், அபிநயம் இரண்டும் சொல்லிக் கொடுப்பதில் அவருக்கு ஈடு அவரேதான் என்று அவரே கூடச் சொல்லிக் கொள்வாராம்.

பெரிய தனவந்தர்களென்ன, ஐ. ஸி. எஸ். அதிகாரிகளென்ன, வியாபாரக் கம்பெனியிலுள்ள பெரிய உத்தியோகஸ்தர்களென்ன, எல்லோரும் தங்கள் தங்கள் பெண்களுக்கு நாட்டியப் பொக்கிஷம் நடனம் சொல்லிக் கொடுக்க ஆரம்பிக்கப் போகும் நன்னாளை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார்கள். அவரிடம் சிட்சை சொல்லிக்கொண்ட பெண்கள் தங்கள் கல்யாண தினத்தன்று ரிஸப்ஷனின் போது அவரையும் ஒரு பக்கத்தில் நிற்கச் சொல்லிப் புகைப்படம் பிடித்துக்கொள்வது பழக்கம்! நாதமுனியின் செல்வாக்கும் புகழும் நாளுக்கு நாள் இப்படியாக வளர்ந்து கொண்டே வந்தன.

ஒரு நாள் சர்வ கலா களஞ்சிய சபையில் அவரது சிஷ்யை மோகன வல்லியின் பரத நாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது. அவர் அதற்கு நட்டுவாங்கம் செய்தார். அந்தப் பெண் என்னமோ சொல்லிக் கொடுத்தபடி நன்றாகத்தான் ஆடிற்று. ஆனாலும் ரசிகர்கள் கூட்டம் சீக்கிரத்திலேயே கலைய ஆரம்பித்து விட்டது. நடனமாடும் பெண்ணின் பெற்றோர்கள், உற்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள், அந்தப் பெண்ணின் தந்தையின் காரியாலயத்தில் வேலை செய்பவர்கள் கரகோஷம் செய்வதற்காக அமர்த்தப்பட்ட சில ரசிகத் தொழிலாளிகள் நாதமுனியின் மாஜி சிஷ்யைகள் சிலர், சில பத்திரிகை நிருபர்கள், தலைமை வகிக்க வந்து தமது பிரசங்கத்தை நிகழ்த்துவதற்காகக் காத்துக் கொண்டிருந்த ஒரு மந்திரியின் காரியதரிசி, இவர்களே சபையில் இருந்தனர்.

இதைக் கண்டு நாதமுனி உற்சாகமிழந்தார். இந்தக் கச்சேரிக்கு இரண்டு தினங்களுக்குப் பின்னர் அவர் வீட்டுக்கு ஒரு டாக்ஸி வண்டியில் ஒரு கனவான் வந்தார். தமது பெண்ணுக்குப் பரத நாட்டியம் கற்றுக்கொடுக்க வேண்டும் என்றும், தமது வீட்டில் வந்து பெண்ணைப் பார்த்து விட்டு வரவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.


நாட்டியத்துக்கும் பெண் பார்க்கும் படலமோ? — நாதமுனி பெருமையுடன் வண்டியில் ஏறிப் போனார். போனவர் போனவர்தான்.


பிறகு அவர் அன்று திரும்பி வீட்டுக்கு வரவில்லை; மறு நாளும் வரவில்லை; அதற்கு அடுத்த நாளும் வரவில்லை.

''நாட்டிய கலா பொக்கிஷம் நாதமுனி எங்கே? எங்கே?'' என்று பத்திரிகைகள் பெரிய கேள்விக் குறிகளை உபயோகித்துத் தலைப்புப் போட்டன!''

''அவரெங்கேயோ? பஸ் இதோ வந்து விட்டது!'' என்று கூறிக்கொண்டே மாதங்கி பஸ்ஸில் ஏற விரைந்து சென்றாள்.









பார்கோ

(பிரீமியர் ஆட்டோமொபைல்ஸ் லிமிடெட் பம்பாய் ஸ்தாபனத்தின் தயாரிப்பு)

வாங்குவதற்கு இப்பொழுது 26,000 ரூபாய் பண உதவி செய்கிறோம்

மேலும் ஆயிரம் ரூபாய் பண உதவி செய்ய டிவிஎஸ் முன்வருகிறது





மாதம் தோறும், பார்கோவினால் உங்களுக்குக் கிடைக்கும் லாபத்திலிருந்து, 29 சுலபமான மாதத் தவணைகளில் நீங்கள் இதைத் திருப்பி அடைக்கலாம்.

மேலும் மேலும் பலர் பார்கோவை வாங்குகின்றனர் ஏனெனில் விலை குறைவு; நடைமுறைச்செலவு குறைவு; அதிக லாபத்துக்கு இடமுண்டு.

டிவிஎஸ் பணி உடன் பிறந்தது: தென்னிந்தியாவில் பல நகரங்களில் டிவிஎஸ் ஏராளமான ஸ்பேர் உறுப்புகளை எப்போதும் தயாராக வைத்திருப்பதோடு மிக நவீன முறையில் பணி செய்கிறது.

ஏழு 'நகரும் பட்டறைகள்': மோட்டார் வான்களில் ஸ்பேர் உறுப்புகளுடனும், அத்தியாவசியமான கருவிகளுடனும் உள்ள ஏழு 'நகரும் பட்டறைகள்' உங்கள் இடம் தேடிவரும். ஒவ்வொன்றிலும் ஒரு போர்மனும், ஒரு மெக்கானிக்கும் உண்டு.

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ்

பிரைவேட் லிமிடெட் மதுரை திருச்சி திருநெல்வேலி புதுக்கோட்டை சேலம் - கோயமுத்தூர் திருவனந்தபுரம்.

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்

மதராஸ் பெங்களூர் செகந்திராபாத்


TVS

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட் சப் டீலர்கள் . P N. கிருஷ்ண அய்யர் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட், பத்மாலயம், தபால் பெட்டி எண் 55, திருச்சூர் — C. C. ஆட்டோமொபைல்ஸ் லிமிடெட், 'லட்சுமிவிலாஸ் பில்டிங்', பாங்க் ரோடு. கள்ளிக்கோட்டை—தி கொல்லோன் ஆட்டோமொபைல்ஸ், தபால் பெட்டி எண் 32, பீச் ரோடு. கொல்லம்—மனோரஞ்சன் கங்குலி & ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், 4 ரூய் லாலி டொலேண்டால், புதுச்சேரி.

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட சப்-டீலர்கள் : கரபதி கராஜ், 1959, காந்தி நகர், விஜயவாடா 3—ஸ்ரீ பட்டாபிராம் கமர்ஷியல் ஸிண்டிகேட், வல்லபாய் தெரு, காக்கிநாடா—ஸ்ரீ பட்டாபிராம் கமர்ஷியல் ஸிண்டிகேட், பஜாரா ரோடு, விசாகபட்டினம்—D. S. ஆட்டோமொபைல்ஸ், நெல்லூர்—தி மோட்டார் சேல்ஸ் கம்பெனி, கபாஸ் ரோடு, ஆனந்தபூர் — T. N. ரகுநாத செட்டி, ராதாகிருஷ்ண நகர், கடப்பா—தி மோட்டார் சேல்ஸ் கம்பெனி, காந்திநகர், பார்க் ரோடு, கர்நூல்—ஆஸ்நஸித்ன் ஆட்டோமொபைல்ஸ், பெல்லாரி—P V பய் & கம்பெனி, மிஷன் தெரு, மங்களூர் 1

கிருஷ்ணகிரி

தொழிற்பேட்டை துவக்க விழா



"தோற்றவர் வென்றார். வென்றவர் தோற்றார்."

இது என்ன புதிர்?

புதிரல்ல; மந்திரி திரு எஸ். வி. ராமஸ்வாமி அவர்கள் தம்மைப் பற்றியும், திரு வி. ஆர். நரசிம்மன் அவர்களைப் பற்றியும் கூறியதைத்தான் சொல்லுகிறேன். "சேலத்தில் தொழிற்பேட்டை ஏற்படுத்த வேண்டும் என்று ஏழு ஆண்டுகளாக முயன்று வருகிறேன். முடியவில்லை. கிருஷ்ணகிரியில் இன்று வந்துவிட்டது. திரு வி. ஆர். நரசிம்மன் தமக்குத் தோல்வியைத் தந்த கிருஷ்ணகிரிக்கு அதை வெற்றிகரமாக வாங்கித் தந்து விட்டார்" என்று மனமாரப் பாராட்டுகிறார்.


சென்ற தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகராக நின்ற வி. ஆர். நரசிம்மன் தோல்வியுற்றார். அதனால் என்ன? அவர் தமது தொகுதி மக்களுக்குப் பணி புரிவதை மறந்துவிடவில்லை. சென்னை அரசாங்கத்தைக் குளவியாகக் கொட்டி ஒரு தொழிற்பேட்டை வாங்கித் தந்து விட்டார்! பொதுப் பணியை வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு விட்டவர்களுக்கு, தேர்தலில் வெற்றி தோல்வி கிடைப்பது ஒரு பொருட்டல்ல என்பதற்கு உதாரண புருஷராக விளங்குகிறார் திரு வி. ஆர். நரசிம்மன்.

எஃகுத் தொழிற்சாலைகளோ, மற்ற பெருந் தொழிற்சாலைகளோ, பிற நாட்டினருக்கு நாமும் முன்னேற்றப் பாதையில் செல்லத் தொடங்கி விட்டோம் என்று காண்பிப்பதற்குக் காட்சிப் பொருளாகப் பயன்படுமேயன்றி உருப்படியான சுபிட்சத்தை வளர்ப்பது சிறு தொழில்கள்தான் என்று காங்கிரஸ் கட்சி ஆரம்ப நாட்களிலிருந்தே சொல்லி வருகிறது. நாட்டில் பரவலாகச் சுபிட்சம் ஏற்படுத்த வேண்டுமென்றால், தேசமெங்கிலும் கிராமந்தோறும் சிறு சிறு தொழில்கள் பெருக வேண்டும். அத்துறையில் ஒரு பணி நடக்கிறது என்றால் பார்க்க யாருக்கும் விருப்பம் ஏற்படுவது இயல்பேயல்லவா?

அதிலும் சேலத்துக்குப் பின்தங்கிய மாவட்டம் என்ற ஒரு 'நல்ல பெயர்' உண்டு; விவசாயத்திலும் சரி, தொழில் துறையிலும்

1. விளக்கேற்றித் தொழிற்கூடத்தைத் தொடங்கி வைக்கிறார் மந்திரியார்.
2. தொழிற்பேட்டையின் திறப்பு விழா நினைவுச் சின்னம்.







டெலிகலியோ ஸ்தாபனத்தார் மாம்பழச் சாற்றைப் பாடம் பண்ணுகிறார்கள்

சரி, அதிக முன்னேற்றத்துக்கு வாய்ப்பில்லாத பிரதேசம். அங்கு என்ன தொழில் வாய்ப்பு இருக்கும் என்று தொழிற்பேட்டை திறக்கிறார்கள் என்று வியந்துகொண்டே தான் சென்ற மாதம் 18ம் தேதி போனேன். அங்கு போன பிறகுதான் ஒரு புது உலகமே கண்டாற் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது!

சிறு தொழில் உற்பத்தியாளர் சங்கச் செயலாளரான திரு நாதன் முதன் முதலில் என்னை வரவேற்று ஒருவரைச் சுட்டிக் காட்டி, ''இவர் விளக்கெண்ணெய். இவருடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருங்கள்'' என்றார்.

'வந்ததும் வராததுமாக விளக்கெண்ணெய் கொடுக்கிறாரே' என்று தோன்றியது. ஆனால் திரு கே. என். டி. நஞ்சப்ப செட்டியார் ஆமணக்கு எண்ணெயைப் பற்றிப் பேசி வந்ததைக் கேட்ட போது அதிசயமாகவே இருந்தது. செயற்கை ரப்பர், சென்ட் வகைகள், பெயிண்ட் சேர்க்கைகள், செயற்கைக்கம்பளங்கள், ஒட்டும் பசைகள், மெழுகுவத்திகள், பற்பசைகள் இப்படி அறுபது வகைப் பொருள்கள் ஆமணக்கு விதையிலிருந்தும், எண்ணெயிலிருந்தும் செய்யலாம் என்று கூறியபோது மூச்சே நின்றுவிடும்போல் இருந்தது. மேற்படி விதையிலிருந்து ஒருவித உயர்தர ஆடை கூடச் செய்கிறார்களாம். அந்த ஆடையைப் பிரான்ஸிலும் இங்கிலாந்திலும் மிகப் பெரிய பணக்காரர்கள் உடுக்கிறார்களாம். இளவரசர் பிலிப் இந்த ஆடையை அணிவதுண்டாம்!


இந்த ஆமணக்கு விதைகள் சேலம் ஜில்லாவில் மட்டும் நாற்பது முதல் ஐம்பதினாயிரம் மூட்டைகள் கிடைக்கின்றனவாம். ஆண்டுதோறும் நம் நாட்டில் பம்பாய், சென்னைத் துறைமுகங்கள் வழியாக இரண்டு லட்சம் மூட்டைகள் ஏற்றுமதி செய்கிறார்கள். இவற்றை நம் நாட்டில் பல பொருள்கள் உற்பத்தி செய்ய உபயோகிக்கலாம் என்கிறார். அத்துறையில் உதவ அவர் முயற்சி எடுத்து வருகிறார்.

சேலம் ஜில்லாவில் எங்கு கண்டாலும் புளிய மரங்களைப் பார்க்கலாம். சேலம் புளி பிரசித்தமானது. ஆனால் நாம் புளியை மட்டும்தான் உபயோகிக்கிறோம். அதன் கோது, கொட்டை, மேல் ஓடு எல்லாமே பலப்பல பொருள்கள் செய்வதற்கு உபயோகமாகின்றன.

முதலில் புளிச் சத்தை எடுத்துக் கொள்ளுங்கள். மேனாட்டில் இத்தாலி தேசத்தில் புளிப்பை ரொம்ப விரும்புகிறார்களாம். அவர்களுக்கு விஞ்ஞான முறையில் புளியின் புளிப்பைப் பவுடர் உருவிலோ, திரவ உருவிலோ கெட்டுப் போகாத வகையில் பாடம் பண்ணி அனுப்பி வைத்தால் ஏராளமான அந்நியச் செலாவணி சம்பாதிக்கலாம்.

வேறு சில ரஸாயனப் பொருள்கள் சேர்த்துக் கோதிலிருந்து வீட்டில் பாத்திரங்கள், பீங்கான் சாமான்களைத் துப்புரவு செய்யும் பவுடராகத் தயாரித்து மேனாட்டுக்கு அனுப்பலாமாம்.

சசிதேவ் தொழிற்கூடத்தார் ஆறு வகையில் உபயோகிக்கக்கூடிய பேபி டிராக்டர்கள் உற்பத்தி செய்கிறார்கள்



தோலிலிருந்து வார்னிஷ் செய்யக்கூடுமாம். புளியங்கொட்டையிலிருந்து என்னவெல்லாமோ செய்யலாமாம்! இப்படி நம்மால் உபயோகமற்ற பொருள் என்று தூர எறியப்படுபவைவற்றை யெல்லாம் கொண்டு ''டாலர்கள்'' சம்பாதிக்கலாம் என்கிறார்கள்.

இது என்ன? கசப்பான விளக்கெண்ணெய், புளிப்பான புளி இவற்றைத் தவிர இனிப்பான விஷயமே கிடையாதா என்று கேட்கலாம்!

யார் இல்லை என்றார்கள்? சேலத்து நீலம் மாம்பழம் எவ்வளவு இனிப்பானது! அது இனி நமக்கு டாலர் தேடித் தரப் போகிறது!

ஆம், சென்னை ஃப்ரூட்னிக் ஸ்தாபனத்தார், கிருஷ்ணகிரி தொழிற்பேட்டையில் டெலிலியோ என்ற பெயரில் விஞ்ஞான முறையில் மாம்பழம் வற்றல் பண்ணவும் மாம்பழச் சாறு பண்ணவும் டப்பாவில் அடைக்கவும் யந்திர சாலையைத் தொடங்கியிருக்கிறார்கள். அன்று மாம்பழ வற்றல் கொடுத்தார்கள். ஆகா! அதுதான் எவ்வளவு ருசியாக இருந்தது! மாம்பழத்தின் ஈரப்பசையை எடுத்துவிட்டுக் காற்றுப் புகாத டப்பிகளில் அடைத்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டிருக்கிறார்கள். அதே போல் மாம்பழச் சாற்றையும் பிழிந்து, டப்பாக்களில் கெட்டுப் போகாவண்ணம் அடைத்து அனுப்ப ஏற்பாடுகளைத் தொடங்கி விட்டார்கள். இந்தப் பகுதியைச் சுற்றிப் பார்வையிட வந்த மந்திரி ஸ்ரீ வெங்கடராமன் அவர்கள் உடைக்குக் கொஞ்சம் மாம்பழச் சாறு பருக வேண்டும் என்ற ஆசை உண்டாகி விட்டது. அது எப்படியோ அந்தச் சாறு அடைக்கும் யந்திரத்துக்கும் தெரிந்து, வழங்கி விட்டது!

கிருஷ்ணகிரி தொழிற்பேட்டையில் மிட்டாய்கள் செய்யும் தொழிற்கூடம், இரும்புக் கம்பி வலைகள் செய்யும் தொழிற்கூடம், நிலத்தை உழும் சிறு பேபி டிராக்டர்கள் செய்யும் தொழிற்கூடம், சைக்கிள் சாமான்களை வரவழைத்துச் சைக்கிள்கள் நிர்மாணிக்கும் தொழிற்கூடம் — இப்படி ஆறு அல்லது ஏழு தொழிற்கூடங்கள் தொடங்கப்பட்டு விட்டன. பேட்டையில் இடமும் வசதியும் காற்றும் நீரும் இருக்கின்றன. சிறுதொழில்கள் தொடங்க ஆர்வமிருப்பவர்கள் முன்வரலாம். வேண்டிய உதவியளிக்க மந்திரி வெங்கடராமனும் தயாராக இருக்கிறார்.

''அரசாங்கம் தொழில்கள் தொடங்க வாய்ப்பும் வசதியும் செய்து தர வேண்டும். தனியார் முன்வந்து தொழில்களை ஏற்படுத்த வேண்டும்'' என்று கன்ஸர்வெடிவ் கட்சி முன்னாள் மந்திரி ஈடன் சொன்னார். அதைத்தான் நமது அரசாங்கம் சிறு தொழில்கள் சம்பந்தமாகச் சொல்கிறது; செய்கிறது.

கிருஷ்ணகிரியில் பெங்களூர் போகும்நெடுஞ் சாலையில் 41.69 ஏக்கர் பிரதேசத்தை ரூ. 1,18,250க்கு வாங்கி ஏழேகால்லட்சரூபாயில் 12 தொழிற் பட்டறைகள் அமைக்கக் கூடிய கட்டடங்களைக் கட்டி ரூ. 270, ரூ. 195 மாத வாடகைக்குக் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். மற்ற மின்சார வசதி, தண்ணீர் வசதி முதலிய பல வசதிகளும் செய்து தந்திருக்கிறார்கள். அதைவிடத் தனியார் சிறிது முதல் போட்டால் அரசாங்கத்தார் 80 சதவிகிதம் பல வகைகளில் கடன் வாங்கித் தருவதாகச் சொல்லுகிறார்கள். ஊக்கமுள்ள தொழிலதிபர்கள் இந்த நல்ல வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள முன்வர வேண்டும்.

இத்துறையில் உதவி புரிய வடசேலத்தில் தர்மபுரி பஸ் தொழிலதிபர் திரு விமலன் தலைமையில் ஒரு சங்கம் அமைத்திருக்கிறார்கள். ஆர்வமிக்கவர்கள் சங்க உறுப்பினர்களைக் கண்டு அளவளாவினால் என்ன என்ன தொழில்கள் தொடங்கக் கூடும் என்ற யோசனைகள் சொல்வார்கள்.

கிருஷ்ணகிரி தொழிற்பேட்டை திறக்கப்படுவதற்கு முதல் நாள்தான் வடசேலம் மாவட்டத்துக்குத் தர்மபுரி தலைநகராக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருந்தது. இச்செய்தி கிருஷ்ணகிரி மக்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தை யளித்தது. அவர்களால் தொழிற்பேட்டைத் தொடக்க விழாவைக் கூட மனமார ரஸிக்க முடியவில்லை. ஆனால் தொழில் துறையில் எந்த நகரம் முன்னேறுகிறதோ அதுதான் உண்மையில் முக்கிய நகரமாகவும் தலைநகரமாகவும் விளங்குகிறது என்ற பேருண்மையை உணர்ந்து புது தர்மபுரி ஜில்லா மக்கள் கிருஷ்ணகிரி தொழிற்பேட்டையை, தேனீக்கூட்டைப் போல் சுறுசுறுப்பாகப் பல தொழில்கள் நடக்கும் பேட்டையாகச் செய்வார்கள் என்று நம்புகிறோம்!

தொழிற்பேட்டை தொடக்க விழாவுக்குச் சென்ற சமயத்தில் மற்றொரு மகிழ்ச்சியூட்டும் செய்தியும் கேள்விப்பட்டேன். கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம் கட்டியதனால் பட்டுப் பூச்சி வளர்க்கும் ஆராய்ச்சிப் பண்ணையையும் சென்னை அரசாங்கம் நடத்தி வருகிறது. அங்கு ''மைசூர் பிரின்ஸஸ்'' என்ற பட்டுப் பூச்சி சாதியுடன் வேறு சாதியை இணைத்து ஒரு புது வகைப் பட்டுப் பூச்சியைத் தோற்றுவித்திருக்கிறார்கள். இந்தப் பட்டுப் பூச்சி 'கக்கூன்' களிலிருந்து அபரிமிதமான பட்டு நூல் கிடைக்கிறதாம். இதுவரை சாதாரணமாக இருபது பவுண்டு எடையுள்ள நாட்டுப் பட்டுப் பூச்சி கக்கூன்களிலிருந்து ஒரு பவுண்டு பட்டு நூல் கிடைக்கும். இப் புதுவகை கக்கூன்கள் பன்னிரண்டு பவுண்டு எடையிலிருந்தே மிக உயர்தரமான பட்டு நூல் ஒரு பவுண்டு கிடைக்கிறதாம். அதுமட்டுமின்றிப் பட்டுப்பூச்சிகள் ஒரு குறிப்பிட்ட குளிர்ந்த சீதோஷ்ண நிலையில்தான் உயிர் வாழும் என்று ஒரு கருத்து இத்துறையில் உண்டு. இக்கருத்தையும் தகர்க்க முயன்று வருகிறார்கள். இப்பட்டுப் பூச்சி ஆராய்ச்சித் துறையில் ஒரு புதிய திருப்பத்தையே ஹொசூர் — கிருஷ்ணகிரிப் பண்ணைகளில் ஏற்படுத்த முயன்று வருகின்றனர் என்பதைக் கேள்விப்படும்போது யாருக்குத்தான் மகிழ்ச்சி உண்டாகாது?

நல்ல சூழ்நிலை ஏற்படுத்தினால் நம் மக்கள் தொழில் துறையில் முன்னேறத் தயாராய் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையுடன் கிருஷ்ணகிரியிலிருந்து திரும்பினேன். —எஸ்.வி.எஸ்.


உங்கள் முக சருமத்திற்கு மினுமினுப்பும் இளமை வசீகரமும் அளிக்க
எண்ணெய்ப்பசையற்ற உன்னத
பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்
பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம்
FOUNDATION
POND'S
Vanishing Cream
அவள் அழகி...அவள் பாண்ட்ஸ் உபயோகிக்கிறாள்
சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்பொரேட்டட்

"காஞ்சி! இதுதான் உன் முடிவா?" என்று பத்ரி குரல் தழுதழுக்கக் கேட்டான். அவனுடைய இறைஞ்சும் பார்வை அவள் முகத்தின் மேல் அலைந்து புரண்டு நலிந்தது.

"எத்தனை தடவை சொல்லணும்? நான் உன்னைக் கலியாணம் செய்து கொள்ள முடியாது. கல்யாணம் செய்து கொள்ள முடியாது."

"உனக்கு ஏன் என்னைப் பிடிக்கவில்லை, காஞ்சி?"

"காரணம் உனக்குத் தெரியாதா என்ன? உனக்குத் தைரியமே இல்லை. தைரியம் இல்லாதவர்களை நான் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன்."

பத்ரியின் பிடி சட்டென்று நழுவியது:

"என்ன, அறையலையா? எனக்குக் கூடவா பயம்? ச்சு, ச்சு. நான் ஆண்பிள்ளையில்லை. வெறும் பெண்தானே. பயப்படாதே!"

பத்ரியின் முகத்தில் ஆத்திரம் குமுறியது. "நீயும் ஒரு பெண்தான்" என்று அவன் தொடங்கினான். "வாயை மூடு!" என்று சீறினான் அவன். "நீ யாரு தெரியுமா? பெண்ணே இல்லை நீ. பேய்! இரக்கமே கிடையாது உனக்கு. ராட்சஸி, ஆமாம், ராட்சஸி!" என்று படபடத்தான் அவன்.

அவன் கோபத்தைப் பார்த்து அவள் கலகல வென்று சிரித்தாள்.

இழந்துவிட்ட காலைநேரம்

ஆதவன்

"நீ என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? இதோ இந்த மாடியிலிருந்து கீழே குதிக்க வேண்டுமா? இப்படி முரடனாக இருந்தால்தான் உனக்குப் பிடிக்குமா?"

"பேச்சை மாற்றுவானேன்? ஓடுகிற பஸ்ஸிலிருந்துகூட உன்னால் குதிக்க முடியாது — வெறும் பயந்தாங்கொள்ளி."

"இன்னொரு தடவை அப்படிச் சொல்லாதே."

"பயந்தாங்கொள்ளி, பயந்தாங்கொள்ளி, பயந்தாங்கொள்ளி!"

பத்ரி ஆத்திரத்துடன் அவளருகில் வந்து அவள் கையைப் பற்றிக் கொண்டான். "அறைந்து விடுவேன், ஆமாம்."

"உம்! அறைவேன். பெண்ணிடத்தில்தானே உன்னுடைய வீரத்தைக் காட்ட முடியும்?"



"சிரி! நன்றாய்ச் சிரி! உனக்குச் சிரிக்கத்தான் தெரியும். கேலி பண்ணத்தான் தெரியும். இதயமும் மூளையும் இல்லாத ஜடம் நீ. உனக்கு என் அருமை தெரியாது. என்னைப் புரிந்து கொள்ளும் சக்தி உனக்குக் கிடையாது. எனக்கும் உன்னுடைய முட்டாள்தனத்தைச் சகித்துக் கொள்ளும் பொறுமை தீர்ந்து போச்சு. இனி மேல் உன் முகத்திலேயே விழிக்க மாட்டேன்" என்று ஆத்திரத்துடன் சொற்களைக் கொட்டி விட்டுப் பத்ரி புயல் போலக் கிளம்பினான்.

"பத்ரி!" என்று காஞ்சனா வாஞ்சையும் பரிவும் ததும்பும் குரலில் அழைத்தாள். அந்தக் குரலிலே ஏமாந்து பத்ரி திரும்பினான். காஞ்சனா கேலிப் புன்னகையுடன் கைகளைத் தூக்கி ஆட்டி, "டாடா! பை, பை!" என்றாள். பத்ரி அவளை எரித்துவிடுபவன்போல முறைத்து விட்டு வேகமாகப் படிகளில் இறங்கினான். பின்னால் அவளுடைய சிரிப்புச் சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது.

வீட்டிலே தன் அறையில் பத்ரி ஏதோ புத்தகத்தைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினான்; ஆனால் மனம் புத்தகத்தில் செல்லவில்லை. காஞ்சியின் சிரிப்புச் சத்தம் காதுகளில் கேட்டுக் கொண்டேயிருந்தது. ஆத்திரத்துடன் புத்தகத்தை மூடினான். எப்படிச் சிரித்தாள்! குரலிலே என்ன கர்வம், இமிர்! தடிக் கழுதை!

இதே சிரிப்புத்தானா முன்பெல்லாம் அவனை அவ்வளவு தூரம் கவர்ந்தது?

இரண்டு நாட்களுக்கு முன்புகூட ஒரு பழைய நோட்டுப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தபோது அவளுடைய சிரிப்பைப் பற்றி அவன் எழுதியிருந்த அந்தக் கவிதை கண்ணில் பட்டது. பத்ரி மேஜை மேல் வைத்திருந்த அந்த நோட்டை மறுபடியும் எடுத்து அந்தப் பழைய கவிதையைப் படிக்கத் தொடங்கினான் :

காற்றடித்து மரம் அசைந்தால்
காலடியில் பூ உதிரும் -- என்
காஞ்சிக்குச் சிரிப்பு வந்தால்
காசுபோல் குலுங்கி விழும்!
தெறிவிழும் பூவோ என்று அந்தச்
சிரிப்பைப் பிடிக்கப் போனால்,
சிக்கன ராணி அவள்
சிரிப்புக் காசுகள் எதையும்
தெறவிடவே மாட்டாள் - என்
கையை நீட்டு முன்னே (தன்)
கையிலே துப்பிக் கொள்வாள்!

இதை அவளுக்குப் படித்துக் காட்டிய போது, ''ஐயே, சகிக்கவில்லே. இது ஒரு கவிதையா?'' என்று கேலி செய்தாள்.

''நான் எங்கேடா துப்பிக் கொள்கிறேன்?''

''நீ சிரிக்கும் போதெல்லாம் கையால் வாயைப் பொத்திக் கொண்டு சிரிக்கிறாயே!''

''போடா, ஒன்றுமில்லே.''

''காட்டட்டுமா?'' என்று அவன் கிச்சுக் கிச்சு மூட்டக் கையை நீட்டினான். அவள் ஓட்டமாக ஓடினாள். பின்னாலேயே ஓடின பத்ரி தரையில் எதிலோ சறுக்கித் தொபுகடீரென்று விழுந்தான். சத்தம் கேட்டுத் திரும்பிய காஞ்சி விழுந்து விழுந்து சிரித்தாள், கையால் வாயைப் பொத்திக் கொண்டு.

''அதோ! அதோ! பொத்திக் கொண்டாயே!'' என்று கீழே விழுந்த வலியையும் மறந்து பத்ரி கூவினான். அவள் 'வவ்வவ்வே' என்று வலித்து விட்டு ஓடினாள்.....

பத்ரி நோட்டை மூடி மேஜை மேல் வைத்தான். அந்தச் சமயத்தில் அவர்கள் பள்ளி இறுதி வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார்கள். அந்த வயதிலேயேதான் அழகாயிருக்கிறோமென்று அவளுக்கு ரொம்பக் கர்வம். தான் என்னதான் அலட்சியமாகப் பேசினாலும் பத்ரி தன் பின்னாலேயே அலைந்து கொண்டிருப்பான் என்று நம்பிக்கை.



'ஆனால் இனி மேல் அவள் பக்கமே தலை காட்டமாட்டேன்; கர்வம் பிடிச்ச கழுதை!' என்று பத்ரி கோபத்துடன் முணுமுணுத்தான். மணிபர்ஸை உருவி எடுத்து, பர்ஸைத் திறந்தவுடன் பார்வையில் படும்படியாக பிளாஸ்டிக் அறையில் செருகி வைத்திருந்த அவள் படத்தை உருவி, ஏதோ ஓர் உள் அறையில் திணித்து 'ஸிப்'பை இழுத்து மூடினான். காஞ்சியை ஜெயிலில் அடைத்துத் தண்டனை வழங்கி விட்டது போன்ற திருப்தி அவன் முகத்தில் நிலவியது.

அப்போதெல்லாம் அவர்கள் பக்கத்து வீடுகளில் வசித்து வந்தார்கள். பல வருஷங்கள் அருகிலே வாழ்ந்து வந்ததால் அவர்களுடைய குடும்பங்களிடையே நெருங்கிய உறவினர்கள் போல அந்நியோன்னியமும், நேசமும் வளர்ந்திருந்தன. பத்ரி காஞ்சியின் வீட்டிலேயே பழி கிடப்பான் — அல்லது அவள் பத்ரியின் வீட்டில். காஞ்சியின் அம்மா 'வீட்டில் இல்லாத நாட்களில் பத்ரியின் வீட்டில் இரண்டு வீட்டுக்குமாகச் சமைத்து விடுவார்கள். இப்படியே பத்ரியின் அம்மா வீட்டில் இல்லாத போது காஞ்சியின் வீட்டில். பத்ரியின் அப்பா விளையாட்டுச் சாமானோ, பிஸ்கெட் பொட்டலமோ, எது வாங்கினாலும் ஜோடியாகத்தான் வாங்குவார் — பத்ரிக்கு ஒன்று, காஞ்சிக்கு ஒன்று. காஞ்சியின் அப்பாவும் அப்படித்தான்.

அந்தச் சமயத்தில் அக்கம் பக்கத்தில் ஒரே பெண் குழந்தைகளாக இருந்தன. அவர்களுடன் சேர்ந்து அவர்கள் விளையாட்டுக்களைப் பத்ரியும் விளையாடுவான். பாண்டி, ஸ்கிப்பிங், நொண்டி..... எல்லா விளையாட்டுக்களிலும் காஞ்சி கெட்டிக்காரி. அவளுக்கும் அவள் கட்சிக்கும்தான் எப்போதும் வெற்றி. பத்ரியை அழ விடுவதில் அவளுக்கு ஓர் ஆனந்தம். பிறகுதான் இந்த நிலைமை மாறியது. சிறுவர்களே யில்லாத அந்த வட்டாரத்தில் திடீரென்று சிறுவர்கள் வந்து சேர்ந்தார்கள். இது வரை பெண்களுடனேயே விளையாடிக் கொண்டிருந்த பத்ரிக்கு இப்போது விளையாடச் சிநேகிதர்கள் கிடைத்தார்கள். கிட்டிப்புள், கோலி, பம்பரம், கிரிக்கெட் — அதன்பின் அவன் தன் சிநேகிதிகளை இலட்சியமே பண்ணவில்லை.

ஆனால் காஞ்சி? அவளும் தன் சிநேகிதிகளை விட்டு விட்டு இவர்களுடைய விளையாட்டுக்களில் கலந்து கொள்வாள்! பெண்ணாக இருந்தாலும் சளைக்காமல் தோற்காமல் அவர்களுக்குச் சமமாக விளையாடுவாள். அவளுடைய அம்மா திட்டிக் கொண்டே யிருப்பாள். "நீ ஏண்டி, பிள்ளைக் குழந்தைகளோடு விளையாடுகிறாய்? கையைக் காலை உடைத்துக் கொண்டு நிற்கவா ?"

ஆனால் காஞ்சி பிள்ளைகளோடு முரட்டு விளையாட்டெல்லாம்தான் விளையாடுவாள். மரத்திலும் மட்டையிலும் ஏறுவாள்; ஓடிச் சாடுவாள். அவளுக்கு இருந்த தைரியத்திலும் சாமர்த்தியத்திலும் பாதிகூடப் பத்ரிக்குக் கிடையாது. எந்த விளையாட்டானாலும் அவனை எல்லாரும் பின்னுக்குத் தள்ளி விடுவார்கள். அவனுடைய பயத்தையும் கூச்சத்தையும் பயன்படுத்திக் கொண்டு அவனை ஏமாந்த சோணகிரியாக்கி விடுவார்கள். காஞ்சியோ எதிலும் முன் வந்து நிற்பாள். "முரடு. துஷ்டை! ஆண்பிள்ளையாகப் பிறக்க வேண்டியது தவறிப் போய்ப் பெண்ணாகப் பிறந்திருக்கு!" என்பாள் அவளுடைய அம்மா.

பத்ரிக்கு இரக்க சுபாவம்; பூஞ்சை மனசு. பிறர் கஷ்டம் காணச் சகிக்க மாட்டான். காஞ்சியோ முரட்டுத் தைரியம் உடையவள். பிறரிடம் சண்டைக்குப் போவதிலும் அவர்களைத் துன்புறுத்துவதிலும் அவளுக்கு விசித்திரமான திருப்தி.

இப்படிக் குணங்களில் வேறுபட்டிருந்தாலும் பக்கத்து வீடுகளில் இருந்த பத்ரியும் காஞ்சியும் ஒன்றாக விளையாடி ஒன்றாக வளர்ந்து பெரியவர்களாக ஆனார்கள். பத்ரி கல்லூரியில் சேர்ந்த வருடத்தில்தான் காஞ்சியின் அப்பா வேறு வீட்டுக்கு மாற்றிக் கொண்டு போனார். ஆனால் அந்தக் குடும்பங்களிடையே உறவு விட்டுப் போய்விட வில்லை. ஆனால் பத்ரியும் காஞ்சியும் இப்போது அறியாப் பருவத்தைக் கடந்து விட்டார்கள். ஒருவரையொருவர் புது மனிதர்களைப் போலப் பார்த்துக் கொள்வார்கள்.

இத்தனை நாட்களாக விளையாட்டாகத் தன்னை அலட்சியப்படுத்திய காஞ்சி இப்போது நிஜமாகவே தன்னை வெறுக்கிறாள் என்று பத்ரிக்குத் தோன்றியது. அவளுக்குப் பள்ளிக்கூடத்தில் எவ்வளவு செல்வாக்கு! பேச்சுப் போட்டிகளில் பரிசு பெற்றாள். விளையாட்டிலே கோப்பை பெற்றாள். ஆனால் பத்ரி புத்தகப் புழுவாக இருந்தாலும் படிப்பில் கூடப் பரிசு வாங்கவில்லையே! அவளுக்குத் தன்னைப் பார்த்தால் இளப்பமாக இருந்ததில் அதிசயமில்லை.

பத்ரி பாடத்தையே கவனிக்க மாட்டான். எப்போதும் யோசனையில் ஆழ்ந்திருப்பான். நோட்டில் படம் போட்டுக் கிறுக்கிக் கொண்டிருப்பான். கவிதைகள் எழுதிக் கொண்டிருப்பான் — நாவல்களையும் கவிதைகளையும் படித்துக் கொண்டிருந்த பத்ரிக்குப் போன வருடந்தான் உதட்டிலே மீசையும் உள்ளத்தில் ஆண் — பெண் பேத உணர்வுகளும் அரும்பத் தொடங்கியிருந்தன. காஞ்சியை ஒரு புதுமையான பொருளைப் பார்ப்பதுபோல் அவன் கண்கள் பார்க்கத் தொடங்கின. இளம் நெஞ்சத்தின் அலட்சியத் துடிப்புடன் அவன் அவளைப் பற்றிக் கவிதைகள் எழுதுவான். அவள் கேலி பண்ணுவாள். "காஞ்சி! நீ என்னைக் கலியாணம் செய்து கொள்வாயா?" என்று ஆவலுடன் கேட்பான். அதைக் கேட்டு அவள் அலட்சியமாகச் சிரிப்பாள்.

இவையெல்லாம் நடந்து ஒரு வருடமாகி விட்டன. இன்னமும் அவன் பெயர் பத்ரியாகத்தான் இருந்தது. ஆனால் பெயரைத் தவிர வேறு எத்தனையோ மாறுதல்கள் நிகழ்ந்து விட்டன !

பத்ரி மீசையைத் தடவிக் கொண்டே கண்ணாடியில் தன் முகத்தைத் திருப்தியுடன் பார்த்துப் புன்னகை செய்தான். ஆமாம், பத்ரி மாறித்தான் விட்டான். முகத்தில்

இப்பொழுது

உங்களின் விருப்பமான

லோமா

குழாய்

பாக்கிங்கிலும்கூட
(போமேட் ஆக)
கிடைக்கிறது!



- சிந்தாது
- சேதமில்லை
- உடையாது

அதில் மிகக் குறைந்த அளவில்
வளிம்புத்தன்மையுள்ளதால்
பெண்களுக்கும்கூடச் சிறந்தது.

ஏகபோக ஏஜெண்டுகள் & ஏற்றுமதியாளர்கள்:
எம். எம். கம்பாத்வாலா,
அஹமதாபாத்—1.

ஏஜெண்டுகள்:
ஸி.நரோத்தம்&கோ பம்பாய்–2.

TAM

ஸ்டாக்கிஸ்டுகள்

மெஸர்ஸ் ஜே. பாலபாய் & கம்பெனி
260, சைனா பஜார், சென்னை

கலாக்ஷேத்ரா

(நுண்கலைக் கல்லூரி)

ஸ்ரீமதி ருக்மிணி தேவி அவர்களின்
நிர்வாகத்தின் கீழ்

பல சிறப்பு வாய்ந்த கலைஞர்கள், பண்டிதர்கள்
ஆகியோரின் உதவியுடன் நடைபெறுகிறது

பிரின்ஸிபால்:
சங்கீத கலாநிதி பூதலூர்
ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி

21 - 6 - 65 முதல்
மாணவ மாணவிகள் சேர்க்கப்படுவார்கள்

டிகிரி மற்றும் டிப்ளோமா வகுப்புகள்

சங்கீதம்: *நன்கு தேர்ச்சிபெற்ற வித்வான்களால் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.*

சங்கீத சிரோமணி வகுப்புகள்: *(சென்னைப் பல்கலைக் கழகத்தினரால் அங்கீகரிக்கப்பட்டது.)*

கலாக்ஷேத்ரா வழங்கும் டிப்ளோமா வகுப்புகள்: *வாய்ப்பாட்டு, வீணை, கோட்டு வாத்தியம், வயலின், மிருதங்கம்.*

பரதநாட்டியம் மற்றும் கதகளி

ஓவியம் மற்றும் சித்திர வேலைகள்

ஹரிகதா காலக்ஷேபம்

நாடகக் கலை: *நாடகக் கலையில் புகழ்பெற்ற டச்சு நிபுணர் மிஸ்டர் பால் ஸ்டார்ம் அவர்களின் நிர்வாகத்தின் கீழ் நடைபெறுகிறது.*

பொதுக் கல்வி: *மெட்ரிகுலேஷன் முறை அல்லது நுண்கலை பயிலும் மாணவர்களுக்கு பெஸன்ட் தியாஸாபிகல் உயர் நிலைப்பள்ளி, கலாக்ஷேத்ரா இரண்டிலும் சேர்ந்து இணைந்த வகுப்புகள்.*

மொழிகள்: *ஸம்ஸ்கிருதம், ஆங்கிலம், தமிழ் தெலுங்கு மற்றும் ஹிந்தி.*

பட்டதாரிகளுக்கு உயர்படிப்பு வகுப்புகள்: *சங்கீதம் மற்றும் நுண்கலைகளைப் பயிலுவோர்களுக்கு மட்டும்.*

ஹாஸ்டல்: *மாணவர்கள், பெண்கள், சிறுவர்களுக்குத் தனித்தனியாக ஹாஸ்டல் வசதிகள் உண்டு.*

விதிமுறைகள் வேண்டுவோர் ரூ. 1.00
அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்

சூபரின்டென்டென்ட்: கலாக்ஷேத்ரா
திருவான்மியூர் - சென்னை - 41


மனத்தை அரிக்கும் ஓயாத கவலை
தலை குனிந்து நிற்க வேண்டிய நிலை...



வருவாய்க்கு மிஞ்சிய செலவு
எதிர்பாராத குடும்பச் செலவு
குழந்தைகளின் மேல்படிப்பு
சமாளிக்க முடியாத நிலை

ஏன்?

இவ்வளவு காலம் சேமிப்பு என்னும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளாதது.



இனியும் சேமிக்கலாம்

எல்லோருடைய வருவாய்க்கு தகுந்த அளவில் பலவித சேமிப்பு திட்டங்கள் எங்களிடம் உள்ளன. இன்றே உங்கள் அருகாமையிலுள்ள இந்தியன் பாங்க் ஏஜெண்டை அணுகுங்கள்.

டிபாசிட்டுகளின் வட்டி விகிதங்கள் அதிகரிப்பு

91 நாட்கள் மற்றும் அதிகமாக ஆனால் 6 மாதங்களுக்குள்	5%
6 மாதங்கள் மற்றும் அதிகமாக ஆனால் ஒரு வருடத்திற்குள்	5½%
1 வருடம் மற்றும் அதிகமாக ஆனால் 2 வருடத்திற்குள்	6%
2 வருடங்கள் மற்றும் அதிகமாக ஆனால் 3 வருடத்திற்குள்	6¼%
3 வருடங்கள் மற்றும் அதிகமாக ஆனால் 5 வருடத்திற்குள்	6½%
5 வருடங்கள் மற்றும் அதிகமாக ஆனால் 7 வருடத்திற்குள்	7%
7 வருடங்கள் மற்றும் அதிகமாக ஆனால் 9 வருடத்திற்குள்	7¼%
9 வருடங்கள் மற்றும் அதிகமாக	7½%
சேவிங்ஸ் பாங்கு டிபாசிட்டுகளுக்கு	4%


இந்தியன் பாங்க் லிட்.

பதிவு அலுவலகம்:
இந்தியன் சேம்பர் பில்டிங், எஸ்பிளனேட். சென்னை-1

ELEGANT

ஆண்மையின் மிடுக்கும், கம்பீரமும் ஏறியிருந்தன. பழைய பயந்தாங்கொள்ளி பத்ரியில்லை அவன். ஜன்னலருகே சென்று வெளியே பார்த்தான். தூரத்தில் மைதானத்தில் சகமாணவர்கள் சிலர் கால் பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

பத்ரியையும் விளையாடக் கூப்பிட்டார்கள். அவன்தான் கடிதம் எழுதப் போகிறேன் என்று தங்கி விட்டான். கிஷோர் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே, 'ஸ்வீட் ஹார்ட்டுக்கா?' என்று கேட்டான். பர்ஸிலிருந்த புகைப்படத்தை அவன் ஒருநாள் பார்த்து விட்டான். ''அவள் என் காதலி'' என்றுபத்ரி சொல்லியிருந்தான். அதைக் கிஷோர் மறக்காமல் சொல்லிக் காட்டியவாறு இருக்கிறான். ஆனால் உண்மை அவனுக்குத் தெரிந்தால்!



''என் மனைவி போட்டுக் கொடுத்த காப்பியைப் பிளாஸ்கிலே கொண்டு வந்தேன். நம்ம ஆபீசில் யாரோ எனக்குத் தெரியாமல் குடித்து விட்டார்கள் சார்!''
''ஐயோ, பாவம்!''

அழகிய வருடங்களுக்கு முன் எம்மாத்திரம்! எல்லாம் காஞ்சியால் வந்த வினை!

'ஆமாம். காஞ்சி ஏதோ சொன்னான் என்று நான் தைரியத்தைத் தேடிப்போனேன். இல்லாவிட்டால் கனவுலகத்தில் மிதக்கும் கவலையில்லாத சிறுவனாக இருப்பேன் — இதோ இந்தப் புகைப்படத்தில் இருப்பதைப்போலவே!' என்று அவன் நினைத்துக் கொண்டான்.

காஞ்சியின் வீட்டுக் கூடத்தில் நின்றபடி சுவரில் அவனையும்காஞ்சியையும் சிறுவயதில் எடுத்த புகைப்படத்தைப் பார்த்துக் கொண்டு பத்ரி நின்றிருந்தான். உள்ளே போயிருந்த காஞ்சியின் அம்மா கையில் காப்பியுடன் வந்தாள். ''உட்காரேன், அப்பா!'' என்றாள்.

பத்ரி பெருமூச்சு விட்டான். காஞ்சிக்கு அவன் கடிதமே போடவில்லை. அவள்தான் முதலில் போடட்டுமே என்று இருந்து விட்டான். அவளும் போடவில்லை, அவனும் போடவில்லை — ஒரு நாள் காலையில் அவள் மீதிருந்த கோப வேகத்தில் தினசரியைப் புரட்டிக் கொண்டிருந்தபோதுதான் ராணுவப் பயிற்சிப் பள்ளியின் விளம்பரம் கண்ணில் பட்டது. உள்ளத்திலே திடீரென்று ஏற்பட்ட ஒரு வெறியுடனும் தீர்மானத்துடனும் அப்பா தடுத்தும் கேளாமல் அந்தப் பள்ளிக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பி, இடமும் கிடைத்தது.

இப்போது பயிற்சிக் காலத்தில் ஒரு வருடமும் பூர்த்தியாகி விட்டது. நாளைக்கு லீவு நாட்கள் தொடங்கப் போகின்றன. இந்த ஒரு வருடத்தில் அவனைப் பயிற்சிப் பள்ளியில் எப்படிப் புரட்டியெடுத்து விட்டார்கள்!— தினசரி அதிகாலையில் எழுந்திருந்து லெப்ட் ரைட் — ஓட்டமும், சாட்டமும், ஏறுதலும் இறங்குதலும், குழிகளைத் தாண்டுவதும்,— துப்பாக்கி சுடுவதும் — அடேயப்பா! அவன் இப்போது தைரியசாலி. பலசாலி. இப்போது அவன் ஆண் மகன்!

ஆனால் அவனுக்கு வருத்தமாக இருந்தது. நேற்றுக்கூட இரவு அவன் விளக்கொளியில் ஒரு கவிதை எழுத முயன்றான். ஆனால் எதுவுமே எழுத வரவில்லை. எழுதும் சக்தியை அவன் இழந்து விட்டான்! தன்னுடைய பழைய வாழ்க்கையை — கள்ளங்கபடில்லாத இளமையை — நினைத்துக் கொண்ட போது துக்கமும் ஏக்கமும் அவன் நெஞ்சை அழுத்தின. எப்படியிருந்தான்! எப்படி ஆகிவிட்டான்! இப்போது அவன் அடைந்திருப்பவை அவன் நிரந்தரமாக இழந்து விட்ட அந்த

அவன் உட்கார்ந்தான். ''அடேயப்பா! ஆளே அடையாளம் தெரியாமல் மாறி விட்டாயே!'' என்றாள் மாமி. பத்ரி வெட்கத்துடன் சிரித்தான். 'காஞ்சிக்கு என்னை அடையாளம் தெரியுமோ என்னவோ?' என்று நினைத்தான்.

''அவள் கல்லூரியிலிருந்து வரும் நேரம் தான்!'' என்று காஞ்சியின் அம்மா சொல்லிக் கொண்டிருந்தபோது காஞ்சியே உள்ளே நுழைந்தாள். பத்ரியைப் பார்த்துச் சட்டென்று நின்றாள்.

பத்ரி எழுந்து நின்றான். அடையாளம் தெரியவில்லையா அவளுக்கு?

''காஞ்சி! பத்ரி எப்படி மாறி விட்டான் பார்த்தாயா?'' என்றாள் அம்மா.

காஞ்சி அவனைப் பார்த்து இலேசாக முறுவலித்து விட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள். பத்ரி வியப்புடன் அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான். பணிவு, அடக்கம், வெட்கம்..... காஞ்சி என்னும் முரட்டுப் பாலைவனத்தில்கூடப் பெண்மையின் மெல்லியல்புகள் துளிர்த்து விட்டனவா?

காஞ்சியின் அம்மா உள்ளே சென்றாள்.

''காஞ்சி!'' என்று ஆவலுடன் அழைத்தான் பத்ரி.

காஞ்சி நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''காஞ்சி! நீ எனக்குத் தைரியம் வர வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தாயல்லவா? நான் இப்போது தைரியசாலியாகி விட்டேன்!'' என்றான் பத்ரி.

காஞ்சி இலேசாகப் புன்னகை செய்தாள்; குழந்தைப் பருவ நினைவுகள்.

''காஞ்சி! இப்போது என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்வாயா?''

ஆண்டவன் செயல்

குட்டிக் கதை



சீர்ண கடூரமாகக் கத்திற்று கழுதை.

குட்டிச்சுவர் காதைப் பொத்திக் கொண்டு, ''எல்லோரும் உன்னை ஏன் அப்படி வெறுக்கிறார்கள் என்று இப்பொழுதல்லவா தெரிகிறது எனக்கு!' என்றது வெறுப்புடன்.

''ஏன் வெறுக்கிறார்களாம்?'' என்று ஏதும் அறியாதது போல் கேட்டது கழுதை.

''இப்படிக் கத்தினால் யார்தான் உன்னை வெறுக்க மாட்டார்கள்? அதோ பார், குயிலை! அது, 'கூ குக்கூ' என்று எவ்வளவு அழகாகக் கூவுகிறது! அதே மாதிரி நீயும் கூவினால் உன்னையும் எல்லோரும் விரும்புவார்களல்லவா?'' என்றது குட்டிச்சுவர்.

கழுதை தன் வெள்ளி மூக்கால் அதை ஓர் இடி இடித்துச் சொல்லிற்று:

''அட, அசட்டுக் குட்டிச்சுவரே! எனக்கு மட்டும் அந்த ஆசை இல்லாமலா போய் விட்டது? இருக்கத்தான் இருக்கிறது? இருந்து என்ன பிரயோசனம்? ஆனைப்பட்ட ஆண்டவனல்லவா எனக்கு இந்த அழகான குரலையும், அதற்கு அந்த அவலட்சணமான குரலையும் கொடுத்திருக்கிறார்! அது ஏன் தெரியவில்லை, உனக்கு?''

அவள் மிரண்ட பார்வையுடன் ஆவல் ததும்பும் அவன் முகத்தைப் பார்த்து விட்டு விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள்.

''சொல்லு, காஞ்சி!'' பத்ரி திடீரென்று அவள் தோள்களைப் பற்றினான். அவன் கை பட்டதுமே அவள் தேகம் பதறிச் சிலிர்த்தது. சட்டென்று அவன் கைகளை விலக்கி விட்டு உள்ளே ஓடி விட்டாள்.

பத்ரி இடி விழுந்தது போலானான். அன்றிரவு தன் வீட்டில் இதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தான். என்ன ஆகிவிட்டது காஞ்சிக்கு? ஏன் அப்படி விசித்திரமாக நடந்து கொண்டாள்? அவன் பழைய நோட்டு ஒன்றில் எழுதியிருந்த கவிதையைப் படித்தான். துக்கம் அதிகமாகியது. அந்தச் சந்தோஷமான நாட்கள்! கவலையற்ற இளம் பருவம்! எல்லாவற்றையும் அவன் விட்டு விட்டு ஓடினது யாருக்காக? அவளுக்காக. இப்போது அவள் அவனை ஒதுக்குகிறாளா?

காஞ்சிக்கும் தூக்கம் வரவில்லை. எவ்வளவு தைரியசாலியாக இருந்தாள் அவள்! அவனுக்குத் தைரியம் இல்லையென்று கேலி பண்ணினாள். ஆனால் இன்று ஆண்மையும் தைரியமும் வரப் பெற்றவனாய் அவன் அவளை நெருங்கியபோது அவளுக்குப் பேசவே நாஎழவில்லை. பயந்து ஓடினாள். ஆண்மையின் உண்மையான கம்பீரமும் சக்தியும் அவளை நடுங்கச் செய்து விட்டன. அவனிடமிருந்து அவள் வேறு எதை எதிர்பார்த்தாள்?

காலையில் பத்ரி ஜன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டு நின்றான். குளிர்ந்த காலைத் தென்றலில் உடல் இலேசாக நடுங்கியது. காஞ்சி அவனைப் பார்த்து ஏன் பயப்பட வேண்டும்? இதே யோசனைதான். அவனுடைய இந்த மீசையும் கட்டைத் தொண்டையுமா காரணம்? நான் ஏன் இப்படி என்னை மாற்றிக் கொண்டேன்? என்னுடைய அந்த அழகான முகமும், மெல்லிய உணர்வுகளும், கவிதைச் சக்தியும் —

இவற்றை ஏன் இழந்தேன்?

பொழுது புலர்ந்தது. பகலின் ஒளியும் வெப்பமும் மெல்லத் தலை காட்டத் தொடங்கிய சமயத்தில் காஞ்சி எப்போதும் போலக் கல்லூரிக்குச் செல்லப் பஸ் பிடிப்பதற்காகப் பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்து கொண்டிருந்தாள். அப்போது சாலையில் ஸ்கூட்டர் ஒன்று மெல்ல அவளைத் தாண்டிச் சென்றது — பத்ரி! காஞ்சிக்குத் தொண்டையை அடைத்துக் கொண்டது. பார்க்காதது போலப் போகிறானே! அவன் மேல் தான் தப்பு. அவன் எவ்வளவு ஆசையாக அவளைப் பார்க்க ஓடி வந்தான்? ஆனால் அவள்......

அது சாலை என்பதையும் மறந்து, ''பத்ரி!'' என்று கூவினாள் அவள். அதே சமயத்தில் அவனும் ஸ்கூட்டரைத் திருப்பிக் கொண்டு அவளை நோக்கி வந்தான்.


ஸ்கூட்டரின் பின்னால் அமர்ந்தவாறே, 'எவ்வளவு தைரியசாலியாக, தன்னிச்சையாகத் திரிந்து கொண்டிருந்தேன்! அழகான அந்த இளமைப் பருவம் ஒரேயடியாகத் தொலைந்து விட்டது' என்று அவள் நினைத்தாள். தன்னில் ஒரு பகுதியை நிரந்தரமாக இழந்து விட்டதை அவள் உணர்ந்தாள். ஆனால் —

முன்னால் இருந்த பத்ரியின் பரந்த முதுகின் மேல் அவள் பார்வை நிலைத்தது.

'எவ்வளவு சந்தோஷமான நாட்கள்!' என்று பத்ரி தன் கவிதைகளை நினைத்துக் கொண்டான். அந்தக் கனவுகளும் கற்பனைகளும் அவனை விட்டு ஓடி விட்டன. 'நான் மட்டும் இருக்கிறேன்' என்று அவன் நினைத்தான். திடீரென்று பின்னாலிருந்த காஞ்சியின் கை அவன் தோளை மெல்லப் பற்றியது. அந்த மென்மையான ஸ்பரிசம்! அவன் உடலெங்கும் இன்பச் சிலிர்ப்புப் பரவியது. இல்லை, அவன் தனியாக இல்லை. ஸ்கூட்டரின் வேகத்தைக் குறைத்து, அவளைத் திரும்பிப் பார்த்துப் புன்னகை செய்தான் அவன்.

எதையோ இழந்து விட்டார்கள்; எதையோ அடைந்து விட்டார்கள்.


பாண்ட்ஸ்
ட்ரீம்:.ப்ளவர் :.பேஸ் பவுடர்
POND'S
சொப்பன சுந்தரியின்
வதனப் பொலிவை
உங்களுக்கு அளிக்கும்
பாண்ட்ஸ் ட்ரீம்:.ப்ளவர் :.பேஸ் பவுடர் சீராகப் படிந்து முகத்திலுள்ள சிறு குறைகளை மூடி மறைக்கிறது...முகத்தைப் பளிச்சென்று வைக்கிறது! உங்கள் சரும நிறத்திற்கேற்றபடி தேர்ந்தெடுக்கப் பலவித வண்ணங்களில் கிடைக்கின்றது.
சீஸ்ப்ரோ - பாண்ட்ஸ்
இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பட்டது)
JWT-P-3219



"நீங்கதான் வெளியூருக்கு வீட்டுக்கும் போயிட்டீங்கன்னு பார்த்தேன்!"

"இல்லே! எங்களுக்குக் கடம்பாவிலே கொஞ்சம் வேலையிருக்கு... எங்க நாய்களைத்தான் வீட்டுக்கு ரயில் ஏற்றி அனுப்பி விட்டு வரோம்!"



"விடாமல் பேசுகிறவர்களுக்கும் யோசிக்காமல் பேசுகிறவர்களுக்கும் என்ன வித்தியாசம்?"


"ஒருவர் யோசிப்பதை நிறுத்துவதில்லை. மற்றவர் நிறுத்த யோசிப்பதில்லை."



"ஒரு பெண்ணின் அபிப்பிராயத்தைச் சுலபமாக மாற்ற ஓர் உபாயம் இருக்கிறது!"

"என்ன அது?"

"அவள் பேச்சை அப்படியே ஒப்புக் கொண்டுவிடுவதுதான் அது."




"உங்க முதலாளி உள்ளே இருக்கிறாரா?"

"இல்லே, சார்! வெளியே போயிருக்கிறார்."


"அதோ அலமாரிக்கு அருகில் அவர் தொப்பி தொங்குகிறது போலிருக்கிறதே!"

"ஆமாம், ஆனால் அவர் தொங்கவில்லை!"



ஜொள்ளுஜி, பஜ்ஜி, ஸஜ்ஜி







மனைவி (நோயாளிக் கணவனைப் பரிசோதிக்கும் டாக்டரிடம்): ஏதாவது நம்பிக்கை இருக்கா, டாக்டர்?


டாக்டர்: அது உங்கள் நம்பிக்கையைப் பொறுத்த விஷயமாயிற்றே! நீங்கள் என்ன விரும்புகிறீர்கள் என்று தெரிந்தால் அல்லவா நான் சொல்வதற்கு?


மனைவி: குழம்புக்குக் கொஞ்சம் உப்பு அதிகமோ?

அப்பாவிக் கணவன்: யார் சொன்னது அப்படி? உப்பு சரிதான். குழம்புதான் கொஞ்சம் குறைவு. அதனால் தான் உனக்கு அப்படித் தோன்றுகிறது!



பிகே







நல்ல காபி தயாரிக்க புத்தம்புதிய
பொடியே ஆதாரம்.

ப்ரூக் பாண்ட் காபி

எப்பொழுதும் புதியது.

மற்ற காபி பொடிகளுக்கும் ப்ரூக் பாண்ட் காபிக்கும் என்ன வித்தியாசம்? ப்ரூக் பாண்ட் காபி உள்ள ஒரு பையை திறந்து பாருங்கள் — விஷயம் புரியும். அது அப்போதே அரைத்த காபிக்கொட்டையின் உண்மையான புது மணம் கமழும்.

பொறுக்கி எடுத்த காபிக்கொட்டைகளை பதமாய் வறுத்து, அரைத்து அவைகள் வீசும் இயற்கையான மணத்தை காற்றுபுகாத அழகான ஸெலோபேன் பைகளில் அடைப்பதே ப்ரூக் பாண்டின் தனிச் சிறப்பு வாய்ந்தமுறை. இப்பொழுதே ப்ரூக் பாண்ட் காபி அருந்தி அதன் புத்தம் புதிய பூரணமான மணத்தை அனுபவியுங்கள்.

நீங்களும் ப்ரூக் பாண்டும் சேர்ந்து ஒரு கோப்பை அருமையான காபி தயாரிக்க முடியும். அதன் புதுமையையும் நறுமணத்தையும் ருசித்து அனுபவியுங்கள்.

82/BBC-6A TAM



இதுதான் தாம்பத்தியம்

ரோஹிணி

மாமியாரைக் கண்ட பழங்காலத்துப் பெண்போல் அலறியவாறே திருப்பதி எக்ஸ்பிரஸ் வண்டி திருவண்ணாமலை ஸ்டேஷனை விட்டுக் கிளம்பியது.

என்ஜினை அடுத்த மூன்றாம் வகுப்புப் பெட்டிக்குள் தனியாட்சி செலுத்திக் கொண்டிருந்த கோபாலன் பெருமூச்சுடன் கைக் கடிகாரத்தைப் பார்த்தான். பச்சை மணி முள் பத்தைத் தாண்டி விட்டிருந்தது. பிறகு ஜன்னல் வழியே காரிருளில் எதிர்த் திசையில் பூதம் பூதங்களாக மறைந்து பின்தங்கும் மரங்களைப் பார்த்தான். வானத்தில் தாரகைகள் கூட முகிற் துகிலில் நாணிக் கண் புதைந்து விட்டன. நல்ல அமாவாசை இருட்டு.

'...மணி பத்தா? அப்படியானால் ரயில் இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக 'லேட்'. நிச்சயம் காட்பாடி போவதற்குள் மணி ஒன்றாகிவிடும். சந்தேகமே இல்லை...அப்படியென்றால் இன்று குறைந் தூக்கம். நாளை வழக்கம் போல் ஆபீசுக்கு வேறு ஓடியாக வேண்டும்...அட, கடவுளே!'

வண்டி மெல்ல வேகத்தைக் குறைத்துக் கொண்டு வாழ்விழந்த வனிதையைப்போல் ஒளியற்ற ஒரு சிறு ஸ்டேஷனுக்குள் புகுந்து நின்றது. தொடர்ந்து போர்ட்டர் ஒருவன் 'அகரம் சிப்பந்தி' என்று ஊரின் திருநாமத்தை உரக்கக் கூவினான். கோபாலன் மெல்ல வெளியே எட்டிப் பார்த்தான். இரண்டு விளக்குகள், ஸ்டேஷன் பிளாட்பாரத்துக்கு அப்பால் உள்ள புளிய மரங்களுக்குப் போட்டியாக மங்கலாகச் சோம்பிக் கிடந்தன. 'யாராவது நம் வயதுக் கொத்த வாலிபர்கள் பேச்சுத் துணையாக வரமாட்டார்களா?' என்ற சபலத்தோடு இருளில் துருவினான். ஊஹூம்! இரண்டு கிராமத்து வயோதிகர்கள் மட்டும் ஏறினார்கள்; அவர்களும் அவசரம் அவசரமாக நித்திரா தேவியோடு சல்லாபிக்கச் சென்று விட்டனர். ரயிலும் கிளம்பியது.

அலுப்போடு ஜன்னல் கதவை மூடினான் கோபாலன். பின்னர் தன் இடத்துக்கு வந்து அமர்ந்தான். பொழுதே போகாமல் தன் பையைத் திறந்து, பர்ஸை எடுத்து அதிலிருந்த புகைப்படம் ஒன்றை அதற்கு நோகாமல் எடுத்துப் பார்த்தான். அவன் அதரங்களில் வெட்கப் புன்னகை அரும்பியது.

வடமொழி இலக்கியப் பட்டதாரி அவன். எனவே, காளிதாஸனையும், வால்மீகியையும் கற்றுத் தேர்ந்திருந்த அவன் உள்ளம் அந்தப் படத்தில் உள்ள நங்கையையும் இரசித்தது.

வட்டவடிவமான வதனம். கன்னப் பரப்பில் நீண்டிக் குறுகுறுக்கும் லோலாக்குகள், நெற்றியில் கவர்ச்சியான சிந்தூரப் பொட்டு. முகத்தின் அழகு வெள்ளத்தில் துள்ளி ஜாலம் புரியும் விழிக் கயல்கள், நட்சத்திரப் பொலிவு கொண்ட மூக்குத்தி. கழுத்தில் எளிய கருகமணி மாலை மட்டும்.

'பத்மா...' என்று அந்தப் பெண்ணின் பெயரைத் தனக்குள் ஒரு முறை சொல்லிப் பார்த்துக் கொண்டான். பத்மா—கோபாலன்...'பெயர்களில் ஏதாவது எழுத்துப் பொருத்தம் லவலேசம் இருக்கிறதோ...?'

இன்று மத்தியானம்தான் காட்பாடியிலிருந்து அவளைப் பெண் பார்க்கத் திருவண்ணாமலைக்கு வந்தான்; திருவண்ணாமலை அவனுக்கு முன்பே தெரிந்த ஊர்தான்.

துர்க்கையம்மன் கோவில் தெருவில்தான் பெண்ணின் தந்தை வக்கீலாக இருந்தார்.

அவனுக்கு அவள் வீட்டுக் கேஸரியும், பஜ்ஜியும் பிடித்திருந்தன. அதற்கு மேல் அவள் பிடிவில் இழுத்த பைரவி ராகம் பிடித்திருந்தது; யாவற்றுக்கும் மேலாக அவள் சௌந்தரியம்!...

'யாரையும் கூட அழைத்துச் செல்லாமல், அண்பிள்ளை நாம் மட்டும் போயிருக்கையில் அவளுக்கு ஒரு ரவிக்கைத் துண்டும், பஜாரில் வாங்கி வெற்றிலை பாக்கோடு கொண்டு வைத்தோமே. அது சரியோ?... அவள் வீட்டார் விரசமாக எண்ணியிருப்பார்களோ? சேச்சே! இருக்காது. தன் தந்தை மூலம் அதைப் பெற்றுக் கொள்கையில்தான் அவள் முகம் வெட்கத்தாலும் பூரிப்பாலும் எப்படி ஜொலித்தது...! மச்சினன் வாண்டுகூட 'எங்க அக்காவுக்குக் காப்பிப் பொடிக் கலர் தான் மிகப் பிடிக்கும். உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்று நகைத்தானே...'



இடீரென்று கோபாலனுக்கே நகைப்பு வந்து விட்டது. உதட்டைக் கடித்துக் கொண்டான். 'சீச்சீ...அதற்குள் 'மச்சினனு? ...'பாழும் மனமே!'

வண்டி போளூர் ஸ்டேஷனில் வந்து நிற்கவும் அவனது வஜ்ஜைறயான சிந்தனை கலைந்தது. புகைப்படத்தைத் தன் பைக்குள் திரும்ப வைத்தான்.

எக்ஸ்பிரஸ் ஆனதால் அங்கே ஒரு நிமிடம் தான் நிற்கும். யாரோ இருவர் - ஸ்திரீயும், புருஷனும் அவனது பெட்டியை நோக்கி ஓடி வந்தனர். புருஷனின் கையில் ஒரு பெட்டியும் ஒரு கூஜாவும், அவள் இடுப்பில் ஒரு குழந்தை, கையில் ஒரு மூங்கிற் கூடை.

அவள் கூடையைக் கணவரிடம் தந்து விட்டுக் குழந்தையோடு பெட்டிக்குள் ஏறிக் கொண்டாள். அவர் பெட்டியையும், கூஜாவையும், 'சீக்கிரம் வாங்கு, வாங்கு...' என்று கத்தினர், தான் கூடையை மட்டும் வைத்துக்கொண்டு. அவளால் குழந்தையையும் வைத்துக் கொண்டு அவ்விரண்டையும் வாங்கிக்கொள்ள முடியவில்லை. கார்டும் விசிலை ஊதிவிட்டார். அவள் குழந்தையை இறக்கி விட்டு விட்டு —அவற்றை வாங்கிக் கொண்டிருக்கலாம். ஏனோ அவளுக்கு அந்த எண்ணம் உதிக்கவில்லை.

அவர் தடதடவென்று சாமான்களை உள்ளே தள்ளிவிட்டு, தாமும் நகரும் ரயிலுக்குள் பாய்ந்து தாவினர். தம் எரிச்சலையும் படபடப்பையும் மனைவி மேல் பொழிந்தார்.

''ஏ சனியனே...! இரை தின்ற மலைப் பாம்பு மாதிரி நிற்கிறாயே. நீ பெற்ற செல்வத்தை இடுப்பிலிருந்து கீழே தள்ளிவிட்டுச் சாமான்களை வாங்கிக் கொண்டால் என்ன? அறிவில்லை....?'' என்று பொரிந்தார். அவள் பதிலே பேசவில்லை. அவமானத்தோடு சாமான்களை ஒழுங்காகப் பெஞ்சுக்கடியில் தள்ளிவிட்டு, அரைத் தூக்கத்தில் இருந்த சிசுவோடு கோபாலனுக்கு எதிர் ஆசனத்தில் அமர்ந்தாள்.

வசதியாக உட்கார்ந்த பிறகும் அவரது சினம் தணிந்தபாடில்லை. ''சே... இது என்ன நம் வீடா, நீ வழக்கம்போல் ஆடி அசைந்து கொண்டு காரியம் பண்ண? இப்போது நான் மட்டும் சமயோசிதமாக நடந்து கொண்டிராவிடில் என்ன ஆகியிருக்கும்? நான் போளூர் பிளாட்பாரத்திலேயே என் சட்டைப் பையில் டிக்கெட்டுகளோடு இருந்திருப்பேன், ரயிலைத் தவற விட்டு விட்டு. நீமட்டும் உன் குழந்தையோடு பிச்சைக்காரி மாதிரி பேந்தப் பேந்த ரயில்



சுவைமிக்க உணவிற்கு
துஷார் வனஸ்பதி
வைட்டமின்கள்
'ஏ'யும் 'டி'யும்
நிறைந்தவை
Tushar
துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ், லிட்., கர்நூல்.

ASP/TI-14 TAM.

பெட்டியில் விழிப்பாய்...சட்! பெண்களுக்கே விவேகம் போதாது!'' என்றார் அலுப்போடு.

விழிப்போடிருக்கும் ஒரே சக பிரயாணியான கோபாலன் மட்டும் அவளை ஓரக் கண்ணால் கவனித்தான்; கள்ளம் கலக்காமல், கண்ணில் கறை படாமல்.

வயது முப்பது இருக்கும். லட்சுமீகரமான முகம். நெற்றியில் பிரகாசமான சிவப்புக் குங்குமம். சாதாரண ஒன்பது கஜ நூல் புடவை.

கணவனின் கடுசொற்களால் அவள் முகம் வாட்டமும், கலக்கமும் கண்டிருக்கிறது. கோபாலனின் மனம் பரிதாபத்தால் உருகி விட்டது.

'ஹூம்... கணவன் என்றால் மனைவி மீது அறுபது நாழிகையும் அதிகாரம் செலுத்தத் தான் வேண்டுமா? அதுவும் இராக்காலத் தில், ரயில் பெட்டியில், நாலு பேர் முன்பு? தாலி கட்டிய மனைவிதான் என்றாலும் அவளுக்கும் சிறிதாவது தன்மான உணர்ச்சி இருக்காதா?... பெருந்தன்மையே இல்லாமல் இருக்கிறாரே இந்த மனிதர்?... தலைகூட நரைத்து விட்டது. ஒருவேளை இந்த அம்மாள் இரண்டாந்தாரமோ? ஏனெனில் அவள் முகம் மட்டும் இளமை குன்றாமல் சொர்ண ரேக்குப் போல் மின்னுகிறதே...' என்று கோபாலன் கசப்பாகவும் அநுதாபமாகவும் சிந்தித்தான். அவர்களைக் கவனியாதவன் போல் ஜன்னல் வழி தெரிந்த வெளிப்புறக் காட்சியில் கண்களை ஓடவிட்டான்.


''நான் என்ன பண்ணுவேன்? குழந்தை தூக்கத்தில் என் தோளோடு ஒட்டிக் கொண்டிருந்தான். இலேசில் கீழே இறக்க முடியாது போல் இருந்தது. கொஞ்சம் திகைத்துத் தவித்துப் போய்த்தான் விட்டேன். அதோடு ரயிலும் இப்படி உடனேயே புறப்பட்டுவிடும் என்று நினைக்கவில்லை...'' அந்தப் பெண்ணின் பேச்சில் மிருதுத்தனமும் வினயமும் பின்னிக் கிடந்தன.

அப்போதும் அவர் சும்மா இருக்கவில்லை. சிடுசிடுப்புடன், ''சரி சரி, போதுமே...! யார் உன்னைத் திடீரென்று விளக்கம் கேட்டது?.. கொள்ளிடம் பெருக்கு எடுத்தாற்போல் வாய்ப் பேச்சு மட்டும் பொங்குகிறது. என்னை இன்னும் மிருகமாக்காமல், இதோடு நிறுத்திக் கொள்...! இல்லையோ, வீடு போய்ச் சேர்ந்ததும் உன்னைத் தொலைத்து விடுவேன்!''

அந்தப் பெண் முகம் அவமானத்தில் சிவந்து வியர்த்தது. கண்களில் துளித்து விட்ட நீரை மெதுவாகத் துடைத்து விட்டுக் கொண்டாள்.

பட்ட காலிலேயே படும் என்பதை மெய்ப்பிப்பதுபோல் குழந்தையும் வீரிட ஆரம்பித்தது. அந்த மனிதர் ஓங்கித் தன் தலையில் அடித்துக் கொண்டார்.

''சரியாகப் போச்சு! இருக்கிற கஷ்டம் போதாது என்று இந்தப் பிசாசு வேறு பிலாக்கணம் பாட ஆரம்பித்து விட்டதா? ஏய், உன்னைத்தான்! பெட்டியைத் திறந்து அந்த மாவில் கொஞ்சம் எடுத்துக் கூஜாத் தண்ணீரில் கரைத்து இதற்குக் கொடுத்து வாயை அடைக்கிற வழியைப் பார். ஜல்தி





"ஏனய்யா தொண தொணக்கிறே?"

"ராசி பலன் போட்டிருக்கிறதா? கொஞ்சம் கும்ப ராசி மட்டும் படியுங்களேன்."

"சிறு சிறல், கீழே விழுதல், காயம் படல், மண்டை உடைதல், ரத்தம் கட்டிப்போதல், மானேஜர் கோபம், மாமியார் வருகை, செலவினங்கள், பணம் திருடு போதல், கணவன் மனைவி உறவு சீர் குலைதல். ஆக மொத்தத்தில் இந்த ராசிக்காரர்களுக்கு மகிழ்ச்சிகரமான வாரமே. படிச்சாச்சு, திருப்திதானே?"

இன்னும் கொஞ்ச நேரம் போனால் இவன் தன் சத்தத்தால் இந்த ரயில் பெட்டியையே நாற அடித்து விடுவான்....!" என்றார் அவர்.

அந்தப் பெண் கையைப் பிசைந்தாள். பிறகு தீனமான குரலில், ".... பால் பவுடர் சாயந்திரமே தீர்ந்துவிட்டது. ஊருக்குப் போய்த்தான் வாங்க வேண்டும் புது டப்பா..... நீங்கள் தூங்குங்களேன்..... நான் எப்படியாவது சமாதானப்படுத்திக் கொள்கிறேன்..... இது பசியினால் அழவில்லை. ரயிலுக்கு வருவதற்குமுன் பால் சாதம் போட்டிருக்கிறேன்......" என்றாள். அவள் கண், வாய், காது எல்லாம் நடுங்கின.

"....ஒரு வசனம் சொல்லுவார்கள்: 'முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா' என்று. அது போல....." என்று ஆத்திரத்துடன் தொடங்கின அவர் மேற்கொண்டு சற்று யோசித்தார்.

கோபாலனுக்குப் பாவம்! அந்தப் பெண்ணின் நிலையைக் காணச் சகிக்கவில்லை. சற்றுத் தயக்கத்துடன் தன் பையைத் திறந்தான். தான் திருவண்ணாமலையில் ரயில் வரும் வரை கொறிப்பதற்கென்று வாங்கின பிஸ்கட்டுகளில் இரண்டை அவரிடம் நீட்டினான். "ஸார்! குழந்தைக்குக் கொடுக்கலாம் என்றால் கொடுங்கள்....."

அந்த மனிதர் அதை வாங்கித் தம் மனைவியிடம் தந்தார். பிறகு கோபாலனைப் பார்த்து அற்பச் சிரிப்புடன், "வந்தனம் ஸார்! 'சம்சாரம் சாகரம்' என்று சும்மாவா சொன்னார்கள்? அது சாகரம் மட்டும் இல்லை; நரகம் என்றுகூடச் சொல்வேன். அப்படி அடித்து விடுகிறார்கள் இந்தப் பெண்கள்...." என்று பிரசங்கம் செய்தார்.

கோபாலனுக்கு அவர் பேச்சு வேண்டியே இருக்க வில்லை. கண்களும் சொக்கவே, மௌனமாக மேல்தட்டில் ஏறிப் படுத்துக் கொண்டான். இரக்கமும் வெறுப்பும் ஏக காலத்தில் கொந்தளித்தன. விரைந்தோடும் ரயிலின் சத்தம் நீலாம்பரியாய்த் தாலாட்ட அயர்ந்து உறங்கி விட்டான்.

எவ்வளவு நேரம் உறங்கினானோ, அறியான். திடுமென்று தூக்கம் கலைந்து மெல்ல விழித்துப் பார்த்தான். கீழே அவன் கண்ட காட்சி அவனைப் புல்லரிக்க வைத்தது.

நீல விளக்கு உமிழும் கடரில் அத்தம்பதியினர் இன்துயிலில் ஆழ்ந்திருந்தனர். அந்த மனிதர் உட்கார்ந்தவாக்கிலேயே தூங்கினார். அவர் மனைவி அவர் மடியில் தலை வைத்துப் பெஞ்சு நெடுகப் படுத்திருந்தாள். அவளது வளைக் கரங்கள் அவரது இரு முழங்கால்களையும் பிரியமாகச் சுற்றி வளைத்திருந்தன. தூங்கும் அவள் வதனத்தில்தான் என்ன புன்னகை! பெருமித ஜிலுஜிலுப்பு! இன்பக் களிநடம்!


கணவரது இடக் கரம் அவளது நெற்றியில் வாஞ்சையாக, போதையாகப் பதிந்திருந்தது. கீழே சப்புக் கொட்டியவாறு உறங்கும் அவர்களது குழந்தை — அவர்களது பரஸ்பர 'மோதன' இதய நெகிழ்ச்சிகளின் அதி கவர்ச்சியான சான்று!

".....என்ன அதிசயம்! சில மணி நேரத்துக்குமுன் இருந்த தம்பதியா இவர்கள்? இவர் அரக்கன் போல் அவளது மென்கிதயத்தைத் தம் தீ நாக்கினால் சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருந்தார்! இந்தப் பெண் வேதனையாக, கதியற்றுப் புலம்பி, கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள். அவளது தன்மானமே பங்கமடையும்படி வேதனையுண்டாக்கிய இக்கல் நெஞ்சரின் மடியில் இவளால் எப்படி இவ்வளவு ஆனந்தமாகவும் சோர்வின்றியும் குதூகலத்தோடும் உறங்க முடிகிறது? ஹூம்....! அந்தப் பொறுமையின்மை, சினம், அவமதிப்பு எங்கே போயின? இதயத்தோடு இதயமும், உணர்வுகளோடு உணர்வுகளும் குலாவிச் சேர்ந்து விட்டனவா? அப்படியென்றால் நாம் எண்ணமிட்டது எல்லாம் மாபெரும் தவறு? இதுதான் தாம்பத்தியமா? விசித்திரத்திலும் விசித்திரம்!....."

மெல்ல, சத்தம் செய்யாமல் கீழே இறங்கினான் கோபாலன். அந்தப் பெண்ணின் மணிக் கழுத்திலிருந்த, மின்னலும் மாங்கல்யம் அவன் குழப்பத்தை யெல்லாம் தெளிவிப்பதைப் போல் மிக மிகத் தகதகத்தது. 'இப்படித் தான் நாமும் பத்மாவும், இன்றில்லாவிட்டால் இன்னொரு நாள். இருப்போமா....?'

கண்கள் பனிக்க, உடல் சிலிர்க்க நின்றான் கோபாலன்.

ரயில் வண்டி வேலூர் டவுன் ஸ்டேஷனை நோக்கி விரைந்தது.



லிங்கன் பேசினார்

எஸ்.டி.காசிராஜன்

1863-ம் ஆண்டு. கறுப்பு நிறத்தவர்களுக்கு, குடிமக்களுக்கு உரிய உரிமை அளிப்பதா என்ற பிரச்னையில் அமெரிக்க உள்நாட்டு யுத்தம் உச்ச கட்டத்தை அடைந்துகொண்டிருந்த நேரம். அப்போது ஒரு நாள்.

கெட்டிஸ்பர்க் என்ற இடத்தில் மத்திய அரசாங்கப் படை வெற்றி பெற்றது. போரின் போக்கில் திருப்பு மையமாக இருந்த வெற்றி அது. எனவே அந்த வெற்றிக்காக விழாக் கொண்டாட எண்ணினர். வெற்றி பெற்ற ஸ்தலத்தை வீரமரணம் எய்தியவர்களின் நினைவுக்குப் படைத்து அஞ்சலி செலுத்த வேண்டும் என்பது விழாவின் முக்கிய நிகழ்ச்சி.

ஜனாதிபதி என்ற முறையில் ஆபிரகாம் லிங்கன்தான் அந்த நிகழ்ச்சியை நடத்த வேண்டும் என்று கவர்னர்கள் தீர்மானித்தார்கள். உடனே ஜனாதிபதிக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. மாவீரர் லிங்கனுக்கு, அவருக்குக் கீழ் இருந்த கவர்னர்களே பணிவும் மரியாதையும் காட்டவில்லை. அகந்தையும் அழமற்ற பணிவும் அக்கடிதத்துக்குச் சரித்திரத்தில் ஒரு தனித்துவம் கொடுக்கின்றன. கடிதம் இதுதான்:

''மிக விசேஷமாகவும் பிரம்மாண்டமாக இருக்கும் இந்த விழாவில் தாங்களும் பங்கு கொள்ள வேண்டும் என்று பல மாநிலங்களின் கவர்னர்கள் விரும்பியதற்கிணங்க நான் தங்களை அழைக்கிறேன். நினைவுப் பேருரை ஆற்றி முடிந்த பின்பு தாங்கள் இந்த நாட்டின் முதல் மகன் என்ற முறையில் இந்தப் புனித இடத்தை வீரர்களின் நினைவுக் காணிக்கையாகப் படைக்கும்போது, சில பொருத்தமான வார்த்தைகளைக் கூற வேண்டும் என்பது எங்கள் விருப்பம்.''

இக்கடிதத்தில் எழுதப்பட்ட வார்த்தைகள் கொஞ்சம். ஆனால் எழுதப்படாமல் தொக்கி நிற்கும் வாசகங்கள் ஏராளம்.

''ஜனாதிபதி அவர்களே, இது மாநிலங்களின் அலுவல். இதில் தங்களுக்கு அதிகப் பங்கு கிடையாது. என்றபோதிலும் அழைக்கிறோம் — ஒரு முறைக்காக — பேருக்காக அழைக்கிறோம்.

''நினைவுப் பேருரைதான் இந்த விழாவில் ஜீவனான அம்சம். அதுதான் உருவம். உங்கள் பேச்சு வெறும் உடை. நாங்கள் உங்களைக் கூப்பிட்டிருப்பது வெறும் சம்பிரதாயத்துக்காக. எனவே பொருத்தமான வார்த்தைகளைக் கூறுவதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். கதை சொல்ல ஆரம்பித்து விடாதீர்கள்.''

லிங்கன் அழைப்பை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார். அந்த நாளும் வந்தது.

நினைவுப் பேருரையாற்ற வந்திருந்த திரு எவரெட் அந்நாளில் அமெரிக்காவில் தலைசிறந்த பேச்சாளர். அன்றைய நிகழ்ச்சியில் அவர் பேச்சுக்குத்தான் முதலிடம். அவர் இரண்டு மணி நேரம் முழங்கினார். கூடியிருந்தவர்கள் சொல்லுக்குச் சொல் கரகோஷம் செய்தார்கள்.

பின்பு லிங்கன் எழுந்தார். கவர்ச்சியோ, கம்பீரமோ இல்லாத நெடிய உருவம். தம் கோட் பாக்கெட்டில் கையை விட்டு ஒரு தனிக் காகிதத்தைத் தேடி எடுத்தார். விரித்தார்; படித்தார்.

அப்போது அவர் படித்ததுதான் உலகம் புகழும் கெட்டிஸ்பர்க் பேச்சு. குடியாட்சிக்கு மட்டுமின்றி, மனித உரிமைகளுக்கும் மனித தர்மங்களுக்கும் உயிர் வடிவம் கொடுத்த உரை அது.

அந்த உரை நிகழ்த்தும்போது லிங்கன் சொன்னார்: ''நாம் இன்று இங்கே பேசியதை உலகம் மறந்துவிடும். ஆனால் நாம் இன்று இங்கே என்ன செய்கிறோம் அல்லது எதிர் காலத்தில் என்ன செய்வதாகச் சபதம் எடுத்துக் கொள்கிறோம் என்பதை மட்டும் உலகம் என்றென்றும் நினைவில் வைத்திருக்கும்.''

இது அவர் சொன்னது. ஆனால் உண்மையில் நடந்ததென்ன? உலகம் இன்று எதை நினைத்துக் கொண்டிருக்கிறது? கெட்டிஸ்பர்க்கில் நடந்த அந்த அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியையா? அல்ல... அல்ல. லிங்கன் பேசிய பேச்சைத்தான் உலகம் நினைவில் பதித்துக் கொண்டிருக்கிறது. கோடானுகோடி மக்களிடையில் குடியாட்சி விளக்கம் சொல்லப் புகும் எவரும், லிங்கன் கெட்டிஸ்பர்க்கில் சொன்னதை — ''மக்களுக்காக, மக்களால் நடத்தப்படும் மக்களுடைய அரசாங்கம்'' என்ற மணிவாசகத்தைக் குறிப்பிடாமல் இருப்பதில்லை.

இதற்கு லிங்கன் பேச எடுத்துக்கொண்ட நேரம் இரண்டே நிமிடங்கள்.

முதல் பேருரை நிகழ்த்திய எவரெட், ''நீங்கள் இரண்டு நிமிஷத்தில் எதைச் சொன்னீர்களோ, அதை நான் இரண்டு மணி நேரம் முயன்று சொல்லிவிட்டதாகப் பெருமை பாராட்டிக் கொள்ள முடியுமானால் பெரு மகிழ்ச்சியடைவேன்'' என்று லிங்கன் பேசியானதும் மனம் நெகிழ்ந்து கூறினார்!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.

உங்கள் குழந்தையின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு,

அமுல் ஒரு சிறந்த சமவிகித உணவு.

அமுலில் நிறைந்துள்ள சத்துக்கள்: புரோடீன் – உடலில் உள்ள திசுக்களின் வளர்ச்சிக்கு. கார்போ ஹைட்ரேட் மற்றும் கொழுப்பு – சக்திக்கு, எடை கூடுவதற்கு. கேல்ஷியம் மற்றும் பாஸ்பரஸ் – பற்களின் உறுதிக்கு, எலும்புகளின் வலிமைக்கு. இரும்பு – தூய்மையான இரத்தத்திற்கு. இரத்தச் சோகையைத் தடுக்க. வைட்டமின் ஏ – பழுதற்ற பார்வைக்கு. தோலின் மிருதுத்தன்மைக்கு. வைட்டமின் பி1 – நரம்புகள் உறுதியுடனிருக்க. மார்புத் தசைகளைப் பலப்படுத்த. வைட்டமின் பி2 – வாய் தூய்மையுடன் ஆரோக்கியமாக இருக்க. வைட்டமின் பி6 – தசைநார்கள் இளைப்பாற்றிக்கொள்ள. வைட்டமின் சி – தொத்து நோய் வராமல் தடுக்க, சொறி சிரங்கு பிடிக்காமலிருக்க. வைட்டமின் டி – பக்கவாத ரோகம் வராமல் தடுக்க, எலும்புகளும் பற்களும் உறுதியுடன் ஆரோக்கியமாக இருக்க.

நியசினமைடு – ஜீரணத்திற்கு. உங்கள் குழந்தைக்கு மிகச் சிறந்தது.



ASP/ABF-40 TAM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

